709

# தமிழ் இலக்கியத் திரட்டு

1955
MADRAS

நான்காம் படிவம்

சிறப்புத் தொகுதி

709
3-55

VB
0.31 (Q)
N55
133672

கோபால்பிள்ளை
பதிப்பாளர்
ரி
2/27, பிராட்வே
சென்னை - 1

# தமிழ் இலக்கியத் திரட்டு

## நான்காம் படிவம்—சிறப்புத் தொகுதி

[புதிய பாடத்திட்டப்படி அமைந்தது]

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1955
MADRAS

தொகுப்பாளர் :
P. துரைக்கண்ணு முதலியார், M.A., L.T.,
தலைவர்,
டாக்டர் அழகப்பா ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி,
அழகப்பா நகர், காரைக்குடி.

வித்துவான் S. V. வரதராஜ ஐயங்கார், M.A., M.O.L.,
தமிழ்த்துறைத் தலைவர்,
A. M. ஜெயின் கல்லூரி, சென்னை.

T. G. கோபால் பிள்ளை
பதிப்பாளர்

தெப்பக்குளம்
திருச்சிராப்பள்ளி

2/27, பிராட்வே
ஜி. டி., சென்னை

1955

[விலை ரூ. 0–12–0

பதிப்புரிமை]

முதற் பதிப்பு—மே, 1949
இரண்டாம் பதிப்பு—ஜூலை, 1949
மூன்றாம் (திருந்திய) பதிப்பு—நவம்பர், 1954
மறு பதிப்பு (1)—1955

73
O31
N55

APPROVED FOR CLASS USE
BY THE MADRAS TEXT-BOOK COMMITTEE
[Supplement to Part I-B of the
Fort St. George Gazette, dated 4-5-1955, Page 26]

133622

Kabeer Printing Works, Madras (2933)

# முகவுரை

சென்னை இராச்சிய அரசியல் கல்வித் துறையாளர் 1952-ல் வெளியிட்டுள்ள புதிய பாடத் திட்டத்தை யொட்டி உயர்நிலைப் பள்ளிகளில் நான்கு, ஐந்தாம் படிவங் (Fourth and Fifth forms) களில் பயிலும் மாணவர்க்கு ஏற்கும்படி 'தமிழ் இலக்கியத் திரட்டு' என்னும் புத்தகங்களின் பொது, சிறப்பு ஆகிய தொகுதிகள் இரண்டையும் தொகுத்துள்ளோம்.

இப் புத்தகங்களில் பாடத் திட்டத்தில் வகுத்துத் தரப் பெற்றுள்ள பிரிவுகளையும் அளவையும் முற்றும் தழுவிச் செய்யுட் பகுதியில் இனிய அரிய பாடல்களையும், உரைநடைப் பகுதியில் தமிழ் நாட்டுப் பேரறிஞர்கள் எழுதி வெளியிட்டுள்ள அரிய கட்டுரைகளையும் தேர்ந்து சேர்த்திருக்கின்றோம். இவைகளைத் தேர்ந்துகொள்வதில் மாணவர் சுவை, நோக்கம், பண்பாடுகளை உணர்ந்து, அவைகளுக்குப் பொருத்தமான தக்க பகுதிகளையே தொகுத்துச் சேர்த்துள்ளோம். செய்யுட்களும் உரைநடையி லுள்ள கட்டுரைகளும் பொதுப் பகுதியைக் காட்டிலும் சிறப்புப் பகுதியில் சற்று உயர்ந்தனவாகவே தேர்ந்து அமைக்கப்பட் டுள்ளன.

மாணவர்க்குத் தமிழ் மொழியில் தேர்ச்சி உண்டாகும்படி செய்வதே பாடத் திட்டத்தின் சீரிய நோக்கமாதலால், செய்யுள் உரைநடையாகிய இருபகுதிகளிலும் ஒவ்வொரு பிரிவின் முடி விலும் குறிப்புரை, பயிற்சி, வினாக்கள், கட்டுரையாக்கம் என்பன சேர்க்கப்பெற்றுள்ளன. இவற்றால் மாணவர்க்குத் தாய்மொழியில் தேர்ச்சி ஏற்படுவதுடன், கட்டுரை எழுதும் வன்மையும் அமைதல் கூடும்.

இவைகளைத் தமிழாசிரியர்கள் ஆதரித்துப் பாட புத்தகமாக ஏற்படுத்தியுதவுமாறு வேண்டுகின்றோம்.

ஆசிரியர்கள்.

# நன்றியுரை

## உரைநடைப் பகுதியில்

இசையின்பம், எனது இலங்கைச் செலவு, பண்டைத் தமிழர் வாணிகம், சிறையிருந்த செல்வி, ஒரு நடிக நாடகம் என்னும் கட்டுரைகளைச் சேர்த்துக்கொள்ள அனுமதியளித்த அவற்றின் உரிமையாளர்கட்கும், பரணர் என்ற கட்டுரையைச் சேர்த்து வெளியிட அனுமதி உதவிய சென்னை அகில இந்திய ரேடியோ நிலையத்தார்க்கும் எமது நன்றியுரியதாகும்.

ஆசிரியர்கள்

# உள்ளுறை

## செய்யுட் பகுதி


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| I | கடவுள் வாழ்த்து | | |
| | 1. வில்லிபாரதம் | ... | 1 |
| | 2. திருவருட்பா | ... | 2 |
| II | நீதிக் கோவை | | |
| | 1. திருக்குறள் | ... | 3 |
| | 2. சிறுபஞ்ச மூலம் | ... | 6 |
| | 3. ஆசாரக்கோவை | ... | 9 |
| III | தொடர்நிலைச் செய்யுள் | | |
| | 1. மணிமேகலை | ... | 11 |
| | 2. சீகாளத்திப் புராணம் | ... | 15 |
| | 3. வில்லிபாரதம் | ... | 26 |
| IV | சிறுநூற் கோவை | | |
| | 1. அழகர் கலம்பகம் | ... | 35 |
| | 2. சோணசைல மாலை | ... | 35 |
| | 3. திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ் | ... | 36 |
| | 4. குற்றாலக் குறவஞ்சி | ... | 37 |
| | 5. திருவேங்கட சதகம் | ... | 37 |
| V | பல்சுவைப் பகுதி | | |
| | 1. புறநானூறு | ... | 40 |
| | 2. குறுந்தொகை | ... | 40 |

## உரைநடைப் பகுதி

| எண | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | இசை இன்பம் —டாக்டர். உ. வே. சாமிநாத ஐயர் | ... | 42 |
| 2. | எனது இலங்கைச் செலவு —திரு. வி. கலியாண சுந்தர முதலியார் | ... | 50 |
| 3. | பண்டைத் தமிழர் வாணிகம் —வித்துவான் வே. வேங்கடராஜுலு ரெட்டியார் | ... | 58 |
| 4. | பரணர் —சென்னை, A. M. ஜெயின் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர், எஸ். வி. வரதராஜ ஐயங்கார், எம். ஏ., எம். ஓ. எல். | ... | 65 |
| 5. | சிறையிருந்த செல்வி —சென்னை, பல்கலைக்கழக ஆராய்ச்சித்துறைத் தலைவர், திரு. ஆர். பி. சேதுப்பிள்ளை, பி. ஏ., பி. எல். | ... | 73 |
| 6. | ஒரு நடிக நாடகம் —சென்னை, A. M. ஜெயின் கல்லூரி ஆங்கில விரிவுரையாளர், திரு. கெ. எஸ். நாகராசன், M.A. | ... | 78 |

# தமிழ் இலக்கியத் திரட்டு

## நான்காம் படிவம் – சிறப்பு

## செய்யுட் பகுதி

## I. கடவுள் வாழ்த்து

கடவுள் வாழ்த்துப் பாடிய பின்னரே நூல்பாடத் தொடங்குவது முன்னோர் வழக்கம். அதனால், இந்தப் பாடப்புத்தகத்திலும் கடவுள் வாழ்த்து முதலிடம் பெற்றுள்ளது. 'கடவுள்' என்னும் சொல்லுக்குக் 'கடத்தல்' என்பது பொருள். மனம் மொழி மெய் ஆகிய மூன்றையும் கடந்து நிற்பது கடவுள். ஒவ்வொரு சமயத்தாரும் கடவுளை வேறு வேறு பெயரிட்டு அழைத்தாலும் கடவுள் ஒன்றே என்பதை நாம் உணர்தல் வேண்டும். இந்த உணர்ச்சியுடன் கடவுள் வாழ்த்தாக ஆன்றோர் பாடியவற்றுள் இரண்டு பாடல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

### 1. வில்லி பாரதம்

பின்வரும் பாடல் வில்லிபுத்தூராழ்வார் இயற்றிய பாரதத்திலிருந்து எடுக்கப்பெற்றது. இவர் திருமுனைப்பாடி நாட்டிலுள்ள சனியூரில் தோன்றியவர்; வைணவ சமயத்தினர்; வரபதியாட்கொண்டான் என்னும் சிற்றரசனால் ஆதரிக்கப்பெற்று, அவன் விருப்பிற்கிணங்கத் தமிழில் பாரதம் இயற்றினர். இவர் காலம் 14-ஆம் நூற்றாண்டு.

வேதமும் வேதம் விளம்பு மெய்ப் பொருளும்
அப்பொருள் விதங்களும், பஞ்ச
பூதமும் புலனும் புலன்களின் பயனும்
அப்பயன் பொலிவுற நுகரும்
ஞாதமும் உலகம் படைத்தளித் தழித்து
ஞானமாய் அகிலமு நிறைவுற்(று)
ஆதியும் நடுவும் முடிவுமாய் நின்ற
ஆதியான் அடியிணை பணிவாம்.

## 2. திருவருட்பா

'திருவருட்பா' என்பதற்குக் கடவுளின் திருவருளால் தோன்றிய பாடல் என்பது பொருள். பின்வரும் பாடல் 'திருவருட்பா' என்னும் நூலிலிருந்து எடுக்கப் பெற்றது. இதனை இயற்றியவர் இராமலிங்க சுவாமிகள் ஆவர். இவரும் சோழ நாட்டினரே. இவர் சிதம்பரத்திற்கு அருகிலுள்ள மருதூரில் தோன்றியவர். சைவ சமயத்தவ ராயினும் பொதுநோக்கு உடையவர். இவர் பாடல்கள் எளிமையும் இனிமையும் உருக்கமும் வாய்ந்தவை. இவர் விளங்கிய காலம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதி.

### பிள்ளைச் சிறு விண்ணப்பம்

கருணையே வடிவாய்ப் பிறர்களுக் கடுத்த
கடுந்துயர் அச்சமா திகளைத்
தருணநின் அருளால் தவிர்த்தவர்க் கின்பம்
தரவும்,வன் புலைகொலை இரண்டும்
ஒருவிய நெறியில் உலகெலாம் நடக்க
உஞற்றவும், அம்பலந் தனிலே
மருவிய புகழை வழுத்தவும், நின்னை
வாழ்த்தவும் இச்சைகாண், எந்தாய் !

### குறிப்புரை

1. விளம்பும் - சொல்லும். பஞ்சபூதம் - நிலம், நீர், தீ, விசும்பு, காற்று என்னும் ஐம்பெரும் பூதங்கள். புலன் - மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன (புலம் - புலன் : போலி). ஞாதம் - அறியப்படும் தன்மை. அகிலம் - எல்லாம். அளித்து, அழித்து - பொருள் வேறுபாடு மாணவர் அறியத்தக்கது.

2. ஆதிகளை - முதலியவைகளை. தருணம் - சமயம் (அவை உண்டாகும் கணத்திலேயே). ஒருவிய - நீக்கிய. உஞற்றவும் - செய்யவும். மருவிய - பொருந்திய. வழுத்த - துதிக்க.

### பயிற்சி

1. பொருள் கூறுக :—விளம்பும், பொலிவு, நுகரும், ஞாதம், தவிர்த்து, புலை.
2. வேதம், ஞானம், ஆதி, தருணம்—நேரான தமிழ்ச்சொல் தருக.
3. பிரித்துக் காட்டுக :—உலகெலாம், பொலிவுற, படைத்தளித் தழித்து, நிறைவுற்று.

### வினாக்கள்

1. வில்லிபுத்தூரார் கடவுளின் தன்மைகளை எவ்வாறு கூறுகின்றார்?
2. பஞ்சபூதம், ஐம்புலன் எவை ?
3. கடவுள் புரியும் முத்தொழில்கள் எவை ?
4. இராமலிங்க அடிகள் எவற்றில் விருப்பங் கொண்டுள்ளார் ?
5. எந்த இரண்டு கொடுந் தொழிலும் நீக்கப்படவேண்டும் ?

# II. நீதிக் கோவை

## 1. திருக்குறள்

இதனை இயற்றிய திருவள்ளுவர் என்பவர் வள்ளுவர் என்னும் பழந் தமிழ்க் குடியினர். திருக்குறள் என்னும் பெரு நூலைச் செய்து பெரும்புகழ் பெற்றமையால், அக்குடிப் பெயரே இவர்க்குச் சிறப்பாக வழங்கலாயிற்று. வள்ளுவக் குடியினர் படையெழுச்சி, திருவிழா, திருமணம் ஆகிய விசேட காலங் களில் யானைமேல் முரசினையேற்றி முழக்கி, அரசன் ஆணையை ஊரார்க்குத் தெரிவிக்கும் தொழிலினர் என்பர். திருக்குறளுக்கு உரை இயற்றியோர் பதின்மர். அவர்களுள் பரிமேலழகர் இயற்றிய உரை இந்நாளில் சிறப்பாக வழங்கி வருகின்றது. திருவள்ளுவர் வாழ்ந்திருந்த காலம் கடைச் சங்க காலமாகும்.

திருக்குறளிலிருந்து இல்வாழ்க்கை, வாழ்க்கைத்துணை நலம் என்னும் இரண்டு அதிகாரங்கள் இங்குத் தேர்ந்து கொள்ளப் பெற்றன. அவை மாணவர்க்கு மிகவும் இன்றியமையாதவை.

### இல்வாழ்க்கை

1. இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றி னின்ற துணை.
2. துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கு மிறந்தார்க்கு
மில்வாழ்வா னென்பான் றுணை.
3. தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க லானென்றாங்
கைம்புலத்தா றோம்ப றலை.
4. பழியஞ்சிப் பாத்தூ ணுடைத்தாயின் வாழ்க்கை
வழியஞ்ச லெஞ்ஞான்று மில்.
5. அன்பு மறனு முடைத்தாயி னில்வாழ்க்கை
பண்பும் பயனு மது.
3. அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன்.
7. இயல்பினா னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான்
முயல்வாரு ளெல்லாந் தலை.
8. ஆற்றி னொழுக்கி யறனிழுக்கா வில்வாழ்க்கை
நோற்பாரி னோன்மை யுடைத்து.

9. அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை யஃதும்
பிறன் பழிப்ப தில்லாயி னன்று.
10. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப் படும்.

### வாழ்க்கைத்துணை நலம்

1. மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.
2. மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை
யெனைமாட்சித் தாயினு மில்.
3. இல்லதெ னில்லவண் மாண்பானா லுள்ளதென்
னில்லவண் மாணாக் கடை.
4. பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின்.
5. தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை.
6. தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.
7. சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை.
8. பெற்றாற் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ் சிறப்புப்
புத்தேளிர் வாழு முலகு.
9. புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை யிகழ்வார்முன்
னேறுபோற் பீடு நடை.
10. மங்கல மென்ப மனைமாட்சி மற்றத
னன்கலம் நன்மக்கட் பேறு.

### குறிப்புரை

**இல்வாழ்க்கை:** இல்லாளோடு கூடி வாழும் வாழ்க்கை. அதன் சிறப்பைக் கூறுவது இந்த அதிகாரம்.

1. இயல்புடைய மூவர் - பிரம்மசாரி, வானப்பிரத்தன், சந்நியாசி. நல்லாறு - நல்லொழுக்கம்.

2. துறந்தார் - கைவிடப்பட்டவர்; கதியற்றவர். துவ்வாதவர் - வறுமையுற்றவர். இறந்தார் - பிதுருக்கள்.

3. தென்புலத்தார் - பிதிரர். தெய்வம் - தேவர். விருந்து - விருந்

தினர். ஒக்கல் - சுற்றத்தார். இல்வாழ்வான் தான் சம்பாதித்த பொருளை ஆறு கூருக்கி, ஒன்றை அரசனுக்குச் செலுத்தி, மற்றவற்றை ஐந்துவகையினருக்கும் பயன்படுத்த வேண்டும் என அறிக.

4. பழி - பாவம். பாத்து - (மேற்குறள்களில் சொல்லப்பட்டவர்க்காகப்) பிரித்து. எஞ்சல் - அழிதல்.

5. இல்வாழ்க்கைக்கு மனைவிமேல் அன்பு குணமும், பிறர்க்குப் பகுத்து உண்பது பயனும் ஆகும்.

6. அறத்து ஆறு - தருமவழி. புறத்து ஆறு - இல்வாழ்க்கைக்குப் புறம்பான வானப்பிரத்த நிலை. எவன் - யாது.

7. தலை - மிக்கவன், நெறி தவருத இல்வாழ்க்கையுடையவன் சிறந்த வாழ்க்கை யுடையவனுவான்.

8. ஆற்றின் ஒழுக்கி - தவஞ் செய்வாரைத் தத்தம் நெறியில் நடக்க உதவி. அறன் இழுக்கா - தானும் தனது ஒழுக்கத்தினின்றும் தவருத.

9. அறன் எனப்பட்டது - அறம் என்று சிறப்பித்துச் சொல்லப் பட்டது. அஃது - துறவறம்.

10. வையம் - பூமி. வாழ்வு ஆங்கு - வாழ்வதற்கு உரிய வகை.

**வாழ்க்கைத் துணை நலம் :** இல்வாழ்க்கைத் துணைவியாகிய இல்லாளின் நன்மை.

1. மனை தக்க - இல்வாழ்க்கைக்குத் தகுந்த. மாண்பு - நற்குண நற்செய்கைகள். வளம் தக்காள் - வருவாய்க்குத் தக்கவாறு வாழ்க்கை நடத்துபவள்.

2. மாட்சி - நற்குண நற்செயல்கள். எனை மாட்சித்து - செல்வத்தால் எவ்வளவு சிறந்திருந்தாலும்.

3. மாண்பு - நற்குண நற்செயல்கள். மாணுக்கடை - நற்குண நற்செயல் இல்லாதவள்.

4. கற்புடையவளைப்போல ஒருவனுக்கு அறம் பொருள் இன்பங்கள் அடைவதற்கு வேறு உற்ற துணை இல்லை என்பது கருத்து.

5. கொழுநன் - கணவன். தொழுது எழுவாள் - தொழுதுகொண்டு தூக்கத்தினின்று எழுந்திருப்பவள்.

6. தன் காத்து - தன் கற்பினைக் காத்து. பேணி - உண்டி முதலியவற்ருல் உபசரித்து. தகை சான்ற சொல் - இருவரிடமும் புகழ் நிலைநிற்கச் செய்வதான சொல். சோர்வு - தளர்ச்சி ; தொழிற் பெயர்.

7. சிறை காப்பு - சிறை வைப்பதுபோல் வைத்துக் காப்பாற்றுவது. எவன் செய்யும் - என்ன பயனைத்தரும். நிறை - மனத்தைக் கற்பு வழியில் நிற்கச் செய்தல்.

8. பெண்டிர் - மனைவிமார். புத்தேளிர் - தேவர்.

9. புகழ் புரிந்த இல் - புகழை விரும்பிய மனைவி. இகழ்வார் முன் - பழித்துப் பேசும் பகைவருக்கு முன்னே. ஏறு - ஆண் சிங்கம். பீடு - பெருமை.

10. மங்கலம் - நன்மை. மனைமாட்சி - மனையாளின் நற்குண நற்செயல்கள்.

### பயிற்சி

1. பொருள் கூறுக :—துவ்வாதவர், ஒக்கல், வையம், கொழுநன், பீடு, ஏறு.

2. பிரித்துக்காட்டுக :—விருந்தொக்கல், வானுறையும், கற்பென்னும், சொற்காத்து, சோர்விலாள்.

3. இப்பகுதியிலிருந்து தொழிற்பெயர், வினையெச்சம், பெயரெச்சம், ஆகுபெயர் இவைகளுக்கு ஒவ்வோர் உதாரணந் தருக.

### வினாக்கள்

1. 'இயல்புடைய மூவர்'—யாவர்?
2. இல்வாழ்வான் எவருக்கு உற்ற துணையாவான்?
3. 'ஐம்புலத்தாறு'—என்பது யார் யாரைக் குறிக்கும்? அவ்வாறு கூறியதன் கருத்து என்ன?
4. இல்வாழ்க்கை எப்பொழுது பயனுடையதாகும்?
5. இல்வாழ்க்கைக்குப் பண்பு எது? பயன் யாது?
6. அறத்தாறு, புறத்தாறு—பொருளை விளக்குக.
7. துறவறம் எப்பொழுது நன்மையுடையதாகும்?
8. வாழ்க்கைத்துணை எப்படிப்பட்டவளாக இருக்க வேண்டும்?
9. இல்லாளின் நற்குண நற்செயல்களே இல்வாழ்க்கையின் சிறப்பிற்குக் காரணம் என்பது எவ்வாறு விளக்கப்படுகிறது?
10. கற்பின் சிறப்பை வள்ளுவர் எப்படி வலியுறுத்துகின்றார்?
11. தகை சான்ற சொல்—தெளிவான பொருள் தருக.
12. பகைவன்முன் தலைநிமிர்ந்து நடக்கும் தன்மை எவருக்கு இராது?

## 2. சிறுபஞ்சமூலம்

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் இதுவும் ஒன்று. செவ்வியம், சித்திரமூலம், கண்டுபறங்கி, பேரரத்தை, சுக்கு ஆகிய ஐந்து மருந்துப் பொருள்களால் ஆகிய கஷாயம் உடல் நோயைப் போக்கி நன்மைப் பயப்பது போல, இந்நூலின் ஒவ்வொரு பாட்டிலும் வரும் ஐந்தைந்து விஷயமும் மனத்திற்கு இதம் செய்வன என்னும் காரணத்தால் இந்நூல் சிறுபஞ்சமூலம் எனப் பெயர் பெற்றது. இதனை இயற்றியவர் காரியாசான் என்பவர்.

### கற்றவர்—கல்லாதவர்

1. தேவரே கற்றவர் கல்லாதார் தேருங்கால்
பூதரே முன்பொருள் செய்யாதார்—ஆதரே
துன்பமி லேம்பண்டு யாமே வனப்புடையேம்
என்பார் இருகால் எருது.

### ஒருவற்கு ஒன்றே எளிது

2. வான்குருவிக் கூடரக்கு வால்உலண்டு கோல்தருதல்
தேன்புரிந் தியார்க்கும் செயலாகா—தாம்புரீஇ
வல்லவர் வாய்ப்பன என்னுர் ஒரோரொருவர்க்(கு)
ஒல்காதோர் ஒன்று படும்.

### பெண்டிர் சிறப்பு

3. வருவாய்க்குத் தக்க வழக்கறிந்து சுற்றம்
வெருவாமை வீழ்ந்து விருந்தோம்பித்—திருவாக்கும்
தெய்வத்தை எஞ்ஞான்றும் தேற்ற வழிபாடு
செய்வதே பெண்டிர் சிறப்பு.

### கடமை உணர்வு

4. தான்பிறந்த இல்நினைந்து தன்னைக் கடைப்பிடித்துத்
தான்பிற ரால்கருதற் பாடுணர்ந்து—தான்பிறரால்
சாவஎன வாழான் சான்றேரால் பல்யாண்டும்
வாழ்கஎன வாழ்தல் நன்று.

### அறிவுடையார்—அறிவில்லாதவர்

5. பூத்தாலும் காயா மரமும்உள ; நன்றறியார்
மூத்தாலும் மூவார்நூல் தேற்றுதார்—பாத்திப்
புதைத்தாலும் நாருத வித்துள ; பேதைக்(கு)
உரைத்தாலும் செல்லா துணர்வு.

### குறிப்புரை

1. தேருங்கால் - ஆராயும்போது. பூதர் - பூத பைசாசங்கள். ஆதர் - அறிவில்லாதவர், மூடர். என்பார் - என்று தற்பெருமை பேசுவோர். விலங்காகிய எருதுக்கும் இவர்க்கும் வேறுபாடு தோன்ற ‘ இருகால் எருது ’ என்றுர்.

2. வான்குருவி - தூக்கணங்குருவி. அரக்கு - செம்மெழுகு. வால் - வெண்மையான. உலண்டு - புழுக்கள் நூற்கும் நூல். கோல் தருதல் - கோல் புழுவால் செய்யும் கூடு. வாய்ப்பன - செய்ய முடிவன. ஒல்காது - குறைவுபடாமல்.

3. வருவாய் - பொருள் வரும் வழி. வழக்கு - செலவிடும் வழி. வீழ்ந்து - விரும்பித் தழுவி. சுற்றம் -, உறவினர்: சுற்று - பகுதி. வீழ்த்து - வீழ் - பகுதி.

4. இல் - குடிச்சிறப்பு. தன்னை - தன்கொள்கையை. கருதற்பாடு - மதிக்கப்படுதல். வாழான் - வாழாதவனுய்.

5. மூத்தாலும் - வயதால் முதியவராயினும். மூவார் - குணஞ் செயல்களால் முதியோராகார்: மூ - பகுதி. நாருத - முளைக்காத: நாறு - பகுதி.

## பயிற்சி

1. பொருள் கூறுக: ஆதர், உலண்டு, சுற்றம், வீழ்ந்து, வித்து.
2. எதிர்ப்பதம் தருக: கற்றவர், துன்பம், சிறப்பு, வாழான், சான்றோர், வாழ்க.
3. பிரித்துக் காட்டுக: துன்பமிலேம், செயலாகா, பாடுணர்ந்து, நன்றறியார்.
4. பகுதி கூறுக: செயல், சுற்றம், வீழ்ந்து, நாருத.

## வினக்கள்

1. 'சிறு பஞ்சமூலம்' என்னும் பெயர்க் காரணத்தை விளக்குக.
2. 'தேவரே கற்றவர்' என்ற கருத்தமைந்த திருக்குறள் யாது?
3. 'இருகால் எருது' என இகழப்படுவார் யார்?
4. யாருக்கும் செயலாகாதவை எவை?
5. பெண்டிர்க்குச் சிறப்பான செயல்கள் யாவை?
6. மாதர் தம் கடமையை உணர்ந்து புரியத்தக்கவை எவை?
7. அறிவுடையார் அறிவிலார் தன்மைகளை விளக்குக.
8. 'பூத்தாலும் காயா மரமுமுள'—இதனல் நீவிர் அறிவதென்ன?

## கட்டுரையாக்கம்

1. பேதைக்கு உரைத்தாலும் செல்லாதுணர்வு—இதை விளக்கிப் பத்து வரியில் வரைக.

2. கடமை உணர்வு—என்ற செய்யுளின் பொருளைக்கொண்டு காந்தியடிகளின் வாழ்க்கை வரலாற்றை விளக்கிப் பதினைந்து வரியில் எழுதுக.

## 3. ஆசாரக்கோவை

நல்லொழுக்கத்திற்கு அடிப்படையான செயல்களையெல்லாம் திரட்டி ஒழுங்காக எடுத்துக்கூறுவதால் இந்நூல் இப்பெயர் பெற்றது. இதுவும் பதினெண் கீழ்க்கணக்கைச் சேர்ந்ததே. இதனை ஆக்கியோர், பெருவாயின் முள்ளியார் என்பவர். இவர் காலமும் கடைச் சங்க காலத்தை ஒட்டியதே யாகும்.

### காலைக்கடமைகள்

1. வைகறை யாமம் துயிலெழுந்து, தான்செய்யும்
நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து, வாய்வதில்
தந்தையும் தாயும் தொழுதெழுக என்பதே
முந்தையோர் கண்ட முறை.

### நீராடும் நேர்மை

2. நீராடும் போழ்தில் நெறிப்பட்டார் எஞ்ஞான்றும்
நீந்தார், உமியார், திளையார், விளையாடார்
காய்ந்த தெனினும் தலைஒழிந் தாடாரே
ஆய்ந்த அறிவி னவர்.

### மாலையில் செய்யத்தகாதவை

3. அந்திப்பொழுது கிடவார் நடவாரே
உண்ணூர் வெகுளார் விளக்கிகழார் முன்அந்தி
அல்குண்(டு) அடங்கல் வழி.

### எப்போதும் செய்யத்தகாதவை

4. சுடரிடைப் போகார் சுவர்மேல் உமியார்
இடர்எனினும் மாசுணி கீழ்தம் மேற்கொள்ளார்
படைவரினும் ஆடை வளியுறைப்பப் போகார்
பலரிடை ஆடை உதிராரே என்றும்
கடனறி காட் சியவர்.

### தத்தமக்குத் தக்கன செய்தல்

5. உடைநடை சொற்சோர்வு வைதல் இந்நான்கும்
நிலைமைக்கும், கல்விக்கும், ஆண்மைக்கும் தத்தம்
குடிமைக்கும் தக்க செயல்.

## குறிப்புரை

1. வைகறை - விடியல். ஒண்பொருள் - நல்வழியில் ஈட்டிய பொருள். வாய்வது - பொருந்துவது.

2. நெறிப்பட்டார் - நல்லொழுக்கம் உடையவர். காய்ந்தது - காய்ச்சலென்னும் நோயைக் கொண்டது.

3. கிடவார் - தூங்கமாட்டார். அல்கு - சுருக்கமாக. உண்டு - உண வருந்தி. அடங்கல் - துயில் கொள்ளல் : தொழிற்பெயர் : அடங்கு - பகுதி.

4. சுடர்இடை - விளக்கிற்கும் அதன்முன் இருப்பவர்க்கும் இடையிலே. மாசுணி - அழுக்கேறிய ஆடை (மாசு + உணி). காட்சி - அறிவு : காண் - பகுதி. போகார் - போ : பகுதி.

5. நடை - நடத்தை. சொல் சோர்வு - பேசுதலில் தளர்ச்சி. குடிமை - குடிப்பிறப்பு.

## பயிற்சி

1. பொருள் உரைக்க : அல்கு, சுடர், மாசுணி, காட்சி, நடை, இடர்.

2. பிரித்துக் காட்டுக : துயிலெழுந்து, விளக்கிகழார், அல்குண்டு, மாசுணி.

3. பகுதி தருக : காட்சி, அடங்கல், போகார்.

4. துயில், தந்தை, அடங்கல், சோர்வு, வைதல், நான்கு, கல்வி, ஆண்மை—இவை என்ன பெயர் ?

## வினாக்கள்

1. ஆசாரக்கோவை என்று பெயர் வழங்கக் காரணம் என்ன ?
2. காலைக் கடன்களைப் பற்றி நீவிர் அறிவதென்ன ?
3. நீராடும்போது கைக்கொள்ளத் தக்க முறைகள் எவை ?
4. மாலையில் செய்யத்தகாதவை யாவை ?
5. 'கடனறி காட்சியவர்' எவ்வாறு நடத்தல் வேண்டும் ?
6. தத்தமக்குத் தக்க செயல் என்பது பற்றி நீவிர் அறிவது யாது ?

## கட்டுரையாக்கம்

'நல்லொழுக்க விதிகள்' என்ற தலைப்பில் இப்பாடல்களிலிருந்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எளிய நடையில் எழுதுக.

# III. தொடர்நிலைச் செய்யுள்

## 1. மணிமேகலை

### பாத்திரமரபு கூறிய காதை

இது தமிழிலுள்ள பழைய பெருங் காப்பியம் ஐந்தில் ஒன்று. இதனை இயற்றியவர் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் என்பவர். கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த மகளான மணிமேகலையின் வரலாறு இதில் கூறப்படுகிறது. இவ்வரலாறு முப்பது காதைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதில் அமைந்துள்ள இயற்கை வருணனைகளும் அறவுரைகளும் கற்போர்க்கு இன்பம் பயப்பன. பௌத்த சமயக் கொள்கை இந்நூலில் ஆங்காங்கே விளக்கப்படுகின்றன. இந்நூல் கடைச்சங்க காலத்தில் இயற்றப் பெற்றது.

**முன்கதை :** மணிமேகலை தன் தந்தைக்கு நேர்ந்த கதியை எண்ணி வருந்தி, உலக வாழ்வில் வெறுப்புற்றிருந்தாள். அவள் ஒரு நாள் மலர் பறிக்கும்பொருட்டு உவவனம் என்ற சோலையை யடைந்தபோது, இளவரசனான உதயகுமரன் அங்குவந்து, அவள்மீது காதல்கொண்டு நெருங்க, மணிமேகலா தெய்வம் அவளை எடுத்துச்சென்று மணிபல்லவம் என்ற தீவில் விடுத்தது. அதுவரை மயங்கியிருந்த அவள் துயில் நீங்கி, தீவதிலகை என்பவள் துணையால் 'அமுதசுரபி' என்னும் அட்சயபாத்திரம் பெற்று, மணிமேகலா தெய்வம் உபதேசித்த மந்திரத்தை உச்சரித்து, வானவழியே காவிரிப்பூம்பட்டினத்திற்கு மீண்டு வந்து, அட்சய பாத்திரத்தைக் காண்பித்து அதன் வரலாற்றைக் கூறும்படி அறவண வடிகளை வேண்ட, அவர் கூறியது இக்காதையில் வருவது :

**ஆபுத்திரன் வரலாறு :** வாரணசி என்னும் ஊரிலிருந்த ஓர் அந்தணன் மனைவி, தன் தீவினை தீர, தீர்த்தயாத்திரை செய்யும் பொழுது, வழியில் தான் பெற்ற ஆண்குழந்தையைச் சற்றும் இரக்கமின்றி, ஒரு தோட்டத்தில் விட்டுச் சென்றாள். அக்குழந்தை பசியால் அழுதது. அது கேட்ட பசு ஒன்று அங்கு வந்து, அக்குழந்தைக்குப் பாலூட்டி வளர்த்தது. அதனால் அக்குழந்தைக்கு 'ஆபுத்திரன்' என்று பெயராயிற்று. பூதி என்ற ஓர் அந்தணன் அக்குழந்தையைக் கண்டெடுத்து வளர்த்துக் கல்வி கற்பித்தான். ஒரு நாள் அக்குமரன் ஒருயாகத்தில் பலி

யாவதற்கிருந்த யாகபசுவைக் கவர்ந்து சென்றான்; அதனால் அச்சமூகத்தாரால் வெறுத்துத் துரத்தப்பட்டு மதுரையை யடைந்து, சிந்தாதேவியின் கோயிலுக்கு முன்பிருந்த அம்பலத்தில் தங்கிப் பிச்சையெடுத்து, அங்கு வந்த குருடர், முடவர் முதலியோர்க் களித்து, எஞ்சியதைத் தான் உண்டு வாழ்ந்தான் என்பது.

### ஆபுத்திரன் தன்னை அடுத்தோர்க்கு உணவளிக்க இயலாமைக்கு வருந்துதல்

ஆங்கவற் கொருநா ளம்பலப் பீடிகை
பூங்கொடி நல்லாய்! புகுந்தது கேளாய்
மாரி நடுநாள் வல்லிருள் மயக்கத்(து)
ஆரிடை யுழந்தோர் அம்பலம் மரீஇத்
துயில்வோன் தன்னைத் தொழுதனர் ஏத்தி
வயிறுகாய் பெரும்பசி மலைக்கு மென்றலும்
ஏற்றூண் அல்லது வேற்றூண் இல்லோன்
ஆற்றுவது காணான் ஆரஞர் எய்த,

### சிந்தாதேவி அமுதசுரபி என்னும் பாத்திரத்தை ஆபுத்திரனுக்கு அளித்தல்

"கேளிது மாதோ கெடுகநின் தீ (து)" என
யாவரு மேத்தும் இருங்கலை நியமத்துத்
தேவி சிந்தா விளக்குத் தோன்றி
"ஏடா! அழியல் எழுந்திது கொள்ளாய்;
நாடுவறங் கூரினுமிவ் வோடுவறங் கூராது
வாங்குநர் கையகம் வருந்துதல் அல்லது
தான்றொலை வில்லாத் தகைமைய" தென்றே
தன்கைப் பாத்திரம் அவன்கைக் கொடுத்தலும்,

### ஆபுத்திரன் சிந்தாதேவியைப் போற்றி வணங்குதல்

"சிந்தா தேவி! செழுங்கலை நியமத்து
நந்தா விளக்கே! நாமிசைப் பாவாய்!
வானோர் தலைவி! மண்ணோர் முதல்வி
ஏனோ ருற்ற இடர்களை வா" யெனத்
தான்றொழு தேத்தித் தலைவியை வணங்கி,

### அமுதசுரபியின் உதவியால் ஆபுத்திரன் மன்னுயிர்களின் அரும்பசி களைதல்

ஆங்கவர் பசிதீர்த் தந்நாள் தொட்டு
வாங்குகை வருந்த மன்னுயிர் ஓம்பலின்
மக்களு மாவும் மரஞ்சேர் பறவையுந்
தொக்குட னீண்டிச் சூழ்ந்தன விடாஅ
பழுமரத் தீண்டிய பறவையி னெழூஉம்
இழுமென் சும்மை யிடையின் றொலிப்ப
ஈண்டுநீர் ஞாலத் திவன் செயல்

### இந்திரன் வருகை

பாண்டு கம்பளந் துளக்கிய தாதலின் இந்திரன்
தளர்ந்த நடையிற் றண்டுகா லூன்றி
மாயிரு ஞாலத்து மன்னுயி ரோம்பும்
ஆருயிர் முதல்வன் றன்முன் றோன்றி
"இந்திரன் வந்தே னியாது நின்கருத்(து)
உன்பெருந் தானத் துறுபயன் கொள்" கென,

### தனக்கு வரம் வேண்டுவதில்லை என்றும், பிறர் பசிப்பிணி ஒழிக்கும் அரும்பேறு ஒன்றே போதுமென்றும் ஆபுத்திரன் கூறுதல்

வெள்ளை மகன்போல் விலாவிற நக்கீங்(கு)
எள்ளினன் போமென் றெடுத்துரை செய்வோன்
"ஈண்டுச் செய்வினை யாண்டு நுகர்ந்திருத்தல்
காண்டகு சிறப்பினுங் கடவுள ரல்ல(து)
அறஞ்செய் மாக்கள் புறங்காத் தோம்புநர்
நற்றவஞ் செய்வோர் பற்றற முயல்வோர்
யாவரு மில்லாத் தேவர்நன் னாட்டுக்(கு)
இறைவ னாகிய பெருவிறல் வேந்தே!
வருந்தி வந்தோ ரரும்பசி களைந்தவர்
திருந்துமுகங் காட்டுமென் றெய்வக் கடிஞை,
உண்டி கொல்லோ வுடுப்பன கொல்லோ
பெண்டிர் கொல்லோ பேணுநர் கொல்லோ
யாவையீங் களிப்பன தேவர்கோன்" என்(றான்).

## குறிப்புரை

அடி 1—8: அவற்கு - ஆபுத்திரனுக்கு. அம்பலம் - ஊர்ப் பொது இடம். பூங்கொடி நல்லாய் - பூங்கொடி போன்ற மணிமேகலையே. புகுந்தது - நேர்ந்தது. ஆர் இடை உழந்தோர் - அரிய வழியில் வருந்தி வந்தோராகிய கூத்தர் முதலியோர். மரீஇ (மருவி) - அடைந்து. மலைக்கும் வருத்துகின்றது. ஏற்று - யாசித்து. ஆர் அஞர் - மிக்க வருத்தம்.

9—16: நியமம் - கோயில். அழியல் - வருந்தாதே. வறம் கூரின் உம் - பஞ்சம் மிகுந்தாலும். இ ஒடு - இந்த அட்சய பாத்திரம். தான் தொலைவு - தான் (உணவைத் தராமல்) ஒழிவது. 'கலை நியமம்' என்பது சிந்தா தேவி (சரசுவதி) கோயிலின் பெயர்.

17—21: நந்தா - அழியாத. ஏனோர் - மற்றையோர். மண்ணோர் முதல்வி - பூமியிலுள்ளவர்களால் முதன்மையான தெய்வமாகக் கொண்டாடப்படுகின்றவளே!

22—27: விடாஅ - நீங்காதனவாய், பழுமரத்து - பழுத்த மரத்திலே. இழும் என் சும்மை - இழுமென்னும் ஓசையைக் கொண்ட ஒலி. இடை இன்று - இடைவிடாமல்.

28—35: ஈண்டு - மிகுந்த. பாண்டு கம்பளம் - வெள்ளைக் கம்பளத்தினாலியன்ற ஆசனம். துளக்கியது - நடுங்கச் செய்தது. தண்டு கால் ஊன்றி - (தான் பிடித்த) தடியையே காலாக ஊன்றி. மன் - தங்கியுள்ள. ஓம்பும் - பாதுகாக்கும். இவ்வுலகில் தானம் சீலம் முதலியவற்றில் சிறந்தோர் உளராஞல் இந்திரனுடைய பாண்டுகம்பளம் நடுங்குமாம். அக்குறிப்பால் இந்திரன் வந்து அவர்களுக்கு வேண்டிய வரங்களைத் தருவானும்.

38—48: வெள்ளை மகன் - அறிவில்லாத சொல்லையுடையவன். இற - முறியும்படி. எள்ளினன் - இகழ்ந்து. புறங்காத்து ஓம்புநர் - பாதுகாத்தலைச் செய்பவரும். திருந்து முகம் - (வருத்தம் நீங்கியதால்) மகிழ்ச்சி கொண்ட முகம். கடிஞை - அட்சய பாத்திரம்.

## பயிற்சி

1. பொருள் கூறுக: அம்பலம், மலைக்கும், இடர், சும்மை, கடிஞை.
2. பதம் பிரித்துக் காட்டுக: தான்றொலைவில்லா, விலாவிற, நற்றவம், வேற்றூண்.
3. குறிப்பு வரைக: அம்பலப் பீடிகை, கலைநியமம், பாண்டு கம்பளம்.

## விஞக்கள்

1. ஆபுத்திரன் வருத்தமடையக் காரண மென்ன?
2. சிந்தாதேவி ஆபுத்திரன்முன் தோன்றிக் கூறியது என்ன?
3. ஆபுத்திரன் சிந்தாதேவியை எவ்வாறு போற்றினன்?
4. அமுதசுரபியைப் பெற்ற ஆபுத்திரன் ஆற்றியது என்ன?

5. அன்னதானத்தின் சிறப்பு யாது?

6. இந்திரன் ஆபுத்திரன் முன்பு எவ்வுருவில் தோன்றினான்? என்ன கூறினான்?

7. இந்திரனை நோக்கி ஆபுத்திரன் கூறியது யாது?

8. 'இந்திரன் பாண்டுகம்பளம் துளக்கியது' எது? ஏன்?

9. 'பழுமரத் தீண்டிய பறவை'—உபமேயம் என்ன?

10. ஆபுத்திரன் இந்திரனைப் 'பெருவிறல் வேந்தே' என்றதால் என்ன பொருள் தோன்றும்?

### கட்டுரையாக்கம்

இந்திரனுக்கும் ஆபுத்திரனுக்கும் நடந்த பேச்சை உரையாடல் அமைப்பில் எழுதுக.

## 2. சீகாளத்திப் புராணம்

இது சீகாளத்தி என்னும் தலத்தின் வரலாற்றைக் கூறும் நூல். சீ-சிலந்திப் பூச்சி, காளம்-பாம்பு, அத்தி-யானை; இம்மூன்றும் இத்தலத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமானை வழிபட்டு முத்தி பெற்றதால், இத்தலம் இப்பெயர் பெற்றது.

சிவப்பிரகாச சுவாமிகள், கருணைப்பிரகாசர், வேலையர் என்ற சகோதரர் மூவரிருந்தனர். இவர்கள் தோன்றிய இடம் காஞ்சிபுரம். இம் மூவரே இந்நூலாசிரியர்கள்: இவருள் இரண்டாமவரான கருணைப் பிரகாசர் சீகாளத்திப் புராணத்தைப் பாடத் தொடங்கி முடிக்குமுன் காலமாகிவிட்டார். அதன் பின் மூத்தவரான சுவாமிகள் இப்புராணத்தைத் தொடர்ந்து பாடிக் கண்ணப்பச் சருக்கம், நக்கீரச் சருக்கம் ஆகிய இரண்டையும் முடித்தபின் இறைவன் திருவடியையடைந்தார். பிறகு வேலையர் என்னும் மூன்றுமவர் இப்புராணத்தின் எஞ்சிய பாகத்தைப் பாடி முடித்தார். இந்த நக்கீரச் சருக்கம் பாடியவர் சிவப்பிரகாசசுவாமிகளே யாவர். இவர்களது சமயம்-வீரசைவம். காலம்-ஏறக்குறைய முந்நூறு வருடங்களுக்கு முன்.

### நக்கீரச் சருக்கம்

நக்கீரச் சருக்கம், நக்கீரன் என்னும் புலவர் சீகாளத்தி நாதரை வழிபட்டுப் பேறு பெற்றதைக் கூறுகிறது. நக்கீரன் என்பவர் கடைச்சங்கப் புலவருள் தலைமை பெற்றவர். கீரன் என்பது இவர் பெயர். (கீரம்-பால்.) பால் போன்ற இனிய

சொற்களை யுடையவர் என்று பொருள். ந-என்பது சிறப்புப் பொருள் தரும் ஓர் இடைச்சொல். நக்கீரர் வரலாற்றைக் கூறும் இப்பகுதி, நக்கீரச் சருக்கம் எனப் பெயர் பெற்றது.

முன்கதை : மதுரையில் வங்கிய சூளாமணி என்ற பாண்டிய மன்னன் அரசு புரியும்போது, நக்கீரர் முதலிய தமிழ்ப் புலவர்கள் மதுரையிலே சங்கப் பலகையைப் பெற்றுத் தமிழ் வளர்ச்சி புரிந்து வந்தார்கள். ஒருகால் பாண்டியன் தன் மனைவியோடு அரண்மனையின் மேன்மாடத்தில் இனிதிருந்தான். அப்போது அவனுக்கு நேராக நறுமணத்தோடு தென்றற் காற்று வீச, காற்றுக்கு இந்நறுமணம் எவ்வாறு வந்ததென்று அவன் சிந்தித்து, அருகே தன்மனைவி யிருப்பது கண்டு, 'இது, நம் மனைவியின் கூந்தல் நறுமணமே' என்று தன் மனத்துள் நினைத்தான்.

பாண்டியன் சங்க மண்டபத்தில் பொற்கிழி தூக்குதல்

1. மதித்த காவல னதுமனங்
கொண்டுதன் மனத்தில்
தனைத்த நுண்பொருள் தரவொரு
செய்யுள்செய் புலவர்
'இதைக்கொள் க'(எ)ன்றுபொன் ஆயிரம்
ஒருகிழி யியற்றி
அதைப்பொற் சங்கமண் டபத்தின்முற்
றூக்கின னன்றே.

புலவர் பலரின் பயனற்ற முயற்சி

2. புலவர் யாவரும் தாங்கண்ட
வாறுபாப் புனைந்து
தலைவன் முன்புபோய்ச் சாற்றிய
அனைத்தையுந் தண்டார்
மலைகொ டோளினன் மறுத்தலின்,
வறிதகன் றனர் ;அவ்
விலகு பொற்கிழி யிருந்ததங்
கறுப்பவர் இன்றி.

3 சிலர்பி ழைத்தஅவ் வற்கடத்
திறையையர்ச் சிக்குந்
தலைமை பெற்றவன் தருமியென்
பவனுடல் தளர்ந்திங்(கு)
இலையு யிர்க்கரண் இனிநடந்
தெத்திசை யேனும்
மலிவி லைத்துநா டெய்துவம்
எனமனம் வலித்தான்.

4. கோயில் சென்றடைந் தருட்பெருங்
கடலினைக் குறுகித்
"தாயி லன்புடையாய்! இவ
ணுறிலினிச் சாவேன்!
தேய முய்வதற் கேற்றது
புகுந்துறீ இச் செழுமை
ஆய பின்பிவ ணடைகுவல்"
எனத்தொழு தழுதான்.

வேறு

5. குழுவியந் திங்கள் வேணிக்
குரிசின்மற் றதனைக் கேளா
"அழுதகங் குழையல்; வாழி
யன்ப! ஒன் றறைவல் கேட்டி
வழுதிதூக் கினனேர் பாத்தன்
மனங்கொள உரைத்தோர்க் கென்று
கிழியதா யிரம்பொன் சங்கக்
கிளர்மணி மண்டபத்தே."

6. அங்கதை இப்பா வேந்தற்
கறைந்தனை பெறுதி" என்று
கொங்குதேர் வாழ்க்கை என்னும்
கோதில்தூக் கீந்து விட்டான்;
பொங்கிய களிப்பி னானும்
போய்த்தொடர் பமுதந் தன்னைத்
திங்கள்வெண் குடையி னான்தன்
செவிப்புலத் தூற்றி னானல்.

பாண்டியன் சொற்படியே தருமி சங்கத்தவர்முன் பாடுதல்

7. மற்றது கேட்டுத் திங்கள்
மருமான்தான் நினைந்த வண்ணம்
சொற்றலி னினிது வந்து
"தொகுசங்கத் தவர்பாற் போயிப்
பொற்றபாட் டிசைவி" என்றான்;
பொருக்கெனத் தருமி சென்று
கற்றவ ரவைமுன் சொன்னான்;
கவிகள் கேட்டலு முவந்தார்.

நக்கீரன் தருமி உரைத்த பாட்டு குற்றமுடைத்து எனல்

8. ஆங்கவர் தம்முட் கீரன்
அரும்பெறற் கல்விச் செல்வத்(து)
ஓங்கிய தருக்கி னால் "இவ்
வுரைத்தபாக் குற்றம்" என்றான்.
தாங்கிய வுவகை சிந்தித்
தருமிதான் துனைவிற் போந்து
தேங்கமழ் கடுக்கை வேணிச்
செல்வனோ டிதனைச் சொன்னான்:

"என் பாடலுக்குக் குற்றம் கூறினோர் யாவர்?" என்று
இறைவன் கேட்க, நக்கீரன் "நான்" எனல்

9. கேட்டலும் அங்க யற்கண்
கிளியுறழ் கிளவி பங்கன்
பாட்டியற் புலவனாகிப்
பாவலர் தம்பாற் போய், "எம்
கோட்டமில் கவிக்குக் குற்றம்
கூறின ரியாவர்?" என்றான்.
நாட்டிய புகழ்நக் கீரன் "நான்"
எனத் தருக்கிச் சொன்னான்.

இறைவன் கேட்ட வினாக்களுக்கு நக்கீரன் இறுத்த விடைகள்

10. சொல்லலும், "குற்றம் யாது?
சொல்"லென, நெடுங்க ணல்லார்
சில்லிருங் குழற்கு நாற்றஞ்
செயற்கையன் றியற்கை யுண்டோ?

இல்லது கூற லால்மற்
றிதுகுற்றம்'' என்றான்; அண்ணல்
"மல்லல்விண் மகளிர் கூந்தல்
மணமியல் பன்றோ?'' என்றான்.

11. என்றலும், "அரம்பை யர்க்கும்
இருங்குழல் நறிய நாற்றம்
இன்''றென வுரைத்தான்; ஐயன்
"இறைவியென் றுலகமேத்தும்
குன்றிறை பயந்த செல்வி
கூந்தலெற்(று)?'' என்றான், கீரன்
தன்தனித் தருக்கால், "அம்மை
தனதுகூந்தலுமற்(று)'' என்றான்.

நக்கீரன் இறைவனை நோக்கி "நெற்றிக்கண்ணைக் காட்டிலும் நீ சாற்றிய செய்யுள் குற்றமே'' எனல்

12. ஏற்றினு னெற்றிக் கண்ணு
மெரிமருள் சடையுங் காட்ட,
மாற்றரு மருட்சியான், "கண்
வடிவெலாங் காட்டி னாலும்
சாற்றிய செய்யுள் குற்றம்;
சடைகொண்டு வெருட்டல் வேண்டா;
தோற்றில னிதனுக்(கு)'' என்றான்,
தொலைவிலான் வெகுண்டு சொல்வான்:

இறைவன் கீரனைச் சபித்தல்

13. "எம்மொடு முரணி வான்றோய்
இமயமால் வரைப்பூங் கொம்பின்
மைம்மலி மறைசொல் லானா
மணங்கமழ் குழல்ப ழித்த
செம்மைகொள் அறிவிலாய்! நீ
தீர்ப்பருங்குட்ட நோய்கொண்(டு)
இம்மையி லலைக'' என்றான்;
இறப்பநக் கீரன் அஞ்சி,

கீரனது வேண்டுகோள்

14. முழுமெயும் பனித்தி ரங்கி
முருகலர் கமலம் வென்ற
கழலடி வீழ்ந்தி றைஞ்சிக்
" கருணையங் கடலே ! எந்தாய் !
இழியுடை நாயி னன்னேன்
இலங்கறி விலாது செய்த
பிழைபொறுத் தருளிச்சாபப்
பிணிகெட அருள்வாய் " என்றான்.

இறைவன் கீரனுக்கு அருள்சுரந்து திருக்கோவிலில் மறைதல்

15. என்னலுங் கருணை வள்ளல்
எரிசினந் தணிந்து, " கீர,
சென்றுநீ கயிலை காணிற்
றீருமிக் கொடுநோய் " என்று,
குன்றுறழ் புரிசை விண்டோய்
கோயிலிற் புகுந்தொ ளித்தான்
தென்றலம் பொதிய வெற்பிற்
றென்னர்கோ னதிச யித்தான்.

தருமி பொற்கிழி பெறுதல்

16. பொற்குவை தருமி யேற்றுப்
பொலிந்தினி திருந்தான் ; வெய்ய
வற்கடந் தீர எங்கும்
மழைவளஞ் சுரந்த(து) ; இப்பாற்
சிற்குணன் தந்த சாபத்
தீப்பிணி யுடலம் போர்ப்ப
நற்கவி னிகந்து கீர
நாவலன் சிந்தை செய்வான் :

மற்றப் புலவர்கள் மன்னன் முதலியோரைவிட்டுப் பிரிதற்காக நக்கீரன் வருந்துதல்

17. " பலப்பல நாடி றந்து
படரொளிக் கயிலை யென்னும்
உலப்பில்குன் றெய்தி யிந்நோ
யொழிக்குவம் " எனத்து ணிந்தான்

விலக்கரு நண்பி ஞேரை
விட்டக றற்கு நெஞ்சம்
கலக்கமுற் றழுதி ரங்கும்
கரையில்பே ரஞருள் ஆழ்ந்தான்.

18. தடையில்பே ரறிஞர் தம்மைத்
தனித்தனி விளித்து, “ நும்மோ(டு)
உடனுறை வாழ்வு நீங்கு
மொருபெரும் பாவி யேனை,
மடனறு நமரங் காள்! நீர்
மறவன்மின் ” என்று தன்மெய்ப்
படுபிணி நோக்கி மார்பம்
படத்தழு வாதுநின்ருன்.

19. நாவலர் அதைய றிந்து,
நண்ணிமார் பிறுகப்புல்லி
ஓவில்கண் ணருவி பாய,
வுளங்குழைந் தழுது, “ நல்லோய் !
மேவரு நின்னை நீத்து
வெறுவியம் இருப்பநின்ற
ஆவல்வல் வினையு ளார்யாம்
அல்லதிவ் வுலகத் தியாரே ?”

20. என்றனர் இரங்க, மேலோன்
எதிர்தழீஇத் தழுவியாறிக்
‘குன்றனீர் ; சிறியற் காகக்
குழைந்தழல் ; தமியேன் செல்வல் ;
பொன்றலில் நட்பி னுக்குப்
புணர்வொடு பழகல் வேண்டா ;
நின்றநல் லுணர்ச்சி தானே
நிறைக்குமென் றுணர்ந்த நல்லீர்.’

21. என்றுபல் திறத்தாற் கூறி
யிணையிலான் அரிதி னீங்கிச்
சென்றனன் புலவர் கண்ணுஞ்
சிந்தையுந் தொடர்ந்து செல்லத்

தன்றிரைக் கையால் மோதித்
தான்றியங் குலையு திர்க்கும்
மன்றலம் புதுநீர் வைகை
வடகரை கடந்து மன்னோ.

22. "என்றினி மதுரை காண்பேம்!
எப்பகல் சவுந்த ரேசன்
தன்றிரு வடிகள் காண்பேம்!
தாயையேஞ் ஞான்று காண்பேம்!
வென்றிவேற் றரும வேந்தர்
வேந்தனை யெந்நாட் காண்பேம்!
ஒன்றுயிர்த் துணையாஞ் சங்கத்
துறவையெப் பொழுது காண்பேம்!

23. "நுணங்குமா ணறிவின் மிக்க
நூல்வலார் மறப்பர் கொல்லோ!
வணங்குதேர்த் தானை மன்னர்
மணிமுடி யுழுக ழற்கால்
அணங்குடை யரிமான் றுப்பி
னரசர்கோ னினையான் கொல்லோ
இணங்குநூற் புலவர் நாற்பா
னெழுவரென் றுரைக்குங் கொல்லோ!

கீரன் தொண்டை நாட்டினைக் கடத்தல்

24. "இனித்தமி ழினிமை யாவர்க்
கெடுத்திசைத் திடுவன் மன்னோ"
எனப்பல பலவு மெண்ணி
யினைந்துவெஞ் சுரமி றந்து
புனற்றிரு நாடு புக்குப்
பொருந்திரைப் பெண்ணை நாடு
தனைக்கடந் தந்தண் பாலித்
தண்ணடை கண்டு சென்றான்.

குறிப்புரை

1. மதித்த - நினைத்த. ததைத்த - பொருந்தவைத்த. பொன் சங்க மண்டபம் - அழகிய சங்க மண்டபம். பொன் - அக்காலத்தில் வழங்கிய ஒரு பொன் நாணயம்.

2. மலை கொள் - மலை போன்ற (கொள் - உவம உருபு.) இலகு - விளங்குகின்ற. தோளுக்கு மலையுவமை - எதற்கும் சலியாத வலிமையும், ஆயுதங்களால் அழித்தற்கு அருமையும் உயர்வும் பற்றியாம்.

3. வற்கடம் - பஞ்சம். இறை - சோமசுந்தரக்கடவுள். மலிவிலைத்து - நயமான விலையுள்ளது. வலித்தான் - துணிந்தான்.

4. அருள் பெரு கடலினை - பெரிய கருணைக் கடலாகிய சோமசுந்தரக் கடவுளை. புகுந்து உறீஇ - போயிருந்து. அடைகுவல் - வந்து சேருவேன்.

5. குழவி திங்கள் - இளம் பிறைச் சந்திரன். வேணி - சடை முடியில். குரிசில் - சோமசுந்தரக் கடவுள். கேளா - கேட்டு. குழையல் - வருந்தாதே. ஒன்று - ஓர் உபாயம். வழுதி - பாண்டிய மன்னன். கிளர் - விளங்குகின்ற.

6. அறைந்தனை - சொல்லி. கோது இல் - குற்றமில்லாத. தூக்கு - பாடல். தொடர்பு - பாடல். "கொங்கு தேர் வாழ்க்கை" என்னும் பாடலைப் பல்சுவைப் பகுதியில் காண்க.

7. மற்று - பின்பு. பொற்ற - அழகிய. இசைவி - அரங்கேற்றுவாயாக. பொருக்கென - விரைவுக் குறிப்பு இடைச்சொல். சொற்றல் - தொழிற் பெயர்.

8. குற்றம் - பிழையுடையது. உவகை - களிப்பு. துனைவின் - விரைவில். கடுக்கை - கொன்றை மலர். வேணி - சடை (கபர்த்தம்).

9. கயல் கண் - கயல் மீன் போன்ற கண் (உவமைத் தொகை). உறழ் - ஒத்த. கிளவி - சொல், பேச்சு. கோட்டம் - குற்றம்.

10. நல்லார் - மகளிர். அண்ணல் - சிவபெருமான். மல்லல் - வளப்பம் (உரிச்சொல்).

11. இரு குழல் - பெரிய கூந்தல். இன்று - இயற்கையானதன்று. குன்று இறை - இமவான். செல்வி - பார்வதி. நாற்றம், நாறு - பகுதி.

12. ஏற்றினன் - இடப வாகனத்தையுடைய சிவபெருமான். எரி மருள் - தீயையொத்த. மருள் - உவமஉருபு. மருட்சியான் - விபரீத ஞானமுள்ள நக்கீரன். தொலைவு இலான் - முடிவில்லாத சிவபெருமான்.

13. முரணி - மாறுபட்டு. ஆனு - இடைவிடாது புகழப்படுகின்ற. மைமலி - கருநிறம் மிகுந்த. தீர்ப்பு அரு - நீங்குதற்கு அரிய. இறப்ப அஞ்சி - மிகவும் பயந்து.

14. பனித்து - நடுங்கி. முருகு - வாசனை. நாயின் அன்னேன் - நாய் போலக் கடைப்பட்டவனை யான். இலங்கு - விளங்குகிற.

15. கருணை வள்ளல் - அருளை வரையாது தருபவரான கடவுட் புலவன். உறழ் - போன்ற. புரிசை - மதிள்.

16. பொன் குவை - பொற்கிழி, பொன் முடிப்பு. போர்ப்ப - மூடிக் கொண்டதனல். இகந்து - கெட்டு.

17. உலப்பு இல் - அழிவில்லாத. அஞர் - துன்பம். உலப்பு - தொழிற் பெயர்.

18. தடை இல் பேர் அறிஞர் - எங்கும் தடையில்லாமல் செல்லும் சீரிய புலமையுடைய அறிஞர். மடன் அறு - அறியாமையில்லாத.

19. அதை - வியாதி காரணமாக நக்கீரன் விலகி நிற்பதை. புல்லி - தழுவி. ஒவு இல் - ஒழிதல் இல்லாத. வெறுவியம் - பயனற்றவர்களானோம்.

20. தழீஇ - தழுவி: (அப்புலவர்களைத்) தனித்தனியே தழுவி. குழைந்து அழல் - வருந்தி அழவேண்டா. செல்வல் - போவேன். இச் செய்யுளில் "புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான், நட்பாங் கிழமை தரும்" என்ற திருக்குறட் கருத்து அமைந்திருத்தல் காண்க. புணர்வு - தொழிற் பெயர்.

21. தன் திரை கையால் - தனது அலைகளாகிய கைகளால். தான்றி- ஒருவகை மரம். மன்றல் - வாசனை. வடக்கு + கரை = வடகரை.

22. வேந்தர் வேந்தனை - வங்கிய சூளாமணியை. உறவு - உறு! பகுதி.

23. நுணங்கு - சூட்சுமமான. அணங்கு - அச்சம். அரிமான் துப்பு- ஆண்சிங்கம் போன்ற வலிமை. இதுவரையிலும் இறையனாரைத் தவிர்த்து நாற்பத்தெண்மராயிருந்த சங்கப் புலவர்கள், இப்போது நக்கீரனையும் தவிர்ந்ததனால் நாற்பத் தெழுவராவர். ஆதலால் 'இணங்கு நூற் புலவர் நாற்பானெழுவர் என்று உரைக்கும் கொல்லோ' என்றான்.

24. அன்னோ - ஐயோ ! இனைந்து - வருந்தி. சுரம் - பாலை நிலம். இறந்து - கடந்து. புனல் திரு நாடு - நீர்வளமுள்ள சோழ நாடு. பெண்ணை நாடு - நடு நாடு: இது சோழ நாட்டிற்கும் தொண்டை நாட்டிற்கும் நடுவிலுள்ளது. பாலி - பாலாறு. தண்ணடை - மருத நிலத்தூர்.

## பயிற்சி

1. பொருள் கூறுக: வற்கடம், தூக்கு, கடுக்கை, கிளவி, கோட்டம், மல்லல், புரிசை, அஞர், சுரம்.

2. பாண்டிய மன்னன், சிவபெருமான்—இவர்களைக் குறிக்கும் பெயர்களைக் கூறுக.

3. இப்பகுதியில் உள்ள உவம உருபுகள் இரண்டு வரைக.

4. 'பாட்டு' என்னும் பொருளில் வரும் வேறு சொற்களை எழுதி, அவற்றின் காரணப் பொருளையும் குறிக்க.

5. பகுதி கூறுக: நீத்து, உறவு, இவண், குழவி, ஊற்றினன், சொற்றல், நாற்றம்.

6. புலவர் எவ்வெக் காரணம் பற்றிக் குன்றுக்கு ஒப்பாவர்?

7. வடகரை—பிரித்துக் காட்டுக.

8. தண்டார் மலைகொள் தோளினன், அருட் பெருங் கடல், குழ

வியந் திங்கள் வேணிக் குரிசில், தேங்கமழ் கடுக்கை வேணிச் செல்வன், அங்கயற்கண், கிளியுறழ் கிளவி, குன்றிறை பயந்த செல்வி, மாற்றரு வெருட்சியான்—இவை யார் யாரைக் குறிக்கும்? இவற்றின் பொருளைத் தெளிவாக எழுதுக.

9. இப்பகுதியில் வந்துள்ள தொழிற் பெயர்கள் ஐந்து கூறுக.

10. எதிர்ப் பால் தருக: தலைவன், இறைவி, மருகன், செல்வி.

## வினாக்கள்

1. வங்கிய சூளாமணிப் பாண்டியனுக்கு எழுந்த ஐயம் யாது? அது எழக் காரணமென்ன?

2. பாண்டியன் தன் ஐயம் தீர யாது செய்தான்?

3. தருமி சோமசுந்தரப் பெருமானை யடைந்து வேண்டியது என்ன?

4. சிவபெருமான் தருமிக்கு அளித்த பாடலின் பொருளைச் சுருக்கித் தருக.

5. புலவனாக வந்த சிவபெருமானுக்கும் நக்கீரருக்கும் நடந்த வாதத்தைச் சுருக்கி வரைக.

6. தொலைவிலான் வெகுண்டு சொல்லியதென்ன?

7. நக்கீரர் சிவபெருமானை வேண்டியதும் பெற்றதும் எவை?

8. நக்கீரர் எதன்பொருட்டு வருத்தங் கொண்டார்?

9. ஏனைய புலவர்களை நக்கீரர் தழுவாது பேசியது ஏன்? அப் புலவர்கள் என்ன செய்தார்கள்?

10. நக்கீரர்க்கும் ஏனைய புலவர்கட்கும் பிரியும்போது நிகழ்ந்த பேச்சு என்ன? அதனால் நாம் அறிவது யாது?

11. நட்பின் சிறப்பை ஆசிரியர் எவ்வாறு விளக்குகிறார்? அக்கருத்தமைந்த திருக்குறள் யாது?

12. வைகையின் வடகரை கடந்து செல்லுங்கால் நக்கீரர் எண்ணியது என்ன?

13. புனல் திருநாடு, பெண்ணை நாடு, பாலித்தண்ணடை—இவை எந்த நாடுகளைக் குறிக்கும்? ஏன்?

14. 'இணங்கு நூற் புலவர் நாற்பானெழுவர்' என்றது ஏன்?

15. நக்கீரருக்கும் புலவர் உருவில் வந்த சிவபெருமானுக்கும் நிகழ்ந்த வாதத்தைப்பற்றிய நும் கருத்தென்ன?

## கட்டுரையாக்கம்

1. தருமியும் சிவபெருமானும், நக்கீரரும் சிவபெருமானும்—என்ற தலைப்புக்களில் பதினைந்து வரியில் ஒவ்வொரு சிறு கட்டுரை வரைக.

2. 'நட்பின் சிறப்பு' என்பது பொருளாகக் கொண்டு இப்பகுதியில் வந்துள்ள நிகழ்ச்சியை அமைத்து ஒரு கட்டுரை எழுதுக.

## 3. வில்லிபாரதம்

### உத்தியோக பருவம்

### கிருட்டினன் தூது சருக்கம்

வில்லிபுத்தூராராற் செய்யப்பட்ட பாரதம் வில்லி பாரதம் எனப்படும். பாரதம் என்பதற்குப் பரதனது வமிசத்தாரைப் பற்றிய நூல் என்பது பொருள். பரதனது வமிசத்திலுதித்தோர் பாண்டவரும் துரியோதனுதியருமாவர். இந்நூலை வேதவியாமா முனிவர் முதலில் வடமொழியில் இயற்றினுர். அதன் வழிநூல் வில்லிபாரதம். இதிகாசங்கள் இரண்டனுள் பாரதம் ஒன்று. மற்றது இராமாயணம்.

வில்லிபுத்தூரார் திருமுனைப்பாடி நாட்டில் சனியூரில் அந்தணர் குலத்தில் தோன்றியவர். இவர் மதம் வைணவம். இவர் வரபதியாட் கொண்டான் என்ற சிற்றரசனிடம் ஆஸ்தான பண்டிதராயிருந்தார். அவன் வேண்டுகோளின்படி தமிழில் பாரதத்தை (முதல் பத்துப் பருவங்களைப்) பாடினுர். இவருடைய காலம் 14-ம் நூற்றுண்டு. இவர் வடமொழிச் சொற்களைத் தம் செய்யுட்களில் மிகுதியாகவும், நயத்துடனும் உபயோகித்திருக்கிருர். இவர் பாடல்களில் பலவகை அணிகளும் அமைந்துள்ளன.

**முன்கதைத் தொடர்ச்சி:** சூதாட்டத்தில் தோல்வியுற்ற பாண்டவர் துரியோதனன் குறித்தபடியே வனவாசமும் அஞ்ஞாதவாசமும் புரிந்து மீண்டபின், தங்கள் குருநாட்டைப் பெற முயல்வாராயினர். அதுபற்றிக் கண்ணபிரானேடு ஆலோசித்து அவரையே தூதனுப்ப முற்பட்டனர்.

**தருமன் கண்ணபிரானை நோக்கிக் கூறுதல்**

1. ''செஞ்சொல்முனி சஞ்சயனுக் கியாமுரைத்த
கருமமும், முன் சென்ற காலை
அஞ்சொல்முனி புரோகிதனுக்(கு) அவனிசைத்த
கருமமுநீ அறிதி அன்றே?
நஞ்சுதனை மிகவருந்தி நன்மருந்தும்
மந்திரமும் விரைந்து நாடா(து)
எஞ்சினர்தங் களைப்போல இருக்குமதோ?
யார் மனத்தும் இருக்குஞ்சோதி!''

**தருமனையும் அவன் தம்பியரையும் நோக்கிக் கண்ணபிரான் கூறுதல்**

2. "செய்வரால் இனமுகளுந் திரு நாடு
பெறநினைவோ? சென்று மீளப்
பைவராய் அருங்கானில் பயின்றுதிரி
தர நினைவோ? 'பகைத்த போரில்
உய்வரார்?' எனவிரைவின் உருத்தெழுந்து
பொரநினைவோ? உண்மை யாக
ஐவராம் அனிபர்க்கும் நினைவே(து)" என்(று)
அருள் புரிந்தான் அமரர் கோமான்.

**தருமர் கண்ணபிரானைப் பார்த்து சமாதானத்திற் காரியத்தை முடிக்கவேண்டும் என்று புகலுதல்**

3. "வயிரமெனுங் கடுநெருப்பை மிகமூட்டி
வளர்க்கினுயர் வரைக்கா(டு) என்னச்
செயிரமரில் வெகுளிபெறச் சேரஇரு
திறத்தேமுஞ் சென்று மாள்வேம்;
கயிரவமுந் தாமரையுங் கமழ்பழனக்
குருநாட்டிற் கலந்து வாழ,
உயிரனையாய்! சந்துபட உரைத்தருள்," என்
ருன் அறத்தின் உருவம் போல்வான்.

**'சமாதானத்திற்கு வராத அவர்களை அழிப்பதே தகுதி' என்று கண்ணபிரான் கூறுதல்**

4. "அரவுயர்த்தோ னுடன்மறுசூ தாடிநீர்
வென்ற அந்நாள் அவன்ருன்சொன்ன
விரதமொழி தவிராமல் வெங்கானம்
போய் மீண்டீர்! வெய்யோன் உங்கள்
குருநிலத்திற் பாதியினிக் கொடாதிருந்தால்
ஆங்கவனைக் கொன்று போரில்
இருநிலத்தை ஆளஇனித் துணிவதே
கடன்," என்ருன் எம்பிரானே.

'பலரைக் கொன்று அரசு பெறுவது தகுதியன்று,' என்று தருமன் எடுத்துரைத்தல்

5. "குரவரையும் கிளைஞரையும் குலத்துரிய
துணைவரையும் கொன்று போர்வென்(று)
அரவநெடுங் கடலாடைஅவனி யெலாந்
தனியாளும் அரசு தன்னின்
கரவுறையும் மனத்தாதை முனிக்குரைத்த
மொழிப்படியே கானந்தோறும்
இரவுபகல் பலமூல சாகநுகர்ந்(து)
உயிர்வாழ்தல் இனிது நன்றே!"

'தருமர் கூறுவது தகுதியன்று,' என்று கண்ணபிரான் புகலுதல்

4. கோதிலான் இந்தமொழி கூறுதலும்
மாமாயன் கூற லுற்றான்:
"மோதமருக்(கு) இளைத்தநீர் மொய்த்த பெருங்
கானகத்தே முருகிச் சென்றால்,
பூதலத்தோர் ஏசாரோ? புகன்றபெரு
வஞ்சினமும் பொய்த்தி டாதோ?
நீதியோ?" என உரைத்தான்; ஆங்கதற்கு
நிகழ்தருமன் நிகழ்த்த லுற்றான்:

தருமன் கண்ணபிரானுக்குத் தூது பேசும் வகையைக் கூறுதல்

7. "முந்தூர்வெம் பணிக்கொடியோன் மூதூரில்
நடந்(து) உழவர் முன்றில் தோறும்
நந்தூரும் புனனாட்டின் திறம்வேண்டு;
நாடொன்றும் நல்கான் ஆகில்
ஐந்தூர்வேண்டு; அவையிலெனில், ஐந்திலம்வேண்டு;
அவைமறுத்தால், அடுபோர் வேண்டு;
சிந்தூரத் திலகநுதல் சிந்துரத்தின்
மருப்பொசித்த செங்கண் மாலே!"

தருமன் கூறியதைக் கேட்டு, வீமன் வெறுத்துக் கூறுதல்

8. மூத்தோன்மற்(று) இவையுரைப்ப இளையோன்வெஞ்
சினமனத்தின் மூளமூள
நாத்தோமில் உரைபதறக் கதுமெனவுற்(று)
எழுந்திறைஞ்சி, "ஞாலமெல்லாம்
பூத்தோனே! பூந்தவிசில் பூவைபுணர்
மணிமார்பா! புன்மை யாவும்
தீர்த்தோனே! ஊனமிலான் மானமிலா(து)
உரைப்பதற்(கு)என் செய்வ(து)?" என்றான்.

வீமன் தருமனை நோக்கிக் கடுமையாகப் பேசுதல்

9. "கானாள உனைவிடுத்த கண்ணிலா
அருளிலிதன் காதல் மைந்தன்
தானாளுந் தரணியெலாம் ஒருகுடைக்கீழ்
நீயாளத் தருவன் இன்றே!
மேனாள்நம் உரிமையறக் கவர்ந்தபெருந்
துணைவனுனை வெறாத வண்ணம்
வானாள வானவர்கோன் தன்பதமற்(று)
அவன்தனக்கே வழங்கு வேனே!"

தருமன் வீமனுக்குச் சமாதானம் கூறுதல்

10. பரிவுடன்மற்(று) இவைகூறும் பவனகுமா
ரனைமலர்க்கை பணித்து நோக்கிக்
"குருகுலத்தோர் போரேறே! குற்றமது
பார்க்குங்காற் சுற்ற மில்லை;
ஒருகுலத்திற் பிறந்தார்கள் உடன்வாழும்
வாழ்வினைப்போல் உறுதி யுண்டோ?
இருவருக்கும் வசையன்றோ இருநிலங்கா
ரணமாக எதிர்ப்ப(து)?" என்றான்.

வீமன் தருமனைப் பார்த்துக் கூறுதல்

11. "மலைகண்ட தெனவென்கைம் மறத்தண்டின்
வலிகண்டும், மகவான் மைந்தன்
சிலைகண்டும், இருவர்பொருந் திறல்கண்டும்,
எமக்காகத் திருமால் நின்ற

நிலைகண்டும், இவள்விரித்த குழல்கண்டும்,
இமைப்பொழுதில் நேரார் தம்மைக்
கொலைகண்டு மகிழாமல், அவன்குடைக்கீழ்
உயிர்வாழக் குறிக்கின் றுயே!"

### அருச்சுனன் கண்ணபிரானையும் தருமனையும் நோக்கிக் கூறுதல்

12. மைக்கால முகிலூர்தி வானவர்கோன்
திருமதலை வணங்கி நின்று,
முக்காலங் களுமுணரும் முகுந்தனுக்கும்
முதல்வனுக்கும் மொழிவான் மன்னே,
" அக்காலம் பொறுத்தவெலாம் அமையாமல்
இன்னமிருந்(து) அறமே சொன்னல்,
எக்காலம் பகைமுடித்துத் திரௌபதியுங்
குழல்முடிக்க இருக்கின் றுளே!

13. "பொன்னுருந் திகிரியினன் போனலும்
பொறைவேந்தன் புகன்ற வெல்லாம்
சொன்னலும் அவன்கேளான்; விதிவலியாற்
கெடுமதிகண் தோன்று(து) அன்றே?
எந்நாளும் உவர்நிலத்தின் என்முளைவித்
திடினும் விளை வெய்திடாது;
பன்னகந் தனக்கமிர்தங் கொடுத்தாலும்
விடமொழியப் பயன் கொடாதே!"

### நகுலன் கூற்று

14. " கானெறிபோய்க் கரந் துறைந்து
கடவநாள் கழித்ததற்பின் கானம்நீங்கி
ஈனமிலா வகைவந்தார் நந்துணைவா!
எனச்சிறிது மிரங்கா னகில்
மாநகரு வளநாடு முரிமையுந்தன்
மொழிப்படியே வழங்கா னகில்,
தானறியா தவன்பிறர் போய்க்
கற்பித்தால் அறிவனே தரணிவேந்தே!"

கண்ணபிரான் சகாதேவனை அபிப்பிராயம் கேட்டல்

15. நகுலனிவை யுரைத்ததற்பி னன்றெனக்கை
யமைத்தருளி, " நகுலன் சொல்லும்
இகல்விசயன் றன்மொழியுந் திறல்வீமன்
இயம்பியதும் யாவுங் கேட்டோம் ;
புகலரிய வுணர்வுடையோய் ! புகழுடையோய் !
திறலுடையோய் ! புகல்நீ," என்ன,
முகிலனைய திருமேனி முகுந்தனுக்கு
மனமுருக மொழிகின் றனே.

சகாதேவன் கூற்று

16. " சிந்தித்தபடி நீயுஞ் சென்றுலென்,
ஒழிந்தாலென் ? செறிந்த நூறு
மைந்தர்க்குள் முதல்வனிலம் வழங்காம
லிருந்தாலென், வழங்கின லென் ?
கொந்துற்ற குழலிவளு முடித்தாலென்,
விரித்தாலென் ? குறித்த செய்கை,
அந்தத்தின் முடியும்வகை அடியேற்குத்
தெரியுமோ ஆதிமூர்த்தி !"

கண்ணபிரான் சகாதேவனைப் பாரதப்போர்
நடவாதிருக்க உபாயம் கேட்டல்

17. இவ்வண்ணஞ் சாதேவ னியம்புதலும்
நகைத்தருளி, ' இகலோர் சொன்ன
அவ்வண்ணம் புகலாமல் விரகுரைத்தான்
இவன்,' என்ன அவனே டாங்கோர்
பைவண்ண மணிக்கூடந் தனிலெய்திப்
" பாரதப்போர் பயிலா வண்ணம்
உய்வண்ணஞ் சொல்லுகநீ யுபாயம்," எனத்
தொழுதுரைப்பா னுரங்கொள் வேலான்.

சகாதேவன் தனது கருத்தைக் கூறுவதும்
கண்ணபிரான் வாக்குறுதியும்

18. " நீபாரதவமரில் யாவரையும் நீருக்கிப்
பூபாரந்தீர்க்கப் புரிந்தாய் புயல்வண்ணு !

கோபால! போரேறே! கோவிந்தா! நீயன்றி
மாபாரத மகற்ற மற்றார்கொல் வல்லாரே?

19. "பாராளக் கன்னனிகற்
பார்த்தனைமுன் கொண்றணங்கின்
காரார் குழல்களைந்து
காலிற் றளைபூட்டி
நேராகக் கைப்பிடித்து
நின்னையும்யான் கட்டுவனேல்,
வாராமல் காக்கலாம்
மாபாரதம்," என்றான்,

20. 'மூன்னநீ கூறியவை யெல்லா முடித்தாலும்
என்னைநீ கட்டுமா றெவ்வா(று)?' எனமாயன்
'உன்னைநீ தானு முணராதாய்! உன்வடிவந்
தன்னைநீ காட்டத் தளைந்திடுவன் யான்,'என்றான்.

21. மாயவனு மன்பன் மனமறிவானு 'கட்டுக,'என்(று)
ஆய வடிவுபதி னாருயிரங் கொண்டான்;
தூயவனு மூலமாந்தோற்ற முணர்ந்(து) எவ்வுலகுந்
தாய வடியிணைகள் தன்கருத்தி னாற்பிணித்தான்.

22. 'அன்பாலின் றென்னையறிந்தே பிணித்தமை நன்(று)!
என்பாதந் தன்னை யினிவிடுக,' என்றுரைப்ப,
'வன்பாரதப் போரில் வந்தடைந்தே மைவரையும்
நின்பார்வை யாற்காக்க வேண்டும் நெடுமாலே!'

23. என்றென் றிறைஞ்சி யிருதா மரைத்தாளில்
ஒன்றுங் கதிர்முடியாற் கோமென் றுரைத்தருளி,
'இன்றிங் கிருவேமு மிப்போ துரைத்தமொழி
ஒன்றும் பிறரறிய வோதா தொழி'கென்றான்.

## குறிப்புரை

1. புரோகிதன் - உலூக முனிவன். அவன் - என்றது துரியோதனனை. யாம் - என்றது நானும் நீயும் வீமனும். எஞ்சினர் - உயிர் ஒடுங்குபவர்.

2. வரால் - ஒருவகை மீன். உகளும் - துள்ளும். திரு நாடு - அழகிய குரு நாடு. பைவர்ஆய் - துன்பப்படுபவராய். உருத்து - கோபித்து.

3. வயிரம் - பகைமை. வரைக்காடு - மூங்கில் காடு. செயிர் - உக்கிரமான. வெகுளி - கோபம். கயிரவம் - ஆம்பல் மலர். சந்து - சமாதானம்.

4. வெய்யோன் - கொடியவனான துரியோதனன். அரவு உயர்த்தோன் - பாம்புக் கொடியையுடைய துரியோதனன்.

5. குரவர் - பெரியோர். அரவம் - ஆரவாரம். கரவு - வஞ்சனை. தாதை - திருதராட்டிரன் (பெரிய தந்தை). பலம் - பழம். மூலம் - கிழங்கு சாகம் - இலை.

6. கோது - குற்றம். முடுகி - விரைந்து. வஞ்சினம் - சபதம். நிகழ்- விளங்குகின்ற.

7. சிந்தூரம் - ஒருவகைச் செந்நிறப் பொடி. நுதல் - நெற்றி. சிந்தூரம் - யானை (பின்னது); குவலயாபீடம். மருப்பு - தந்தம். முந்து ஊர் - விரைவாக ஊர்ந்து செல்கின்ற. பணி - பாம்பு. முன்றில் - வீட்டின் முன் புறம். நந்து - சங்குப் பூச்சிகள். திறம் - பாகம்.

8. தோம் இல் - குற்றம் இல்லாத. கதும் - விரைவாக; விரைவுக் குறிப்பு இடைச்சொல். மூளமூள - மிகுதிபற்றிவந்த அடுக்குத் தொடர். தவிசு - ஆசனம். பூவை - திருமகள். ஊனம் - குற்றம்.

9. கண்இலா அருள்இலி - பிறவிக் குருடனும் கருணையில்லாதவனுமான திருதராட்டிரன்.

10. பரிவு - அன்பு கலந்த வருத்தம். பவனம் - வாயு. குமாரன் - மகன் (வீமன்).

11. தண்டு - கதை (சத்துருகாதினி). மகவான் - இந்திரன். சிலை - வில். இருவர் - நகுல சகாதேவர்கள். இவள் - திரௌபதி. நேரார் - பகைவர்; துரியோதனன் முதலியோர்.

12. மை - கரிய. காலமுகில் - கார்காலத்து மேகம். ஊர்தி - வாகனம். மதலை - புதல்வன்; அருச்சுனன்.

13. திகிரியினன் - சக்கராயுதத்தையுடைய கண்ணன். பல்நாகம் - விஷப்பல்லையுடைய பாம்பு.

14. கடவநாள் - கடமைப்பட்ட நாட்கள். ஈனம் - குறைவு.

15. இகல் - போர்வன்மை. திறல் - வன்மை. முகில் - மேகம்.

16. செறிந்த - நெருங்கிய. கொந்து உற்ற குழல் - பூங்கொத்துக்களைச் சூடும் கூந்தல்.

17. விரகு - தந்திரம். பை வண்ணம் - பசுமை நிறம். பயிலா - நடவாத.

18. நீறு ஆக்கி - சாம்பராக்கி. பூ பாரம் - பூமியின் சுமை. கொல் - அசை.

19. கன்னன் - கர்ணன். பார்த்தன் - அருச்சுனன். அணங்கு - திரௌபதி. தளை - விலங்கு.

20. மாயன் - கண்ணன். தளைந்திடுவன் - கட்டிவிடுவேன்.

21. ஆய வடிவு - பொருந்திய திருவுருவங்கள். தூயவன் - சகாதேவன்.

22. ஐவரையும் - பாண்டவர் ஐவரையும் (ஐவர் - தொகைக் குறிப்பு). பார்வை - அருள்நோக்கம்.

23. ஒன்றும் - பொருந்திய. ஓம் - அப்படியே ஆகுக. இருவேமும் - நாமிருவரும். என்று என்று - அடுக்குத்தொடர்.

## பயிற்சி

1. பொருள் கூறுக :—வரால், வயிரம், வெகுளி, கயிரவம், கரவு, நுதல், முகில், குழல், விரகு, தளை.

2. கண்ணன், தருமன், வீமன், அருச்சுனன், துரியோதனன்—இவர்களைக் குறிக்கும் தொடர்கள் இரண்டிரண்டு கூறுக.

3. இப்பகுதியிலுள்ள உவமை உருபுகள் இரண்டு வரைக.

4. குரவர், குறவர்; விறகு, விரகு—பொருள் வேறுபாடு என்ன?

5. பகுதி கூறுக : நாடாது, எஞ்சினர், வாழ்தல், நல்கான்.

6. செஞ்சொல், கமழ்பழனம், மலர்க்கை, விரதமொழி, வெங்கானம், நின்பார்வை—இவை என்ன தொடர்?

7. இப்பகுதியில் வந்துள்ள தொழிற் பெயர் மூன்று கூறுக.

8. இடஞ்சுட்டிப் பொருளை விளக்குக :

(அ) "நஞ்சுதனை மிகவருந்தி நன்மருந்தும் மந்திரமும் விரைந்து நாடாது எஞ்சினர் தங்களைப்போல".

(ஆ) "குற்றமது பார்க்குங்கால் சுற்றமில்லை"

(இ) "எந்நாளும் உவர்நிலத்தில் என்முளை வித்திடினும் விளைவு எய்திடாது."

(ஈ) "தானறியாதவன் பிறர்போய்க் கற்பித்தால் அறிவனோ!"

## வினாக்கள்

1. குருநாட்டின் வளம் எவ்வாறு சிறப்பிக்கப்படுகிறது?

2. தருமன் சமாதானத்தை நாடும்படி கண்ணனை நோக்கிக் கூறியது யாது? அதற்குக் கண்ணன் கூறிய மறுமொழி என்ன?

3. பலரைக் கொன்று அரசாளுவதிலும் காட்டில் வாழ்தல் நன்று என்பதைத் தருமன் எப்படி விளக்கினான்?

4. துரியோதனனிடம் கேட்கும்படி தருமன் கண்ணனை வேண்டியதென்ன?

5. தருமன் கூறியது கேட்டு வீமன் வெறுத்து உரைத்தது யாது?

6. அதற்குத் தருமன் கூறிய சமாதானம் என்ன? இதில் பயின்றுள்ள பழமொழி யாது?

7. வீமன் தன் வீரம் தோன்ற உரைத்ததை விளக்கி எழுதுக.

8. அருச்சுனன் அவையோரை நோக்கிக் கூறியதைத் தொகுத்து வரைக.

9. அவையோரை நோக்கி நகுலன் என்ன கூறினான்?

10. சகாதேவன் தந்திரமாகப் பேசியது எவ்வாறு?

11. பாரதப்போர் நடவாவண்ணம் இருப்பதற்குச் சகாதேவன் கூறிய வழி என்ன?

12. சகாதேவன் கண்ணனை எவ்வாறு பிணித்தான்? அதன்பின் அவன் கண்ணனை வேண்டியது யாது?

13. "புகன்ற பெரு வஞ்சினமும் பொய்த்திடாதோ?"—இதில் குறிக்கப்பெற்ற வஞ்சினம் என்ன?

# IV. சிறுநூற் கோவை

தமிழில் 'பிரபந்தம்' என வழங்கும் சிறு நூல்கள் பலவுண்டு. அவை, கலம்பகம், மாலை, பிள்ளைத்தமிழ், குறம், சதகம் முதலாகப் பலவகைப்படும். இவற்றுள் சொற் சுவை, பொருட் சுவை ததும்பும் பாடல்கள் பல உள்ளன. அவற்றுள், சில இன்சுவைப் பாடல்களைக் கோவை செய்து இப்பகுதியில் தருகிறோம்.

## 1. அழகர் கலம்பகம்

பலவகைப் பாக்களும் துறைகளும் கலந்து பாடப்படுவதால் கலம்பகம் எனப் பெயராயிற்று. இது அழகரைப் பற்றிப் பாடப் பெற்ற கலம்பகம். அழகர் என்பது மதுரைக்கு அருகேயுள்ள திருமாலிருஞ் சோலைமலையில் உள்ள திருமாலின் பெயர். இந் நூலாசிரியர் இன்னார் என்பது தெரியவில்லை.

பதிக்கின்ற கற்பகப் பூஞ்சோலை
யையெட்டிப் பார்த்துமந்தி
குதிக்கின்ற மாலிருஞ் சோலைவெற்
பா!நின் குளிர்வதனம்
உதிக்கின்ற திங்கள், மெய் யுற்பலக்
கா(டு)அங் கொழுகுபைந்தேன்
மதிக்கின்ற கட்டழ (கு)எங்கள்கண்
மூழ்கு மதுகரமே.

## 2. சோணசைல மாலை

'சோணசைலம்' என்பது சிவப்பு மலை எனப் பொருள் படும். இது திருவண்ணாமலையைக் குறிக்கும் பெயர். மாலை என்பது ஒரு வகைச் சிறுநூல். மலர்கொண்டு தொடுக்கப்பட்ட பூமாலை போலச் சொற்கள் கொண்டு தொடுக்கப்பட்ட பாமாலை இது. இந்நூலை இயற்றியவர் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் ஆவர்.

பொன்னிடத் தடைந்தமணி யென அடைந்து
புண்ணியர்க் கருளுநின் பதங்கள்
என்னிடத் திரும்பின் அடைந்தசெம் மணிபோல்
எய்திய தம்மவோ வியப்பே !

மன்னிடக் கடலுள் அடங்கும் வெற்பன்றி
மலைதரும் அருட்பெருங் கடலைத்
தன்னிடத் தடக்கு மலையெனுஞ் சோண
சைலனே ! கைலைநா யகனே !

## 3. திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ்

பிள்ளைத்தமிழ் என்பதும் ஒருவகைப் பிரபந்தம் ; பிரபந்தத் தலைவனைக் குழந்தையாகப் பாவித்து, குழந்தையின் பத்துப் பருவங்களை அமைத்துச் சுவைபடப் பாடப்படுவது. இது திருச் செந்தூரில் எழுந்தருளியுள்ள முருகப் பெருமானைக் குறித்துப் பாடப் பெற்ற பிள்ளைத் தமிழாகும். இதில் குழந்தையை முத்தம் தருமாறு கூவி அழைக்கும் பருவமாகிய முத்தப் பருவத்துப் பாடல் ஒன்று இங்கே வந்துள்ளது. குழந்தையின் பதினோராம் மாதத்தில் நிகழ்வதாகக் கூறப்படுவது முத்தப் பருவம். இதன் ஆசிரிழர் பகழிக்கூத்தர் என்பவர். இவர் இராமநாதபுரத்தை யடுத்த சன்னுசிக் கிராமத்தில் வைணவப் பிராமணர் குலத்தில் தோன்றியவர் ; வயிற்று நோயால் மிகவருந்தி, திருச்செந்தூர் முருகப்பெருமான்மீது இப்பிரபந்தம் பாடி அந்நோய் நீங்கப் பெற்ருர். இவர் காலம் இன்னதென்று தெரிவில்லை.

கத்தும் தரங்கம் எடுத்தெறியக்
கடுஞ்சூல் உளைந்து வலம்புரிகள்
கரையில் தவழ்ந்து வாலுகத்தில்
கான்ற மணிக்கு விலையுண்டு ;
தத்தும் கரட விகடதட
தந்திப் பிறைக்கூன் மருப்பில்விளை
தரளம் தனக்கு விலையுண்டு ;
தழைத்துக் கழுத்து வளைந்தமணிக்
கொத்தும் சுமந்த பசுஞ்சாலிக்
குளிர்முத் தினுக்கு விலையுண்டு ;
கொண்டல் தருநித் திலம் தனக்கும்
கூறும் தரமுண்(டு); உன்கனிவாய்

முத்தந் தனக்கு விலையில்லை ;
முருகா ! முத்தம் தருகவே !
முத்தம் சொரியும் கடலலைவாய்
முதல்வா ! முத்தம் தருகவே.

## 4. குற்றாலக் குறவஞ்சி

திருக்குற்றாலம் என்பது திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஒரு சிவஸ்தலம். இதைப் பற்றிய குறவஞ்சி நூல் இது. அதாவது, வஞ்சிக்கொடி போன்றவளான குறத்தி தான் வாழும் குற்றால மலையின் வளத்தைக் கூறுவதாகக் கவி புனைந்து இயற்றுவது. இதுவும் ஒருவகைச் சிறுநூலே. இதன் ஆசிரியர் திரிகூட ராஜப்பக் கவிராயர் என்பவர். இவர் நூல்கள் மிகவும் சுவை பொருந்தியவை. இவர் 250 வருடங்களுக்கு முன் வாழ்ந் திருந்தவர்.

சூழ மேதி யிறங்குந் துறையில்
சொரியும் பாலைப் பருகிய வாளை
கூழை வாசப் பலாவினிற் பாயக்
கொழும்ப லாக்கனி வாழையிற் சாய
வாழை சாய்ந்தொரு தாழையில் தாக்க
வருவி ருந்துக் குபசரிப் பார்போல்
தாழை சோறிட வாழை குருத்திடுஞ்
சந்திர சூடர்தென் னுரிய நாடே.

## 5. திருவேங்கட சதகம்

'திருவேங்கடம்' என்பது தமிழ் நாட்டில் வட எல்லையி லுள்ள திருப்பதியைக் குறிக்கும். அங்கெழுந்தருளியுள்ள திருவேங்கட நாதனை முன்னிலைப்படுத்திப் பாடப் பெற்ற நூறு பாடல்களையுடைய நூலாதலின், இந்நூல் திருவேங்கட சதகம் எனப் பெயர் பெற்றது. இதனை இயற்றியவர் நாராயண பாரதியார் என்பவர். இவர் சற்றேறக் குறைய இற்றைக்கு 200 ஆண்டுகட்குமுன் இருந்தவர்.

காரியா காரியம் கொற்றவர் தெரிந்திடக்
கண்டுசொல் வோன்மந்திரி ;
காலமும் தன்பலமும் எண்ணியிகல் வென்றிடக்
கருதுவோன் தளகர்த்தனும் ;
சீரிய தனங்களொடு ராச்சியம் சகலமும்
திட்டமிடு வோன்ப்ரதானி ;
செய்யவா சகதாட்டி அவதான வக்கணை
சிறக்கும்அவ னேராயசன் ;
சூரியன் திசைமாறி னும்தான் தொடுத்தஅத்
தொகைவிடான் கருணீகனும் ;
சொல்வண்மை சபைவண்மை பரராசர் வண்மை
சுமுகனே தானுபதி ; [தெரி
மாரியது காத்தருளும் மணிமேக வண்ணனே !
மணவாள நாராயணன்
மனதிலுறை அலர்மேலு மங்கைமண வாளனே !
வரதவேங் கடராயனே !

## குறிப்புரை

1. பதிக்கின்ற - மேன்மேல் வளர்கின்ற. மந்தி - பெண்குரங்கு. வதனம் - முகம். உற்பலம் - குவளை. மதுகரம் - வண்டு.

2. மணி - இரத்தினம். மலைதரும் அருள் பெருங் கடல் - இமவான் பெற்ற பார்வதி தேவி.

3. கத்தும் தரங்கம் - ஒலிக்கும் கடல். சூல் - கருப்பம். வாலுகம் - மணல் மேடு. கான்ற - ஈன்ற. மணி - முத்து. தத்தும் - மதம் பெருகும். கரடம் - கன்னம். மருப்பு - கொம்பு, தந்தம். சாலி - நெற்பயிர். தரம் - தகுதி. அலைவாய் - திருச்செந்தூர்.

4. மேதி - எருமை. வாளை - ஒரு வகை மீன். கூழை - குள்ளமான. சந்திர சூடர் - பிறைச் சந்திரனைச் சிரசிற் சூடிய சிவபெருமான். குற்றால மலையுள்ள பகுதிக்குத் தென்னூரிய நாடு என்று பெயர்.

5. அகாரியம் - காரியமல்லாதது. காலம் - தம் அரசர்க்கு ஆகுங் காலம். இகல் - பகைவர்கள். வாசக தாட்டி - மிடுக்குள்ள வசன நடை. ராயசன் - எழுத்தாளன். கருணீகன் - கணக்கன். மாரி - (ஆயர்களை வருத்த இந்திரன் பெய்வித்த) கல்மழை. அலர் மேல் மங்கை - இலக்குமி.

## பயிற்சி

1. பொருள் தருக :—வதனம், உற்பலம், தரங்கம், வாலுகம், கரடம், சாலி, கூம்பு, அலங்கல், கணிச்சி, மேதி.

2. பிரித்துக் காட்டுக:—பூஞ்சோலை, கடலலை, வெற்பன்றி, கட்டழகு.

3. பதிக்கின்ற, கான்ற, சுமந்த, சொரியும்—இப் பெயரெச்சங்கள் எவ்வெக்காலத்தை உணர்த்துவன? மற்றிரண்டு காலமும் கூறுக.

### வினாக்கள்

1. அழகன் வதனம், மெய், கட்டழகு, அடியார்கண்—இவை எவை?

2. பொன்னிடத்து அடைந்த மணி, மலைதரும் அருட்பெருங்கடல்—விளக்குக.

3. எவற்றிற்கு விலையுண்டு? எதற்கு விலையில்லை?

4. முத்தப் பருவம் என்பது என்ன? அதற்கு உரிய மாதம் எது?

5. தென்னூரிய நாட்டின் வளம் யாது?

6. மந்திரி, தளகர்த்தன், பிரதானி ராயசன், கருணீகன், தானுபதி இவர்கள் இலக்கணமென்ன?

# V. பல்சுவைப் பகுதி

## 1. புறநானூறு

சங்க காலத் தொகைநூல்களுள் 'புறநானூறு' எட்டுத் தொகை என்ற வகையைச் சேர்ந்தது. புறப்பொருளைப் பற்றிக் கூறும் நானூறு செய்யுட்களை யுடைய நூலாதலால் இப்பெயர் பெற்றது. இந்நூலில் உள்ள பாடல்கள் இன்சுவை பொருந் தியவை; தமிழ்நாட்டின் பழைய வரலாற்று நிகழ்ச்சிகளையும், அரசர், வள்ளல் முதலியோர் சிறப்புக்களையும் கூறுகின்றன. இங்குள்ள செய்யுள் ஒளவையார் பாடியது. அதியமான் நெடு மானஞ்சி என்ற வள்ளல், மரணத்தைப் போக்கத்தக்க நெல்லிக் கனியைத் தான் உண்ணுமல், ஒளவைக்கு ஈந்தான். அதனை உண்ட ஒளவையார் அவன் அருங்குணத்தை வியந்து பாடிய செய்யுள் இது:

வலம்படு வாய்வா ளேந்தி யொன்னுர்
களம்படக் கடந்த கழறெடித்' தடக்கை
ஆர்கலி நறவின் அதியர் கோமான்!
போரடு திருவின் பொலந்தா ரஞ்சி!
பால்புரை பிரைநுதற் பொலிந்த சென்னி
நீல மணிமிடற் றெருவன் போல
மன்னுக பெரும! நீயே தொன்னிலைப்
பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியா
தாத னின்னகத் தடக்கிச்
சாத னீங்க வெமக்கீந் தனையே.

## 2. குறுந்தொகை

குறுகிய அடிகளையுடைய பாக்களைக் கொண்டு தொகுக்கப் பட்ட நூல், குறுந்தொகை. இதுவும் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. இப்புத்தகத்தின் தொடர்நிலைச் செய்யுட் பகுதியில் வந்துள்ள சீகாளத்திப்புராணக்கதையில், தருமி என்ற ஆதிசை வருக்குச் சோமசுந்தரப் பெருமான் பாடியளித்த செய்யுள் இது. இச்செய்யுளையே நக்கீரர் குற்றமுடையது என்று கூறினர். இதனை இயற்றியவர், இறையனர்.

கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி!
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியல்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவும் உளவோ நீயறியும் பூவே.

## குறிப்புரை

1. **புறநானூறு :** வலம் - வெற்றி. படு - உண்டான. வாய் - தப்பாத. ஒன்னர் - பகைவர். நறவு - மது. பொலம் தார் - பொன் மாலை. புரை - போலும் : உவம - உருபு. மிடறு - கண்டம். தொல் நிலை - நெடுங் காலமாயுள்ள. விடர் - பிளவு. மிசை - உச்சி. தீம் கனி - இனிய பழம். தீம் - உரிச்சொல். குறியாது - (உனக்கு வேண்டுமென்று) கருதாமல். தடம் + கை = தடக்கை. தடம் - உரிச்சொல்.

2. **குறுந்தொகை :** கொங்கு - பூந்தாது. தேர் - ஆராயும். காமஞ் செப்பாது - என்னிடம் கொண்ட விருப்பத்தாற் சொல்லாமல். பயிலியது கெழீஇய நட்பு - நெருங்கிப் பழகிய நட்பு. மயில் இயல் - மயில் போன்ற சாயல். செறி எயிறு - நெருங்கிய பல் வரிசை. அரிவை - பெண்.

## பயிற்சி

1. பொருள் கூறுக : வலம், சென்னி, விடர், கொங்கு, அரிவை.
2. பிரித்துக் காட்டுக : கழறொடி, தடக்கை, தொன்னிலை, மயிலியல்.
3. பகுதி கூறுக : பொலிந்த, வாழ்க்கை.
4. தொழிற்பெயர், உரிச்சொல், ஆகுபெயர், உவமஉருபு, பெயரெச்சம், வினையெச்சம்—இவற்றிற்கு இப்பகுதியிலிருந்து ஒவ்வோர் உதாரணம் தருக.
5. சிறியிலை, தீங்கனி, தேர்வாழ்க்கை, மயிலியல், ஆர்கலி, பிறைநுதல்—இவை என்ன தொடர் ?

## வினாக்கள்

1. "பால்புரை பிறைநுதற் பொலிந்த சென்னி நீலமணிமிடற் றொருவன்." "பயிலியது கெழீஇய நட்பின் மயிலியல் செறியெயிற்று அரிவை"—இவற்றின் பொருளை விளக்கி வரைக.
2. புறநானூறு, குறுந்தொகை—பெயர்க் காரணம் என்ன ?
3. ஔவை அதியமானை எவ்வாறு வாழ்த்தினர் ?
4. அதியமானின் அருங்குணம் எதனல் விளங்குகிறது ?
5. வண்டை நோக்கி வினவுவதாக இறையனர் அருளிய பாடலின் கருத்து என்ன ?

## கட்டுரையாக்கம்

ஔவையாரின் நன்றி, இறையனர் அருளிய செய்யுளின் கருத்து—இப்பொருள்கள் பற்றிப் பப்பத்து வரிகட்கு மேற்படாமல் சிறு கட்டுரை வரைக.

# உரைநடைப் பகுதி

## 1. இசை இன்பம்

மகா மகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர்

இசையினுடைய பெருமையை ஓர்ந்தே தமிழர் முத்தமிழுள் இசைத்தமிழை நடுநாயகமாக வைத்திருக்கின்றனர். இயற்றமிழாகிய இலக்கிய நூல்கள் செய்யுட்களாலியன்றன. அவை இசையுடனேயே பயிலப்படவேண்டும்.



டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர்

நாடகத்திற்கு இசை இன்றியமையாத தென்பதை யாவரும் அறிவர். இலக்கிய இலக்கணப் பயிற்சி, ஆங்கிலம் தெலுங்கு முதலிய பாஷைப் பயிற்சி முதலியன உடையரால் அவ்வக்கலைகளில் அறிவுடையாரையே இன்புறுத்த முடியும். ஆனல், இசையோ, கற்ருர், கல்லார், விலங்கினங்கள், பறவைகள் முதலிய எல்லா உயிர்க்கும்

இன்பம் நல்கும். பண்டைத் தமிழ் இலக்கியங்களில் இருதிணை உயிர்களும் இசையின் வயப்பட்டு நின்றன வென்பது பல இடங்களிற் கூறப்பட்டுள்ளது.

காட்டிலுள்ள புஷ்பங்கள் மலரும் பருவத்தில் வண்டு கள் சென்று அவற்றிலிருந்து ஊதும். மலரும் பருவத்தி லிருக்கும் பேரரும்பு '**போது**' என்று தமிழிற் கூறப்படும். காட்டிலுள்ள முனிவர் முதலியவரும் பிறரும் சிற்சில போதுகள் மலர்வதாற் காலத்தை யறிந்து வந்தனர். '**நள்ளிருள் நாறி**' என்றொரு மலர் உண்டு. அது நடு யாமத்திற்றான் மலரும். சூரியன் மறைந்திருப்பினும் அவை மலர்வதாலும் குவிதலாலும் போதினைப் புலப் படுத்துதலின், போதெனப் பெயர் பெற்றன. அப்போது களில் வண்டுகள் இசை பாட, அவை மலரும்; "முல்லை, வரிவண்டூத வாய்நெகிழ்ந்தனவே," என்பது குறுந் **தொகை**. பாம்பு இசைக்கு அடங்கும் என்று கூறப்படு கின்றது. மதம்பிடித்து அலையும் யானைகளும் இசை யினால் அடங்கிவிடும்! பரிக்கோல், குத்துக்கோல் முதலிய ஆயுதங்களாலும் அடக்கமுடியாத ஒரு யானை வீணை இசைக்கு அடங்கி விடுவது உவமானமாகக் "காழ்வரை நில்லாக் கடுங்களிற்றொருத்தல் யாழ்வரைத் தங்கியாங்கு" எனக் **கலித்தொகை** என்ற சங்க நூலிற் கூறப்பட்டிருக் கிறது. இன்னும் "அணியிழை மகளிரும் யானையும் வணக்கும், மணியொலி வீணையும்," என்று **பெருங்கதை** யிலும், "மகரயாழ் வல்ல மைந்த னொருவனைக் கண்ட மத்தப் புகர்முகக் களிற்றின்," என்று **மேருமந்தர புராணத்திலும்** சொல்லப்பட்டிருக்கின்றன. **அகநானூற்** றில் குறிஞ்சி நிலத்தில் தினைக்கொல்லையைக் காக்கும் ஒரு பெண் தெள்ளிய சுனையில் நீராடிப் பரண்மேல் நின்று இனிய காற்றில் தன் கூந்தலை ஆற்றிக்கொண்டு மிகுந்த களிப்புடன் அந்நிலத்துக்குரிய குறிஞ்சிப் பண்ணைப் பாடிக்கொண்டு நிற்கையில், தினைக்கதிரை யுண்பதற்காக அங்கே வந்த யானையொன்று அந்தப் பெண்ணின் இசையில் மயங்கிக் கதிரை யுண்ணாமல் தான்

கொண்ட பெரும் பசியையும் மறந்து மயங்கி நின்றதாக ஒரு செய்தி காணப்படுகின்றது. இந்தக் காட்சியையே,

“ ஒலியல் வார்மயி ருளரினள் கொடிச்சி
பெருவரை மருங்கிற் குறிஞ்சி பாடக்
குரலுங் கொள்ளாது நிலையினும் பெயராது
படாஅப் பைங்கண் பாடுபெற் றெய்யென
மறம்புகன் மழகளி றுறங்கும் நாடன் ”

என்ற அடிகள் காட்டுகின்றன.

உதயணன் சரித்திரமாகிய **பெருங்கதையில்,** உதயணன் **நளகிரி** யென்ற மதம் பிடித்த யானையை வீணை வாசித்து அடக்கி அதன்மேல் ஏறி, ஆயுதங்களை அதையே எடுத்துத் தர ஏவி ஊர்ந்தானென்று ஒரு செய்தி காணப்படுகின்றது. இசையினால் வணக்கப்பட்ட அந்த யானை உதயணனுக்கு அடங்கி நின்றதை ஆசிரியர் கூறுகையில், ‘குருவினிடத்து மிகுந்த பக்தியுள்ள ஒரு சிஷ்யன்போல் யானை படிந்தது’ என்னும் பொருள்பட, “ வீணை கெழீஇ வீதியி னடப்ப, ஆணையாசாற் கடியுறை செய்யு, மாணி போல மதக்களிறு படிய ” என்று பாடியுள்ளார். இதே நிகழ்ச்சியைக் கூறும் **உதயண குமார காவியம்** செய்தவர் இங்கே தந்தையைக் கண்டு வணங்கும் ஓர் உத்தம புத்திரனை உவமை காட்டுகிறார்.

பசுக்கள் இசையின் வயப்படுகின்றன என்பதைக் கண்ணபிரானார் கதை விளக்கும். பசுக்களைப் பல இடங்களிலும் மேயவிட்டு விளையாடிக் கொண்டிருந்த கண்ணபிரானார், மாலைக் காலத்திற் பசுக்களை ஆயர் பாடிக்கு ஓட்டிச் செல்ல வேறு ஏதும் செய்வதில்லை; குழலையெடுத்து ஊதுவார்; உடனே பல இடங்களிலும் நின்று மேய்ந்த பசுக்களெல்லாம் ஒருங்கே திரண்டு அவர்பால் வந்து சேரும். இதனையே “ ஆக்குவித்தார் குழலாலரங் கேசர் ” என்று திவ்யகவி ஒருவர் சுருக்கமாக விளக்குகின்றார். **பெரிய புராணத்திற்** கூறப்படும் நாயன்மார்களுள் **ஆனாய நாயனாருடைய** புராணத்தும் இத்தகைய செய்திகள் காணப்படுகின்றன.

**அசுணமா** என்றொரு விலங்குண்டு. அதைப் பறவை

யென்பாருமுளர். அஃதிசையை யறிவதிற் சிறந்தது; இனிய இசையைக் கேட்டுக் களிக்கும்; இன்னா விசையைக் கேட்பின் மூர்ச்சையுற்று விழுந்துவிடும். அதன் தன்மையை, "இருஞ்சிறைத் தொழுதி யார்ப்ப யாழ் செத்து, இருங்கல் விடரளை யசுண மோர்க்கும்" என்ற **அகநானூற்**றடிகளாலும், "இன்னளிக்குரல் கேட்ட வசுணமா வன்னளாய் மகிழ்வெய்து வித்தாள்," என்ற **சிந்தாமணிப்** பாடலாலும், "யாழ், நறையடுத்த வசுண நன் மாச்செவிப் பறை யடுத்தது போலும்" என்ற **கம்பர்** வாக்காலும் அறியலாம். அதனைப் பிடிக்க எண்ணியவர்கள் செடி மறைவிலிருந்து யாழ் வாசிப்பார்களென்றும், அதன் இசையைக் கேட்டு அருகுற்று அசுணம் களிக்குமென்றும், அப்பொழுது அதனைப் பிடித்துக் கொள்ளுவார்களென்றும் தெரிகின்றது. அவர்கள் கை முதலில் யாழின் இசையால் அசுணத்திற்கு இன்பத்தை விளைவித்துப் பின்பு அதன் உயிருக்கே அழிவு சூழ்வதை **நற்றிணை**யில் உவமையாக எடுத்தாளுகையில், "அசுணம் கொல்பவர் கைபோனன்றும், இன்பமுந் துன்பமுமுடைத்தே" என்று ஒரு நல்லிசைப் புலவர் பாடியிருக்கிறார்.

கின்னரப் பறவையும் இத்தன்மையதே. வண்டி மாடு, கபில ஏற்றக் காளைகள் முதலியவற்றை இயக்கும்போது தெம்மாங்கு முதலிய பாடல்களைப் பாடுவதையும், அவைகளைக் கேட்டு அவ்விலங்குகள் தம் வேலையை வருத்தமின்றி அமைதியாகச் செய்து வருவதையும் இன்றும் காண்கிறோம். அந்தத் தெம்மாங்கு தேன் பாங்கு போலும்! குழந்தைகள் அன்னையரின் இனிய தாலாட்டிசையைக் கேட்டு அழுகை யோய்ந்து உறங்குவதை எவர்தாம் அறியார்?

வன்மனக் கள்வரும் தம் கொடுஞ்செயலை மறந்து இசை வயத்தராவர். பழைய நூலில் இத்தகைய செய்தியொன்று காணப்படுகின்றது. பாலை நிலத்தில் ஆறலைக் கள்வர் வழிவருவோர் பொருளையும் உயிரையும் கவர்வர்; பொருளில்லை யெனினும் வாளால் வெட்டப்பட்ட உடம்பு

துள்ளுவதைப் பார்த்தேனும் களிக்கக் கொலை செய்வர். அவர்முன் பொருநர் பாலைப்பண்ணைப் பாடினால், அக்கள் வர் தம் கையிலுள்ள ஆயுதங்களை நழுவவிட்டுத் தம் வன் றெழிலை மறந்து இன்புற்று இசைக்கு உருகுவாராம். இதனையே, "ஆறலைக் கள்வர் படைவிட வருளின், மாறு தலை பெயர்க்கு மருவின் பாலை" என்ற அடிகள் உணர்த்துகின்றன.

சீவக சிந்தாமணியின் கதாநாயகனான **சீவகன்,** ஆண்களைப் பார்ப்பதுமில்லை யென்ற விரதத்துடன் இருந்த **சுரமஞ்சரி** என்ற பெண்ணின்பால் ஒரு பழுத்த கிழவன் வேடங்கொண்டு சென்று, இசை பாடி அவளை வசப்படுத்தினான். அவன் இசையைக் கேட்ட பெண்டிர் யாவரும் வேடன் பறவை போலக் கத்தும் ஓசையைக் கேட்டு மயங்கி ஒரே கூட்டமாக ஓடிவரும் மயிலினங் களைப் போல விரைந்து வந்தனர் என்று கவி அவ்விடத் தில் வருணிக்கிறார்.

"கள்ள மூப்பி னந்தணன் கனிந்த கீத வீதியே
வள்ளி வென்ற நுண்ணிடை மழைமலர்த் தடங்கணார்
புள்ளி மம்ம திம்மகன் புணர்த்த வோசை மேற்புகன்(று)
உள்ளம் வைத்த மாமயிற் குழாத்தி னோடி யெய்தினார்"

என்பது அந்தப் பாட்டு.

இசை பிறரைத் தன் வயப்படுத்தும் என்னும்போது என்னுடைய இளமைக் காலத்தில் நடந்த ஒரு விஷயம் ஞாபகத்துக்கு வருகிறது. என்னுடைய தமிழாசிரிய ராகிய திரிசிரபுரம் மகா வித்துவான் **மீனாட்சிசுந்தரம் பிள்ளை** யவர்களிடத்துச் சிறப்புப் பாயிரம் பெறப் பல புலவர்கள் முயற்சி செய்ததுண்டு. சிறந்த சங்கீத வித்து வானும் மகா சிவபக்தரும் ஆகிய **கோபாலகிருஷ்ண பாரதியாரவர்கள்** தாம் இயற்றிய நந்தன் சரித்திரக் கீர்த்தனத்திற்குச் சிறப்புப் பாயிரம் கொடுத்துதவுமாறு பிள்ளையவர்களை வேண்டினார்கள். அதில் பிழைகள் காணப்பட்டமையாற் "சிறப்புப் பாயிரம் தரமாட் டோம்", என்று பிள்ளையவர்கள் மறுத்துவிட்டார்கள்.

மறுத்தும், பாரதியார் முயன்றே வந்தார். ஒரு நாள் பிள்ளையவர்கள் உள்ளே படுத்திருக்கும்போது அவர்கள் வீட்டிற்கு வந்த பாரதியவர்கள் பிள்ளையவர்கள் நித்திரை செய்கிறார்கள் என்பதை யறிந்து, எழுப்புதல் கூடாதென் றெண்ணிப் புறத்தே யிருந்து தமது நந்தன் சரித்திரக் கீர்த்தனையிலுள்ள, "கனக சபாபதி தரிசனம் ஒருநாள் கண்டாற் கலி தீரும்," என்ற கீர்த்தனையை இனிமையாக மெல்லப் பாடிக்கொண்டிருந்தார்கள். பிள்ளையவர்கள் விழித்துக்கொண்டு எழுந்து கீர்த்தனை முழுவதும் பாடும் வரையில் இருந்து கேட்டு மனமுருகி, "இதற்குச் சிறப்புப்பாயிரம் கொடாமலிருப்பது முறையன்று" என்று உடனே வந்து சிறப்புப்பாயிர மொன்றை வழங்கி னார்கள்.

ஈசுவரரே இசையின் வடிவமா யிருப்பவரென்றும், இசையிற் பிரியம் உடையவரென்றும் பெரியோர்கள் சொல்லியிருக்கின்றார்கள். "ஏழிசையா யிசைப்பயனாய்," "இயலவன் இசையவன்," "இயலிசைப் பொருள்க ளாகி," "ஏழிசையை" என வரும் தேவாரப் பகுதிகள் சிவபெருமான் இசை யுருவினரென்பதைத் தெரிவிக் கின்றன. இசையிலுள்ள விருப்பத்தினால் அனவரதமும் இசையைக் கேட்டு ஆனந்திக்கும்பொருட்டு இசையில் வல்ல இரண்டு கந்தருவர்களைச் சிவபெருமான் காதிற் குழையாக வைத்தருளி யிருக்கின்றனரென்று நூல்கள் கூறும். "இசை விரும்பும் கூத்தனார்," என்பதும் இறை வருடைய இசை விருப்பத்தை வெளியிடும். ஈசுவரர் கையில் வீணையை வைத்து அகத்தின்புறுவதாகப் பெரியோர் கூறுவர். "எம்மிறை வீணை வாசிக்குமே" என்பது தேவாரம். இத்தகைய மூர்த்தி 'வீணா தக்ஷிணா மூர்த்தி' என்று வழங்கப்படுவார். கண்ணன் வேய்ங் குழலோடும் விளங்கி இசை பரப்பியதை அறியாதார் யார்? இத்தகைய இசையின் பெருமையையும் இன்பத்தையும் இன்னும் விரிக்கிற் பெருகும்.

## குறிப்புரை

இசையின்பம் - இசையினுல் உண்டாகும் இன்பம்.

ஓர்ந்தே - ஆராய்ந்து தெளிந்தே. இயல் இசை நாடகம் என்ற முத்தமிழுள் இசை நடுவிலிருத்தலால் நடுநாயகம் எனப்பட்டது. நடுநாயகமாவது, பல மணிகள் பதித்த ஆரத்தில் மிகச் சிறந்ததாக இடையில் வைக்கப்படும் இரத்தினம். இயற்றமிழ் - முத்தமிழில் இசை நாடகங்களின் வேறுபட்டு இலக்கணத்திற்கு ஒத்து அமைந்த மொழித்தமிழ். நள்ளிருள் நாறி - நடுயாமத்தில் (மலர்வதால்) மணம் வீசுவது. பரிக்கோல் - குத்துக் கோல், அங்குசம்.

காழ்வரை நில்லா - குத்துக்கோலின் எல்லைக்கு அடங்காத, கடுங் களிறு ஒருத்தல்-கொடிய ஆண்யானை, யாழ் வரை - யாழின் எல்லையிலே, தங்கி ஆங்கு - அடங்கி நிற்றல்போல, மகரயாழ் - மகரமீன் வடிவமைந்த யாழ். மத்தம் புகர் முகம் களிறு - மதம்பிடித்த செம்புள்ளியுள்ள முகத்தைக்கொண்ட யானை.

"ஒலியல்": ஒலியுல் - தழைத்துள்ள, வார்மயிர் - நீண்டமயிரை, உளரினள் - ஆற்றியவளாய், கொடிச்சி - குறிஞ்சி நிலப்பெண், பெருவரை மருங்கில் - பெரிய மலையிலே, குறிஞ்சிபாட - குறிஞ்சிப் பண்ணைப் பாடா நிற்கையில், ஒய்என - விரைவாக, குரலும் - தினைக்கதிரையும், நிலையின் உம் - (தான்) நின்ற நிலையினின்றும், பெயராது - அப்பாற் செல்லாமலும், படாஅ - மூடாத, பைங்கண் - (தனது) பசியகண், பாடு - மூடுவதை, பெற்று - அடைந்து, மறம் புகல் மழகளிறு - வீரச் செயலை விரும்புகின்ற, இளைய யானை. உறங்கும்-உறங்குவதற்கு இடமான, நாடன்-மலைநாட்டை யுடையவன்.

வீணை கெழீஇ - வீணையை மீட்டி, அடி உறை - பாதங்களில் வழிபடுவதை, மாணி - மாணுக்கன், குழலால் - புல்லாங்குழலை ஊதி, ஆ - பசுக்களை, குவித்தார் - திரட்டியவராகிய, இன்னு இசை - கடுமையான ஒலி. இருஞ்சிறை தொழுதி - பெரிய சிறகையுடைய வண்டுகளின் கூட்டம். யாழ்செத்து - யாழின் இசையாகக் கருதி, இருங்கல் - பெரிய கற்களைக் கொண்ட, விடர் - மலைப் பிளவுகளில், அளை - குகையில் சேருந்தன்மையுள்ள, அசுணம் - அசுணமா, ஓர்க்கும் - ஆராய்ந்து (உற்றுக்) கேட்கும்.

இன் அளிகுரல் - வண்டுகளின் இனிய இசையை, யாழ் நறை-யாழின் ஒலியாகிய தேனை, அடுத்த - உட்கொண்ட, அசுணம்நல்மா-நல்ல அசுணமாவின்.

நன்றும் - மிகவும், இயக்கும்போது-நடத்தும்போது, ஆறு அலை கள்வர் - வழியில் செல்வோரை வருத்துகின்ற கள்வர். பொருநர் - இசைபாடும் கூத்தர், படை விட - (தம் கையிற் கொண்டுள்ள) படைக்கலத்தை நழுவ விடும்படி, இன்பாலை - இனிய பாலைப்பண்.

"கள்ள மூப்பின்": கனிந்த - இனிக்கப்பாடிய, கீதவீதியே - பாட்டின் வழியே, வள்ளி - கொடி, மழை - குளிர்ந்த, புள்ளுமம் மகன் -

புள்ளின் ஓசையைத் (தன்னிடத்தே) யுடைய மகன், மதிபுணர்த்த - (தன்) ஆலோசனையாலுண்டாக்கிய, ஓசைமேல் - தன் இனத்தின் ஓசைபோலக் கூவுகின்ற ஓசையின்மேலே. புகன்று - விரும்பி, மாமயில் குழாத்தின் - பெரிய மயிலின் கூட்டம்போல.

அனவரதமும் - எப்பொழுதும். இரண்டு கந்தருவர்கள்-அசுவதரன், கம்பளன் என்பவர்.

## பயிற்சி

1. பொருள் கூறுக : பரிக்கோல், ஒருத்தல், கொடிச்சி, விடர், அளை, வள்ளி.

2. முத்தமிழ், நடுநாயகம், கின்னரம், அசுணம், தெம்மாங்கு, நள்ளிருள்நாறி—சிறு குறிப்புத் தருக.

## வினாக்கள்

1. தமிழர் இசையின் பெருமையை உணர்ந்தவர் என்பதை எப்படி நிரூபிக்கலாம்?

2. 'போது' என்பதன் பெயர்க் காரணத்தை ஆராய்க.

3. களிறு, அசுணமா என்பவை இசையில் ஈடுபடுவதற்கு ஒவ்வோர் உதாரணம் தருக.

4. பசுக்கள் இசைக்கு வசப்படும் என்பதை விளக்குக.

5. இசை கொடியவரையும் வசப்படுத்த வல்லது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு வேண்டும்.

6. சீவகன் இசைத்திறனால் இயற்றியது என்ன?

7. மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இசையில் ஈடுபட்ட நிகழ்ச்சி யாது?

8. திருமாலும் சிவபெருமானும் இசையில் ஈடுபட்டவர் என்பது எவ்வாறு விளக்கப்படுகிறது?

## கட்டுரையாக்கம்

1. இப்பாடத்தில் வந்துள்ள பொருளைக் கொண்டு 'இசையின் சிறப்பு' என்பதுபற்றி ஒரு சிறு கட்டுரை வரைக.

2. 'சீவகன் இசைத்திறம்' என்பது பற்றி ஒரு சிறு கட்டுரை எழுதுக.

## 2. எனது இலங்கைச் செலவு

திரு. வி. கலியாணசுந்தர முதலியார்

'இலங்கைச் செலவு' என்னும் தலைப்பை நோக்கியதும் சிலர் 'இலங்கைக்குச் சென்று திரும்பியதற்கு நேர்ந்த செலவு போலும்' என்று நினைக்கலாம். ஈண்டுச் 'செலவு' என்னுஞ் சொல்லைப் பொருட்செலவு என்னும் பொருளில் பெய்தேனில்லை. தரை-நீர்ச் செலவு என்னும் பொருளில் அச் சொல்லைப் பெய்தேன். இந்நாளில், செலவு என்னுஞ் சொற்குப் பதிலாகப் பெரிதும் 'யாத்திரை' என்னுஞ் சொல் ஆட்சி பெற்றிருக்கிறது. பண்டைத் தமிழ் நூல்களில் செலவு என்னுஞ் சொல்லே ஆட்சி பெற்றிருத்தல் காணலாம். 'செங்கோன் தரைச் செலவு' என்று பெயர் தாங்கிய ஒரு தமிழ் நூலுண்மையும் கவனிக்கற்பாலது.

நாங்கள் கப்பலினின்றும் இறங்கி, இலங்கைப் புகை வண்டியில் ஏறினேம். வழி நெடுகப் பசுமை உமிழும் மலைகளின் செறிவும், சூழலும், நிரையும், அணியும் உள்ளத்தைக் கவர்கின்றன. முகிற் குழாங்கள் மூண்டெழுந்து படிப்படியே அசைந்தும் ஆடியும் ஓடியும் மலை முகடுகளிற் சூழ்ந்து தவழ்ந்து பாகை போல் பொலியுங் காட்சியும்—அம் மலைகளின் உடல் புலனாகாவாறு பசும் பட்டுப் போர்த்தாலெனப் பொழில்கள் துதைந்துள்ள அழகும்—புலன்களை ஒன்றச் செய்கின்றன. மலையுச்சியினின்றும் தரைவரை, நிரைநிரையாகச் சரிந்தும் செறிந்தும் நிற்கும் தெங்கின் பெருக்கும், அவ்வாறே தெங்கைவிட்டுப் பிரியாது அணித்தே புடைசூழ்ந்து நிற்கும் கமுகின் உயர்வும், அவைகளுடன் நீக்கமின்றி வாழ்க்கைத் துணையெனச் சுற்றிச் சுற்றிப் பின்னிக் கிடக்கும் கான்பரந்த செடி கொடிகளின் ஈட்டமும், 'வானுலகேறப் பச்சைப்படாம் விரித்த படிகளெனத் திகழ்கின்றனவோ?' என்றும் ஐயுறலாம். புகை வண்டி அப்பசுமை நிலத்தில் பறந்தோடுவதை நோக்குழி, அது பச்சை மரகத மலையைக் கிழித்தோடும் அம்பெனத்

132672

தோன்றுகிறது. பசுமைக் காட்சியில்லாத இடனும் உண்டோ? கண்ணுக்கும் மனதுக்கும் இனிமையூட்டும் பசுமையின் பெற்றியை என்னென்றுரைப்பேன்!

புகைவண்டியின் விரைவில், இடையிடையோடுஞ் சிற்றருவிகளின் தோற்றம், பசிய வானில் மின்னெலி தோன்றி மறைவது போலப் புலப்படுகிறது. பச்சைப் பசுங்கடலில் சிறு சிறு தீவுகள் நிலவுவதை மான, கூரை வேய்ந்த சிறு சிறு குடில்கள் நிலவுகின்றன. அக் குடில்களின் நடுவண் ஆடவர் மகளிர் குழந்தைகள் காளைமயில் கன்றுகளென நிற்கின்றனர். அவ் வீட்டமும் இக் கூட்டமும் இயற்கையோடியைந்து இன்பமாகப் பொலிகின்றன. ஆங்காங்கே சிற்சில இடங்களில் தற்கால நாகரிகக் கட்டடங்களும் புலனுகின்றன. அவைகளைக் காணுந்தோறும் காணுந்தோறும் பொல்லா அரக்கர் குழுவைப் பார்ப்பது போன்ற நிகழ்ச்சி யுள்ளத்துருமற் போகாது. கூரை வேய்ந்த வீடுகள் இயற்கையோடியைந்து இன்பூட்டுவது போலப் பெரும்பெரும் மாடிகள் இயற்கையோடியைந்து நிற்பினும் இன்பூட்டுவதில்லை.

இந்நிலையில், வண்டி குறித்த காலத்துக்கு இரண்டரை மணி நேரங் கடந்து, நிலையம் சேர்ந்தது. சேர்ந்ததும், கொழும்பிலுள்ள 'இந்திய வாலிப சங்க' நேயர்கள் ஆண்டுப் போந்து, 'தென்னுடைய சிவனே போற்றி' என்று ஒருவர் முழங்க, மற்றவர், 'எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி' என்று எதிரொலி போல் முழங்க, எங்களை வரவேற்றுர்கள். செயற்கை வெம்மையில் வீழ்ந்து வருந்திக்கொண்டிருந்த எனதுள்ளம் தமிழ்மறைமீது ஓடிற்று. 'தென்னுட்டவர்க்குச் சிவனுக விளங்குவோனே, எந்நாட்டவருக்கும் இறைவனுக விளங்குகிருன்' என்று எண்ணி எண்ணி, அம் மறையருளிய மாணிக்கவாசகனுரை உள்ளத்தால் போற்றிப் போந்தேன். எனது எளிய வாழ்வுக்கும் எனது மனத்துக்கும் இனியதாய், வெளியில் போந்ததுங் கடற்காட்சி நல்கவல்லதாயுள்ள ஓர் இன்ப நிலையத்தில் வதியுமாறு அன்பர்கள் என்னையும் நண்பரையும் விடுத்தார்கள்.

VB
031 (9) N55

கொழும்பிற் கணித்தாயுள்ள வெள்ளவத்தையில் நாங்கள் தங்கியிருந்தோம். நாங்கள் சென்ற காலம் ஆடி வேல் விழாக் காலம். கதிர்வேற் பெருமான் வெள்ளித் தேர்மீது இவர்ந்து, கொழும்பினின்றும் வெள்ளவத்தைக்கு எழுந்தருளி அடியவர்க்கு அருள்செய்கிருர்.

அவ்விழாவில் முருகப்பெருமானைப் போற்ருத குலத்தார் இல்லை. எல்லாச் சமயத்தாரும் சாதியாரும் காணிக்கை செலுத்தி நெற்றியில் திருநீறணிந்து செல்கின்றனர். 'முருகக் கடவுள் தமிழ்க் கடவுள்' என்பது அவ்விழாவில் நன்கு தெரிகிறது. பல சமயக் கொள்கை உடைய தமிழ் மக்கள் அனைவரும் முருகக் கடவுளை வழிபடுதல் கருதத் தக்கது. நமது தென்னுட்டில் வேறு மதம் புகுந்த தமிழ் மக்கள் முருகக் கடவுளை வழிபடுகிருர்களில்லை. இலங்கைத் தமிழ் மக்கள் முருகன் வழிபாட்டில் ஒன்றி நிற்கிருர்கள்.

கொழும்பு 'இந்திய வாலிப சங்க'த்தின் ஆண்டு விழாவில் தலைமை வகிக்கவே யான் அழைக்கப்பட்டேன். அவ்விழா அழகியதொரு கொட்டகையில் நடைபெற்றது. எனக்குச் சங்கச் சார்பாக வழங்கப்பெற்ற நன்மொழியில் சங்கத்தார் என்மாட்டுள்ள முழு அன்பையும் காட்டியிருக்கிருர். அவருக்கு நன்றி கூறுமுகத்தான், அந் நன்மொழியைத் தழுவியே எனது முன்னுரைக் கடனுற்றினேன். அம் முன்னுரைக்கண் இந்தியாவில் பல குறைகள் இருக்கின்றன என்றும்—அவை (1) பெண்ணை அடிமைப் படுத்தியிருத்தல், (2) மக்களுள் பிறப்பால் உயர்வு தாழ்வு கொண்டமை (3) பிறப்பில் தீண்டாமை வகுத்தது, (4) கருத்து வேற்றுமைக்கு மதிப்புக் கொடாமை, (5) பொருமை என்பன என்றும்—பேசி, அவைகளைப் பீடிகையாகக் கொண்டு, சுமார் ஒன்றரை மணி நேரம் சொற்பொழிவு நிகழ்த்தினேன். இந்திய இளைஞர் உலகில் அவ்வைம்பெருங் குறைகள் இருத்தலாகாதென்றும், அக் குறைபாடுகள் உள்ளமட்டும் இந்தியா உரிமை பெறல் அரிதென்றும், அவைகளை அன்புவழி நின்று களைய

இளைஞர்கள் முயலல் வேண்டுமென்றும் இளைஞர்களுக்கு விண்ணப்பஞ் செய்துகொண்டேன்.

இலங்கை வாசிகளில் பெரும்பான்மையோர் சிங்களவரே. அவருள் ஆங்கிலம் பயின்ற ஆண்மக்களும் பெண்மக்களும் ஐரோப்பிய நடை உடை பாவனைகளைக் கொண்டிருத்தலால் அவர்களைப் பற்றி ஒன்றுங் கூறவேண்டுவதில்லை. ஐரோப்பிய நாகரிகத்தில் தோயாத சிங்களவ ஆண்மகன் மிக வலியனாய், கூரிய நோக்குடையனாய்க் காணப்படுகிறான். அவன் முகத்தில் சாந்தம் காணும். அவன் எளிய உடையே அணிகிறான். பலர் மயிரைக் கோதிக் கட்டி, வளைந்த தந்தச் சீப்பைச் செருகியிருக்கின்றனர். பெண்மகள் மிகத் திண்மையாய் இருக்கிறாள். அறிவு விளக்கம் புலப்படவில்லை. அவள் தன் அரையில் நான்கு முழத் துண்டையும், மார்பு மறைய ஒரு கஞ்சுகத்தையும் அணிந்திருக்கிறாள்; மற்ற மேலாடை ஒன்றுமில்லை.

கொழும்பினின்றும் கண்டிக்குப் புறப்பட்டோம். எங்களை வழிகூட்டி அனுப்பப் போந்த அன்பர்களோடு நாங்கள் பேசிக் கொண்டிருந்தமையால், எங்கட்குச் செயற்கை வெம்மை புலனாகாமலிருந்தது. வண்டி புறப்பட்டதும் அவ்வெம்மைக் கொடுமை வருத்தத் தொடங்கிற்று. சிறிது நேரத்துக்குள் இயற்கை அன்னை காட்சி வழங்கினாள். அவ்வழியின் இயற்கை வளத்தை என்னென்று சொல்வேன்! ஸ்ரீநகர், டார்ஜிலிங், ஆல்ப்ஸ் முதலிய இடங்களிலுள்ள இயற்கை வளங்களைப்பற்றிக் கேள்வியுற்றிருக்கிறேன்; நூல்கள் வாயிலாகப் படித்துமிருக்கிறேன்; அவைகளை நேரே கண்டதில்லை. கண்டிக்குச் செல்லும் வழிநெடுக இயற்கை அன்னையின் திருவோலக்கமன்றி வேறென்ன இருக்கிறது? எங்கணும் மலைகள்—மலைத்தொடர்கள்—மலைச் சூழல்கள்; எங்கணுஞ் சோலைகள்-சாலைகள்-செடிகள் கொடிகள்-பைங்கூழ்கள்; எங்கணும் அருவிகள்-ஆறுகள் நீர் நிலைகள்—இவை யாவும் ஒன்றோடொன்று கலந்து அளிக்குங் காட்சி யன்றோ கடவுட் காட்சி? நூற்றுக்கணக்கான குற்றாலங்

கள்—நூற்றுக்கணக்கான பாபநாசங்கள்—ஆண்டுள்ளன. மலைகள் எத்துணை எத்துணை விதமாகக் காட்சி வழங்கு கின்றன! சில இடங்களில் மலைகள் படிப்படியாக இழிந்து இடை வெளியிட்டு இவர்ந்து நிற்குந் தோற்றம் இயற்கை ஊசல்போல் விளங்குகிறது. சில இடங்களில் மலைகள் சிங்கம் எழுந்து நின்று பாயவருந் தோற்றத்தை வழங்கிக் கொண்டு நிற்கின்றன. சில இடங்களில் அவைகள் செய்கரைபோல் நேர்மையாக நிற்கின்றன. பசுமை நில வாத மலைப்பாங்கரே காணும். தெங்கும் கமுகும் ரப்பர் மரங்களும் ஒரு பெரும் பசுங்கடல் பொங்கி வருதல்போல் காணப்படுகின்றன. சில இடங்களில் நாலுபக்கங்களி லும் மலைசூழ்ந்து நிற்ப, அவைகளினின்றும் பொழியும் அருவி அவைகளினடியில் நீரரண் என ஓடித்திகழ, நடு வண் பச்சைப்பசேலென வான்பயிர் தலையசைத்துநிற்கும் அழகைக் கண்டு கண்டு உவந்தேன். பசிய மலைச் சோலை களைப் பார்க்குந்தோறும் பார்க்குந்தோறும் இயற்கை இன்பவாழ்வு உள்ளத்தில் தோற்றமுரு நிற்கும். இப் பொழுது ஐரோப்பியத் தோட்டக்காரரும் மற்றவரும் இப் பசுங்காடுகளைப் பண்படுத்திப் பொருளீட்டுந் துறை கண் டிருக்கின்றனர். நம்முன்னோர் அவ்வியற்கை நிலையங் களிடை வதிந்து, இயற்கையின் வாயிலாக இறைவனைக் காணும் எளிய வாழ்வு நடாத்தினர். பசுமை பொங்கும் மலைகளைப் பார்த்துக்கொண்டே கண்டி சேர்ந்தோம். நிலை யத்தருகே கண்டித் தமிழ்மக்கள் அன்போடு எங்களை வர வேற்றார்கள். நாங்கள் ‘தமிழக’ நிலையத்தில் தங்கியிருந் தோம். ஆங்குச் ‘சைவம்’, ‘தமிழ் வரலாறு’ என்னும் இரண்டு சொற்பொழிவுகள் நடைபெற்றன. ஆங்குள்ள தமிழர், தமிழ் மனத்தோடு எங்களுடன் உறவாடினர் என்று சுருங்கச் சொல்லி, மேலே செல்கிறேன்.

கண்டி, கண்டின்புறத்தக்க இடங்களில் ஒன்று. கண்டியை இயற்கைக்குடில் என்று கூறுவது மிகையா காது. கண்டியிலுள்ள விவசாயக் கல்லூரி, தோட்டம் முதலியவற்றைக் கண்டோம். அத்தோட்ட வனப்பை வருணிக்கப் புகுந்தால் இக்கட்டுரை வருணனை உரை

யாகவே முடியும். இயற்கை அரசியின் உறையுளெல்லாங் கண்டு, பின்னர்ப் பௌத்தமடம்–கலாசாலை–கோயில் முதலிய அறநிலையங்களுக்குச் சென்றோம். மடத்தில் பெரிய பௌத்த குருவைப் பார்த்து உரையாடப் போனேன். அவர்க்குத் தமிழுந் தெரியவில்லை; ஆங்கில முந் தெரியவில்லை. அவர் ஆணைப்படி பௌத்த வித்தி யாலயம் போந்து, ஆண்டுள்ள ஓர் ஐரோப்பியர்பால் உரையாடினேன். அவர் பௌத்த நூல்களில் ஆராய்ச்சி யுடையவர் என்பது, அவரது அன்பார்ந்த பேச்சால் தெரியவந்தது. சம்பாஷணையால் நாங்கள் ஒருமை முடிவே பெற்றோம்.

கண்டியின் பலதிறக் காட்சி கண்டு, அன்பர்பால்விடை பெற்று, யாழ்ப்பாணம் நோக்கினோம். யாழ்ப்பாணத்தின் இயற்கை வளம் நமது தென்னாட்டு இயற்கை வளத் துக்கு அரண் செய்வது. இலங்கையின் மற்றப் பகுதியின் இயற்கைவளம் யாழ்ப்பாணத்தில் இல்லை. புகையிலைப் பெருக்குக் குறிக்கத் தக்கது. கொழும்பு வழியிலும் கண்டி வழியிலும் தெங்கின் பசுமை கண்ணுக்கு விருந்தளித்தது. யாழ்ப்பாணத்திலோ அத்தென்னங் கீற்றுக்களின் வேலி கள் கண்ணைக் கவர்ந்து நின்றன. யாழ்ப்பாணத்தில் சொற்பொழிவுகள் பல நிகழ்ந்தன. ஒரே நாள் நான்கு இடங்களில் சொற்பொழிவு நிகழ்த்தவும் நேர்ந்தது. பல கல்லூரிகளிலும் சொற்பொழிவுகள் நடைபெற்றன. கல்லூரிகளில் எனதுள்ளத்தைக் கவர்ந்தது சர் பொன்னம் பலம் இராமநாதன் பெண்மக்கள் கல்லூரி. அக்கல்லூரி யைப் பெருஞ் சிதம்பரமாக மனத்தால் தொழுதேன். தமிழும் சைவமும் ஆண்டிருந்து புத்துயிர் பெறும் என்னும் உறுதியும் எனக்குத் தோன்றிற்று.

யாழ்ப்பாணக் குடிமக்கள் தமிழர்; வேளாளர்; சைவர். அவர் நமது தமிழ் நாட்டினின்றும் அவண் குடிபுகுந்தவர். அவருடன் போந்த வேறுசிலருமிருக்கின்றனர். தாய் நாட் டின் நினைவு தோன்ற ஆண்டுள்ள தமிழ் மக்கள் சில இடங்களுக்குத் திருநெல்வேலி, பட்டுக்கோட்டை முதலிய பெயர்களைச் சூட்டி இருக்கிறார்கள். யாழ்ப்பாணத் தமிழ்

மக்கள் எங்கள்பால் காட்டிய அன்பு என்றும் மறக்கற் பாலதன்று. தென்னாட்டுத் தமிழ் மக்களுக்கும் தங்கட்கும் இடையறுத் தொடர்பிருத்தல் வேண்டுமென்று கூருத அன்பர்கள் இல்லை.

## குறிப்புரை

செலவு என்பதற்குச் செல்லுகை என்றும், விரயம் என்றும் பொருள். பெய்தேன் - பயன்படுத்தினேன். தரை நீர்ச் செலவு - தாரை மூலமாகவும் கடல் வழியாகவும் போதல். ஆட்சி - பிரயோகம். கிளந்து - விவரித்து. உள்ளக்கிடக்கை - மனக்கருத்து. நோக்கோடு - எண்ணத்தோடு. வரைவான் - எழுதும் பொருட்டு. ஈட்டம் - கூட்டம்.

முகிற்குழாம் - மேகக்கூட்டம். முகடு - உச்சி. துதைந்துள்ள - நெருங்கியுள்ள. ஒன்ற - பொருந்த. செறிந்து - நெருங்கி. கமுகு - பாக்குமரம். கான் - வாசனை. மான - ஒப்ப.

தமிழ்மறை - திருவாசகம். மிகை - குற்றம். புறக்கோலம் - வெளிவேடம். பிலிற்ற - வெளிப்பட்டுச் சொரிய. முருகி - முதிர்ந்து. மருட்சி - மனமாருட்டம். கோலி - முயன்று. கஞ்சுகம் - இரவிக்கை. திருவோலக்கம் - சன்னிதானம். பைங்கூழ் - பசுமையான பயிர்.

வான் பயிர் - ஓங்கிய பயிர். பாங்கர் - பக்கம். உறையுள் - வசிக்குமிடம். அரண் செய்வது - காவல்செய்வது. பரிணமித்தல் - நிலைமாறுதல்.

## பயிற்சி

1. பொருள் கூறுக: ஈட்டம், முகடு, கமுகு, மிகை, மருட்சி, கஞ்சுகம், உறையுள், முகில்.

2. சரிந்து, செறிந்து—இவை என்ன சொற்கள்? ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

3. செலவு, காட்சி, ஆட்சி, கிளந்து, மருட்சி—பகுதி கூறுக.

## வினுக்கள்

1. 'செலவு' என்னும் சொல்லுக்கு என்னென்ன பொருள் உண்டு? அச்சொல் இப்பாடத்தில் என்ன பொருளில் வந்துளது?

2. ஆசிரியர் புகை வண்டிப் பிரயாணத்தில் வழி நெடுகக் கண்ட காட்சி எவ்வாறிருந்தது?

3. இந்திய வாலிப சங்க நேயர்கள் ஆசிரியரை எவ்வாறு வரவேற்ருர்கள்? அப்பொழுது ஆசிரியர் எதை நினைந்து யாரைப் போற்றினுர்?

4. இலங்கைத் தமிழ் மக்கள் முருகன் வழிபாட்டில் ஒன்றி நிற்கிருர்கள் என்பதை ஆசிரியர் எவ்வாறு அறிந்தார்?

5. இந்திய வாலிப சங்கத்தின் ஆண்டு விழாவில் ஆசிரியர் கூறியவைகளில் முக்கியமானவை எவை ?

6. கொழும்பு வாசிகளின் வாழ்க்கை நிலை எத்தகையது ?

7. கண்டிக்குச் செல்லும் வழியில் உள்ள வளத்தை விவரி.

8. கண்டி நகரைப்பற்றி நீவிர் அறிவதென்ன ?

9. யாழ்ப்பாணத்தின் வளம் எப்படிப்பட்டது ?

10. யாழ்ப்பாணத்து மக்களைப்பற்றிச் சுருக்கிக் கூறுக.

## கட்டுரையாக்கம்

1. 'இலங்கை வழங்கும் இயற்கைக் காட்சி' என்பது பற்றி இருபது வரியில் எழுதுக.

2. நீங்கள் சென்ற ஏதேனும் ஒரு பிரயாணத்தில் கண்ட காட்சிகளைப்பற்றி ஒரு சிறு கட்டுரை வரைக.

## 3. பண்டைத் தமிழர் வாணிகம்

வித்துவான் வே. வேங்கடராஜுலு ரெட்டியார்

நந்தம் தமிழ் நாட்டிற்குப் பண்டைக் காலத்தில் தமிழகம் என்னும் பெயர் வழங்கி வந்தது. தமிழகம் நெடுங்காலத்திற்கு முன்னரே சிறந்த நாகரிகம் படைத்து, உயர்நிலையில் ஒளிர்வுற்றிருந்தது. அக்காலத்துத் தமிழ் மக்கள் கல்வி, கைத்தொழில், வாணிகம், அரசியல், இல் வாழ்க்கை முதலியன பல துறைகளிலும் மேம்பாடு எய்தி யிருந்தனர் என்பது ஒருதலை. ஈண்டு, அவர்களது வாணிகச் சிறப்பினைச் சிறிது கூறுவோம்.

ஏறக்குறைய இரண்டாயிரம் யாண்டுகளுக்கு முன்னரே தமிழ் மக்கள் பிறநாட்டவரோடு வாணிகம் நடத்தி வந்தனர். கிரீஸ், ரோமாபுரி முதலிய ஐரோப்பிய நாட்டினர், அக்காலத்தில் நம் நாட்டின் விளைபொருள்களை பறிந்து விரும்பிவந்து, அவற்றைக் கொள்வாராயினர். வாணிகத்தின் பொருட்டு நமது நாட்டினின்று ரோம தேசத்திற்குத் தூது சென்ற செய்தி, வரலாற்று நூல்களான் அறியப்படுகின்றது. கி. பி. முதல் நூற்றுண்டில் வாழ்ந்தவராகிய ப்ளினி என்னும் யவன ஆசிரியர் எழுதியுள்ள வரலாறுகளால், நம்நாட்டு வாணிகச் செய்திகள் சில அறிய வருகின்றன. அவையாவன: ஐரோப்பாவினின்று நமது நாட்டிற்குக் கப்பல்கள் வரும் வழியும், நமது நாட்டிலுள்ள முக்கியமான துறைமுகங்களின் நிலையும் பிறவுமாகும்.

அக்காலத்தை யடுத்து எழுதப்பட்ட பெரிப்ளூஸ் என்னும் நூலிலும், மேலைக் கடற்கரையிலுள்ள முசிறி என்னுந் துறைமுகப் பட்டினத்தில், ஐரோப்பிய நாட்டினின்று மரக்கலங்கள் வந்து தங்கியிருக்கும் என்றும், ஆண்டுக் கலங்கள் தங்குவதற்கு ஏற்ற அமைதியுண்டு என்றும், ஈயம், தகரம், கண்ணடி, மது முதலிய பொருள்களை விற்றுவிட்டு, மிளகு, யானைமருப்பு, வயிரம், பவழம், வெற்றிலை, பட்டாடை முதலியவற்றை இங்கு நின்றும் கொண்டு செல்வர் என்றும் எழுதப்பட்டுள்ளன. இவையே

யல்லாமல், நெய் தோகை முதலிய பொருள்களையும், குரங்கு கடுவாய் யானை முதலிய விலங்குகளையும், மயில் கிளி முதலியன பறவைகளையும் இங்கிருந்து கொண்டு போயினர் எனவும் அறிய வருகின்றது.

கி. பி. இரண்டாம் நூற்றுண்டில் வாழ்ந்திருந்த யவன ஆசிரியராகிய தாலமி என்பவரும் நம் நாட்டு வாணிகத்தைக் குறித்துத் தம் நூலில் எழுதியுள்ளார். சிறந்த துறையாகிய முசிறியையும், கருவூர், கன்னியாகுமரி முதலிய ஊர்களையும், பெரியாறு, தாமிரவருணி முதலிய யாறுகளையும் பற்றிய செய்திகள் அவர் நூலிற் காண்கின்றன. அன்றியும், முசிறியில் ரோம் தேசத்தவர்களின் ஆலயம் ஒன்று அமைந்திருந்தது என்னுஞ் செய்தியும் அறியப்படுகின்றது. இது நிற்க,

தமிழ் நாட்டில், வேலூர், மதுரை முதலிய இடங்களில் வெட்டி யெடுக்கப்பட்டுள்ள நாணயங்களாலும் வாணிகச் செய்தி வலியுறுகின்றது. அவை, கி. பி. முதல் நூற்றுண்டில் வாழ்ந்திருந்த 'க்ளாடியஸ்' என்னும் அரசன் முதலியோர் கலந்தவை என்று அறியப்படுதலின், அக்காலத்திலேயே ரோம் தேசத்தோடு நம் நாட்டவர் வாணிகஞ் செய்து வந்தனர் என்பது திண்ணம். இவையேயன்றி, பிறநாட்டு வாணிகத்தைக் குறித்துப் பண்டைத் தமிழ் நூல்களிலும் சில செய்திகள் கூறப்பட்டுள்ளன. அவற்றை இனி நோக்குவோம்.

பண்டைத் தமிழ் நூல்களுள் ஒன்றுகிய அகநானூற்றில், "சேரர்களுக்கு உரிய முசிறி என்னுந் துறைமுகப் பட்டினத்தில், யவனருடைய கப்பல்கள் பொன்னைக் கொண்டுவந்து கொடுத்து, மிளகு வாங்கிக்கொண்டு மீளும்" என்று கூறப்பட்டுள்ளது. அன்றியும் அக் கப்பல்கள் முசிறியை யடுத்துப் பாயும் பேராற்றில் வந்து தங்கும் என்பது குறிக்கப்பட்டுள்ளது. புறநானூறு என்னுந் தொகைநூலில், "முசிறித் துறைக்கண், கப்பலில் வந்த பொன்னை மிளகின் விலைக்குப் பெற்று, அதனைத் தோணியில் வைத்துக் கரைக்குக் கொண்டு வருவர்" எனக் கூறப்பட்டுளது. அக்காலத்தில், மேல்

நாடுகளிலிருந்து சிறந்த தேன்வகைகள் நம் நாட்டிற்கு வருதல் உண்டு. அரசர்கள் அவற்றை விரும்பிப் பெற்று அருந்தி இன்புறுவர். மேற்கூறியவற்ருல், முசிறித்துறை கப்பல் வந்து தங்குவதற்கு ஏற்ற வசதி யுடையதா யிருந்தது என்பது புலனுகும். இவ்வுண்மை, "சேர வேந்தருடைய முசிறிப் பட்டணத்தில், எகிப்து தேசத்துக் கப்பல்களும் பிறவும் வந்து தங்குகின்றன; அது மிக்க வளமுள்ள நகரமாய் இலங்குகின்றது" என்று பெரிப்ளூஸ் என்னும் நூலிற் கூறப்பட்டுள்ளதனுலும் வலியுறும்.

பண்டைத் தமிழ்நூல்களில் யவனருடைய பெயர் பலவிடங்களிலும் காண்கின்றது. அவற்றில் அப்பெயர், கிரீஸ் தேசத்தவரையும், ரோம் தேசத்தவரையும் குறிப்ப தாகும். அரேபியா தேசத்தவரைக் குறிக்கும் இடனும் உண்டு. இதனை ஆராய்கையில், யவனர் என்னும் பெயர், முதன்முதலில் கிரேக்கரைக் குறித்து வழங்கியது எனவும், பின்னர் அஃது, உரோமர் முதலியோரைக் குறிக்க லாயிற்று எனவும் தோன்றுகிறது. முதற்கண் வரும் புறநாட்டவர்க்கு வழங்கும் பெயர், பின்னர் வரும் புற நாட்டவர்க்கும் வழங்குதல் உண்டு. மலையாளிகள் புற நாட்டவராகிய முஸ்லிம்களை வழங்கிய 'ஸாயபு' என்னும் பெயரையே ஐரோப்பியருக்கும் வழங்குதல் ஈண்டைக்கு அறியத்தக்கதாகும். இவ்வாறே கன்னடரும் முஸ்லிம் களுக்கு வழங்கிய 'ஸாஹேபர்' என்னுஞ் சொல்லை ஆங்கிலேயருக்கு வழங்குதல் இவ்வழக்கினை வலியுறுத்தும்.

பண்டைக் காலத்தில், மேலைக்கடல் சேரவேந்தருக்கு உரிமை யுடையதா யிருந்தது. அக்கடலில் அவருடைய கலங்களே செல்லலாகும்; அவரது ஆணையின்றிப் பிறர் கலங்கள் ஆங்குச் செல்லுதல் கூடாது. சேரர், பெருங் கடலில் கருங்கலங்களைச் செலுத்துதலில் தேர்ந்தவராய்த் திகழ்ந்திருந்தனர்.

நம்நாட்டில் துறைமுக நகரங்கள் பலவற்றிலும் பல்வேறு நாட்டினர் தங்கியிருப்பர். சோழருக்குரிய புகார் நகரத்தைக் கூறுமிடத்து, இளங்கோவடிகள்,

"பயனற வறியா யவன ரிருக்கையும்
கலந்தரு திருவின் புலம்பெயர் மாக்கள்
கலந்திருந் துறையும் இலங்குநீர் வரைப்பும்
ஓசுநர் செறிந்த ஊன்மலி யிருக்கையும்"

உள்ளன என்று உரைத்திருப்பது அறியத்தக்கது. அந் நகரில், உயர்ந்தோங்கிய கலங்கரை விளக்கம் (Light House) இலங்கியிருந்தது. சாவகநாட்டினருக்கும் நம் நாட்டினருக்கும் வாணிகம் நடந்துவந்த செய்தி. மணி மேகலை என்னுங் காப்பியத்தானும் நன்கு அறியப்படும். கடாரத்திலிருந்து இரும்பும், ஈழத்திலிருந்து செம்பும், யவனத்திலிருந்து பொற் பணிகளும் இந்தத் தேயத்திற்கு வந்தன என்று பெருங் கதை என்னும் பழங்காப்பியம் பகரும். சேய்நாட்டினின்று பெரிய மரக்கலங்கள் கடும் பரிகளைக் கொண்டு ஒருங்குகூடி வந்து, பாண்டியநாட்டில் பகர்ந்து செல்லும் என்பது மதுரைக் காஞ்சியால் அறிய வருகின்றது. இனி, புகார் நகரத்தின் துறைநிலையைக் குறித்துப் பண்டைநூலிற் கூறியிருப்பவற்றை இங்கு நோக்குவோம்.

புகார்த்துறைக்கண், ஈழத்தினின்று வந்த உணவுப் பொருள்களும், கடாரத்தினின்று வந்த விளைபொருள் களும், கங்கையாற்றினின்று வந்த மணியும் பொன்னும் களிறும், இமயமலையினின்று வந்த மணியும் பொன்னும், பொதியில் மலையினின்று வந்த ஆரமும் அகிலும், தென் கடலிற் பிறந்த தரளமும், கீழ்க்கடலிற் பிறந்த பவழமும், மேல்மலையில் விளைந்த கறியும், கலங்களில் வந்த சிறந்த புரவிகளும், கருப்பூரம் முதலிய சிறப்புடைப்பொருள் களும், பிறவும் எந்நாளும் ஒழிவின்றி இலங்கும். ஆங்கு, நீரில் வந்த பொருள்களை நிலத்திற் பரப்புவர்; நிலத்தில் வந்த பொருள்களைப் புலிப் பொறி பொறித்துக் கலத்தில் ஏற்றுவர்; பொதிகளைப் போராக அடுக்குவர், துறையாளர் பொருள்களை நிறுத்து வரி விதிப்பர். காவலர், கடற் கரையில் நொடியளவும் மடிவின்றி ஆங்காங்கே பொருள் களை நோக்கிக்கொண்டு சூழ்ந்து திரிவர். ஆதலின்,

அப்பொருள்களைக் களவுகோடற்குப் பிறர் உளம் நடுங்குவர்.

அத்துறையின் சார்பில், பல்வேறு தேயத்தினின்றும் வந்து தங்கியிருக்கும் பல்வேறு மொழியாளரும் தம்முட் கலந்து மகிழ்ந்து இன்புறுவர். ஆதலின், அந்நகர் வணிகத் தொழிலிற் சாலச் சிறந்து விளங்கிற்று என்பது யாவர்க்கும் உடன்பாடே யாகும். அக்காலத்திலேயே தமிழ் மக்கள் கருங்கடலிற் பெருங்கலங்களைச் செலுத்துதலில் பயிற்சி மிக்கிருந்தனர் என்பது சிறப்புடையதே. இதுநிற்க, இனி, உள்நாட்டு வாணிகத்தை ஒரு சிறிது நோக்குதும் :

பண்டைக்காலத்தில் நந்தம் தமிழ்நாட்டில் பலவகைத் தொழில்களும் நிகழ்ந்துவந்தன. பட்டினுலும் பருத்தியினுலும் எலிமயிர் முதலிய மயிரினுலும் பலவகை ஆடைகள் நெய்தனர்; கிழியானும் கிடையானும் தொழில் பல பெருக்கினர்; ஐவகைத் தொழிலாளரும் தத்தம் வினைத் திறத்தில் மேம்பாடுற்றிருந்தனர். ஆதலின், பலவகைப் பொருள்களை மறுகிடைப் பகருவர். அக்காலத்தில், மதுரை நகரில் நிகழ்ந்த வாணிகத்தைக் குறித்துக் கூறியிருப்பவற்றை ஈண்டுச் சிறிது கூறுவோம்.

அந்நகரில், ஒருபால் பலவகையான பண்டிகளும் கவசங்களும் கிடுகுகளும் குத்துக்கோல்களும் ஈர்வாள் முதலியவும் விற்கப்படும்; ஒருபால் செம்பு வெண்கலம் முதலியவற்ருல் சமைத்தனவும், யானையின் மருப்பினுல் அமைத்தனவும், கயிற்றினுல் முடித்தனவும் பரப்பிவைத்திருப்பர். ஒருசார், வயிரம் மரகதம் மாணிக்கம் புருடராகம் வயிடூரியம் நீலம் கோமேதகம் முத்து பவழம் என்னும் நவமணிக் கடைகளும், சாதரூபம் கிளிச்சிறை ஆடகம் சாம்பூநதம் என்னும் நால்வகைப் பொற்கடைகளும் பொலிவுறும்.

ஒருசார், பட்டினுலும் பருத்தியினுலும் எலிமயிராலும் செய்யப்பட்ட பலவகை அறுவைகளும், ஒருசார், நெல் புல் வரகு தினை சாமை இறுங்கு தோரை வெதிர்நெல் என்னும் எண் வகைத் தானியமும், எள் கொள் உழுந்து

பயறு துவரை கடலை அவரை மொச்சை என்னும் எண் வகைத் தவசமும் என்றும் விலையாகும். வேறு பல பொருள்களும் விற்கப்படும்.

மேற்கூறியவற்றால், நம் நாட்டின் இருவகைப்பட்ட வாணிகத்தின் பெருஞ்சிறப்பும் இனிது விளங்கும்.

பண்டைத் தமிழ் மக்கள் வாணிகத்தில் தேர்ந்திருந் தனராதலின், அவர்கள் எண்ணும் எழுத்தும் நன்கு பயின்றிருத்தல் வேண்டும் என்பது தானே போதரும். ஆயிரம் வரைக்கும் உள்ள எண்ணின் பெயர்களும், வெள்ளம் ஆம்பல் என்னும் பேரெண்களும், ஒன்றற்குக் கீழ்ப்பட்ட சிற்றெண்களும், ஆழாக்கு உழக்கு உரி கலம் முதலிய அளவுப் பெயர்களும், மஞ்சாடி, கழஞ்சு, தொடி முதலிய நிறைப் பெயர்களும், பிறவும் தனித்தமிழ்ப் பெயர்களாகக் காணுதலே, பண்டைத் தமிழ் மக்களின் கணிதநூற் புலமையைத் தெளிவுறக் காட்டும். இற்றைக்கு இரண்டாயிரம் யாண்டிற்கு முற்பட்ட தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலில், நிறைப்பெயர், அளவுப்பெயர், எண்ணுப் பெயர் இவைகளைக் கூறியிருப்பதே பண்டைத் தமிழ் மக்களின் எண்ணுப்பயிற்சிக்கு இயைபுடைச் சான்றாகும். அன்றியும்,

> 'எண்ணெண்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
> கண்ணெண்ப வாழும் உயிர்க்கு'

என்னும் முதுமறை, பழைய தமிழ் மக்கள் எண்ணிலும் எழுத்திலும் கண்ணிய ஊற்றத்தைத் தெள்ளிதின் தெரிவிக்கும். அக்காலத்தில் வாணிகர், 'கொள்வதூஉம் மிகை கொள்ளாது கொடுப்பதூஉம் குறைகொடாது' வாணிகம் நடத்தி வந்தனர் என்பதை உளங்கொள்வோருக்கு, அவரது வாணிகமுறைமை தானே நன்கு விளங்கும்.

## குறிப்புரை

ஒளிர்வுற்று - பிரகாசமடைந்து. ஒருதலை - நிச்சயம். யானை மருப்பு - யானைத் தந்தம். கடுவாய் - புலி. கருங்கலங்களை - பெரிய கப்பல்களை. பயன் அறவு - பயன் நீங்குதலை. அறியா - அறியாத. யவனர் இருக்கை உம் - யவனர் இருப்பிடங்களும். திருவின் - செல்வத்தின் பொருட்டாக. புலம் பெயர் - தம் தேசத்தை விட்டுவந்த. கலந்து இருந்து

உறையும் - (ஒரு தேசத்தவரைப் போலப்) பொருந்தியிருந்து வாழ்கின்ற. இலங்கு நீர் வரைப்பும் - விளங்குகின்ற நீர்க்கரையின் எல்லைகளும். ஓசுநர் - பரவர். ஊன்மலி - மாமிசங்கள் மிகுந்த.

சாவக நாடு - ஜாவா (Java). பொற்பணி - பொன்னாபரணம். சேய் நாடு - தூர தேசம். கடும்பரி - வேகமுள்ள குதிரை. பகர்ந்து - விலைக்கு விற்று. தரளம் - முத்து. கறி - மிளகு. புலிப்பொறி - புலியின் உருவமுள்ள முத்திரை. மடிவு இன்றி - சோம்பலில்லாமல். கிழி - துண்டுச்சீலை. கிடை - சடை. ஐவகைத் தொழில் - தட்டான், கன்னான், சிற்பி, தச்சர், கொல்லர் என்போர் தொழில்கள்.

மருகிடை - தெருவில். கிடுகு - கேடகம். அறுவை - ஆடை. வெதிர் நெல் - மூங்கில் நெல். தவசம் - தானியம்.

## பயிற்சி

1. பொருள் தருக: கடுவாய், ஓசுநர், மடிவு, கிடை, மருகு, கிடுகு, அறுவை.
2. மருப்பு, மடிவு, கிழி, அறுவை—இவை என்ன பெயர்?
3. ஐவகைத் தொழிலாளர், இருவகைப்பட்ட வாணிகம்—விளக்குக.

## வினாக்கள்

1. பிற நாட்டாரோடு தமிழகத்தார் வாணிகம் புரிந்தனர் என்பது எதனால் விளங்கும்?
2. தமிழகத்தைச் சார்ந்த முற்காலத் துறைமுகங்கள் எவை?
3. யவனர் என்பதன் பொருள் என்ன?
4. தமிழகத்திலிருந்து ஏற்றுமதியான பொருள்கள் எவை?
5. பிறநாட்டார் தமிழகத்தில் வசித்திருந்தார்கள் என்பது எதனால் அறியப்படும்?
6. பண்டைக் காலத்தில் தமிழ் நாட்டில் நடந்த தொழில்கள் எவை?
7. மூவேந்தரது துறைமுகப் பட்டினங்களும் இன்னவை என்று பிரித்துக் கூறுக.
8. பண்டைத் தமிழ் மக்கள் எண்ணுப் பயிற்சி மிக்குடையவர் என்பது எதனால் விளங்கும்?
9. ஆம்பல், மஞ்சாடி, உரி—பொருளை விளக்கி யுரைக்க.
10. காவிரிப் பூம்பட்டினம் சிறந்த தொழிலகமாகவும், வாணிக நிலையமாகவும் இருந்தது எவ்வாறு?

## கட்டுரையாக்கம்

1. 'தமிழகத்தின் துறைமுகங்கள்' என்பது பற்றி ஒரு சிறு கட்டுரை வரைக.
2. 'நம் நாட்டுத் தொழில்கள்' என்பதுபற்றிப் பத்துவரியில் எழுதுக.

# 4. பரணர்

திரு. எஸ். வி. வரதராஜ ஐயங்கார், எம். ஏ., எம். ஓ. எல்.

கடைச்சங்க காலத்தில், அதாவது சுமார் 1800 ஆண்டுகளுக்கு முன் பேரும் புகழும் உடையவராக வாழ்ந்திருந்த பண்டைய தமிழ்க்கவிகளுள் பரணரும் ஒருவர். கபிலர், மாமூலனார், நக்கீரர் என்பவர்களும் பரணரைப்போலவே கீர்த்தியுடன் விளங்கினர். ஆயினும் ஏனைய புலவர்களிடம் மிகவும் அருமையாகக் காணப்படும் தன்மை ஒன்று, இவரிடம் சிறப்பாகக் காணப்படுகின்றது. அதாவது, இவர் தம் காலத்தில் வாழ்ந்த தமிழ் நாட்டுச் சிற்றரசர் பேரரசர்களால் நன்கு மதிக்கப்பெற்று வந்தவர் என்பதே. சங்க நூல்களிலுள்ள பரணர் பாட்டுக்களை வாசித்தால் இந்த உண்மை விளங்கும். அவற்றால், இவர் தம் வாழ்நாளெல்லாம் அரசர் பெருமக்களுடன் பழகியே கழித்தவர் என்று அறியலாம். பிற்காலத்து நூல்களான இரண்டு திருவிளையாடற் புராணங்களும், கடம்பவன புராணமும் இவரை மிகவும் உயர்த்திக் கூறுகின்றன. ஹாலாஸ்ய மகாத்மியம் "பரணோபி கவிஸ்ரேஷ்ட:" என்று இவரைப் புகழ்ந்து கூறுகின்றது. ஆகவும் கெடவும் பாடல் தரும் கவிகளுள் பரணரும் ஒருவர் என்று யாப் பருங்கலவிருத்தி என்னும் இலக்கண நூல் சொல்லுகிறது. இதனால் இவர் தெய்வத்தன்மையுள்ள ரிஷிகளைப் போல மதிக்கப் பெற்றவர் என்று அறியலாம்.

பரணருடைய குலம், பெற்றோர் பெயர், இளமைப் பருவம், கல்விப்பயிற்சி, சமயநிலை, தொழில் முதலிய விவரங்களை அறிவதற்கு ஆதாரமான செய்திகள் அதிகம் இல்லை. இவர் பாணர் குடியிற் பிறந்து பெரும்புகழ் பெற்றிருந்ததால், அக்குடிப்பெயரே இவருக்குச் சிறப்புப் பெயராக வழங்கி, அம்பெயர் பிற்காலத்தில் பரணர் என்று திரிந்து வழங்கியிருக்கலாம் என்று சிலர் கருதுகிறார்கள். சங்கப் புலவருள் ஒருவரான ஔவையார் இவர் பெயரைப் பரணர் என்றே எங்கும் குறிப்பிடுவதால், இது சற்றும் பொருந்தாது. இவர் ஒரு பெரும்புலவராகி அரசர் பெரு

மக்களால் மதிக்கப் பெற்றிருந்தவராதலால், இளமைப் பருவத்தில் தக்க ஆசிரியரை அடுத்துக் கல்விப் பயிற்சி பெற்றிருத்தல் கூடும்.

பரணர் பாடியுள்ள "நான்மறை முதுநூல் முக்கண் செல்வன்" என்ற அகநானூற்றுப் பாடலின் அடியை ஆதாரமாகக் கொண்டும், திருத்தொண்டர் புராணசாரம், திருவந்தாதி முதலான பிற்காலத்துச் சைவ நூல்களைக் கொண்டும் இவரைச் சைவ சமயத்தவர் என்று சிலர் கூறுகின்றனர். இவர் வாழ்ந்திருந்த காலத்தில் தமிழ் நாட்டில் சைவ வைணவ சமயங்கள் நாயன்மார்கள் காலத்தைப் போல பிரபலம் அடைந்திருக்கவில்லை. சங்க காலத்துப் புலவர்களாக அறியப்படும் சுமார் 500 பேரும் சிவபெருமானைப் பற்றிப் பாடிய பாடல்கள் இல்லை. இயற்கையில் இறைவன் அருளைக் கண்டு வியந்து போற்றுவதே அக்காலத்துப் புலவர் வழக்கம். ஆகையால், பரணர் எல்லாம் வல்ல இறைவன் ஒருவன் உண்டு என்ற பொது நோக்கமுடையவர் என்றே நாம் கருதலாம்.

பரணர் பாடியுள்ள செய்யுட்களின் இலக்கணங்களைப் பார்த்தால் இவர் தொல்காப்பியர் காலத்துக்குப் பிற்பட்டவர் என்று சொல்ல இடமேற்படுகின்றது. திட்டமாகக் கூற முடியாவிட்டாலும், இவர் கி. பி. முதல் நூற்றுண்டின் இடைப்பகுதியில் வாழ்ந்தவர் என்று கூறுவது பொருந்தும்.

பரணர் பிறந்த ஊர், வாழ்ந்த இடம்—இவைகளைப் பற்றித் திட்டமாக அறிய முடியவில்லை. பதிற்றுப்பத்து என்னிம் நூலில் வரும் இவர் பாடல்களிலிருந்து, இவர் சேர நாட்டில் தம் வாழ்நாளின் பெரும்பகுதியைக் கழித்திருக்கலாம் என்று தோன்றுகிறது. இவர் பல நாடுகளையும் சுற்றிப் பார்த்தவர்; சேர வேந்தரையும், சோழ மன்னரையும், வள்ளல் பலரையும் அடைந்து, அவர்களைப் பாடியிருக்கிருர். கடல் பிறக்கோட்டிய வேல்கெழு குட்டுவனைப் பாடி உம்பற்காடு என்னும் அவனுடைய நாட்டின் ஒரு பகுதியினுடைய வருவாயைப் பரிசிலாகப் பெற்றவர் இவர். அச் சேரவேந்தன் தன் மகனை குட்டுவஞ்சேரல்

என்பவனைக் குருகுலவாசம் செய்யும்படி இவரிடம் விட்டிருந்தான் என்றும் தெரிகிறது.

வையாவிக் கோப் பெரும்பேகன் என்பவனை இவர் பாடிய புறப்பாட்டிலிருந்து, இவர் மிகவும் வறுமையுடையவராக இருந்தார் என்றும், அவன் பெருஞ் செல்வம் அளிக்க, அந்த வறுமை நீங்கப் பெற்றார் என்றும் தெரிகிறது. இந்தப் பேகனை இவர் பாடியுள்ள மற்றொரு பாட்டில் " பசித்தும் வாரேம் பாரமும் இலமே " என்கிறார். இதிலிருந்து இவர் மிக்க செல்வம் உடையவராய் இருந்தார் என்றாவது, அல்லது குடும்ப பாரமே இல்லாதவராய் இருந்தார் என்றாவது கொள்ள வேண்டியிருக்கிறது.

பரணரைப் போன்ற பண்டைய கவிகள் இயற்கைப் பொருள்களின் தன்மையை ஊன்றிப் பார்த்து அறிந்து, அவற்றை அமைத்துப் பாடல்கள் இயற்றுவது வழக்கம். இவர் தமிழ் நாட்டின் பல பாகங்களுக்கும் சென்று, ஆங்காங்கேயுள்ள மலைகள், ஆறுகள், காடுகள் முதலியவற்றின் இயற்கை யழகை இன்புற்றுப் பாடியிருக்கிறார். அந்தந்தப் பகுதிகளில் வாழ்ந்த மன்னர்கள், சிற்றரசர்கள், கொடையாளிகள் ஆகியவர்களின் குணாதிசயம், போர்த்திறமை, கொடை, அறிவு முதலிய நல்ல இயல்புகளை நேரில் அறிந்து பாடல் இயற்றியிருக்கிறார்.

இந்த விஷயத்தில் முதல் இடம் பெறத்தக்கவர் பரணர். பழந்தமிழ் நாட்டில் இவர் செல்லாத நாடும், காணாத காட்சியும் இல்லை என்றே சொல்லலாம்.

மற்றப் புலவர்களால் பாடுவதற்கு முடியாத அரிய செய்திகளை நல்ல அமைப்புக் கொடுத்து அழகாகப் பாடும் ஆற்றல் இவருக்குண்டு. அதியமானஞ்சி என்ற தலைவன் மலையமானுடைய திருக்கோவலூரை அழித்து வெற்றி பெற்ற சிறப்பை ஒளவையார் பாடும்போது, " பரணரைப் போலப் போர்ச் செயலையும் வெற்றியையும் பாடும் திறமை எனக்கில்லையே " என்று கூறுவதிலிருந்து, ஒளவையார் பரணரது பாடுந் திறமையை எவ்வளவு மதித்திருந்தார் என்பது விளங்கும்.

அரசர்களுக்குள் பகை ஏற்பட்டுப் போர் நேர்ந்தால்,

அவர்களைச் சமரசப்படுத்துவதற்கு முன்வரும் இயல்பு இவருக்குச் சிறப்பாக உண்டு. இவரிடம் தேசாபிமானம் குடிகொண்டிருந்தது. தமது நாட்டிற்குத் தீங்கு நேர்வதாயிருந்தால், அதைத் தடுக்கப் பாடுபடுவது இவரது குணாதிசயங்களுள் ஒன்று. வீரர் குடிகளை இவர் பெரிதும் மதித்து வந்தவர். வேந்தர் ஒழுங்கு தவறி நடந்தால், இடித்துக் கூறி அவர்களை நல்வழிப் படுத்துவதில் இவர் சற்றும் தயங்கமாட்டார். பேகன் தன் மனைவியை வெறுத்திருந்தபோது, அவன் மனம் உருகி நல்வழிப் படுமாறு பாடியவர் இவர்.

சங்கப்புலவருள் மற்றவரிடம் காணப்படாத மற்றொரு தனிப்பெருமை பரணருக்கு உண்டு. இவர் தமிழ் நாட்டின் பல பகுதிகளிலும் சுற்றுப்பிரயாணம் செய்து, பற்பல வரலாறுகளை நேரில் அறிந்தவர். ஆகையால், தம் பாடல்களில் ஏதேனும் ஒரு சரித்திர சம்பவத்தைக் கூறாமல் செல்வதில்லை. இதனால் இவர் பாடல்கள் பண்டைத் தமிழ் நாட்டின் சரித்திர ஆராய்ச்சிக்கு மிகவும் உதவியாய் இருக்கின்றன. இவரைச் சங்கப் புலவருள் சரித்திர ஆசிரியர் என்று சொல்வதில் தடையில்லை. இனி, இவர் வாயிலாக நாம் அறியும் சரித்திர நிகழ்ச்சிகள் சிலவற்றைக் கவனிப்போம்.

பரிசில் பெறுவதையே கருத்தாகக் கொண்டு, கொடையாளிகளையடைந்து, இல்லாததும் ஒல்லாததும் சொல்லிப் பாடும் தன்மையைப் பரணரிடம் காணவே முடியாது. தமக்கு எது வந்தாலும் சரி, நற்குணம் இல்லாதவரைக் கண்டித்து உபதேசம் செய்வதிலும், தமக்கு உண்மை என்று உறுதியாகத் தெரிந்த விஷயங்களை அஞ்சாமல் கூறுவதிலும், நிகழ்ச்சிகளைத் தாம் நேரில் கண்டவாறு எடுத்துரைப்பதிலும் இவர் பின்வாங்கியதே கிடையாது.

இவர் காலத்தில் தமிழ் நாட்டில் சேர சோழ பாண்டியராகிய முடியுடை மூவேந்தரும் அரசு புரிந்துவந்தனர். இவர்களுக்கு அடங்கியும் சுயேச்சையாகவும் சிறு சிறு நாடுகளையாண்ட சிற்றரசரும் இருந்தார்கள். இவர்

களுக்குள் அடிக்கடி போர் நடப்பதுண்டு. தவிர, பெரு வேந்தர் வடநாட்டிற்குப் படையெடுத்துச் சென்று ஆரிய வேந்தரோடு அமர் செய்து, வெற்றி பெற்றுத் தம் கொடியை இமயமலையில் நாட்டியதுண்டு. இவையெல்லாம் பரணர் தம் பாடல்களில் குறிப்பிடும் போர்ச் செய்திகளாகும்.

சோழன் கரிகாலனுக்குத் தந்தையான உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னி என்பவன் பரணரால் பாடப் பெற்றவருள் ஒருவன். இவனுடைய போர்க்களத்தை இவர் மிகவும் அழகாகப் பாடியுள்ள செய்யுள் ஒன்று புறநானூற்றில் உண்டு. சோழன் வேல் பஃறடக்கைப் பெருவிறல் கிள்ளியும், சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனும் போர் புரிந்து, அக்களத்தில் இருவருமே மாண்டு வீழ்ந்த நிலையைக் கண்டு பரணர் மிகவும் இரங்கிப் பாடியிருக்கிறார். இவரால் பாடப்பெற்ற சேரருள் சேரமான் கடலோட்டிய வேல்கெழுகுட்டுவன் முக்கியமானவன். இவன் போரில் வெற்றிபெற்றுப் போர்க்களத்தில் கம்பீரமாக வீற்றிருந்தபோது, பரணர் அங்கே சென்று இவனைக் கண்டு, இவன் வெற்றியைப் பாராட்டிய பாடல் ஒன்றுண்டு. இச் சேரன் மேல்கடலில் ஒரு நிலப்பகுதியில் வாழ்ந்திருந்த மக்களையும் அந் நாட்டு அரசனையும் எதிர்த்து வென்றதைப் பரணர் பலமுறை எடுத்துப் பாராட்டுகிறார். இப்பாட்டிலிருந்து இச் சேர வேந்தனே தமிழரசருள் முதன்முதலாகக் கடற்படையால் வெற்றி பெற்றவன் என்று தெரிகிறது. இவன் ஏழு அரசர்களை வென்றதற்கு அடையாளமாக அவர்கள் முடிகளை மாலையாக அணிந்திருந்தான் என்பதை “எழுமுடிமார்பின் எய்திய சேரல்” எனப் பாராட்டுகிறார்.

சேரன் செங்குட்டுவனைப் பற்றிய செய்திகள் பல இவரால் தெரிகின்றன. அவன் தன் பாசறையில் பலநாள் தங்கியிருந்து சேனாதிபதிகளோடு பகைவெல்லும் சூழ்ச்சியை ஆராய்தல், அவன் வல்லமையைக் கண்டு அஞ்சிய மன்னர்கள் அவனோடு உறவாடி வாழ்ந்தமை, வணங்காமுடி மன்னனை இச்சேரன் தன்னைப்பாடி வரும் புலவரை

மட்டும் வணங்குதல்—ஆகிய செய்திகள் பரணரால் நாம் அறிகின்றவையாகும்.

செங்குட்டுவனுக்கு நண்பனுன **அறுகை** என்ற சிற்றரசன் ஒருவன் இருந்தான். இந்த அறுகைக்கும் மோகூர் மன்னனுன **பழையன்** என்பவனுக்கும் போர் மூண்டது. மோகூர் மன்னன் தனக்குப் படைத்துணை புரியும்படி செங்குட்டுவனை வேண்டினுன். செங்குட்டுவன் அதற்கு இணங்காமல் அறுகைக்கு உதவி புரிந்து, பழையனைத் தோற்கடித்து, அவன் காவல் மரமாகிய வேம்பை வெட்டி எடுத்துச் சென்று முரசு செய்தான் என்று பரணர் தம் பதிற்றுப்பத்துப் பாடலிற் கூறுகிருர்.

கடையெழு வள்ளல்களுள் ஒருவனுன **வையாவிக் கோப் பெரும்பேகன்** என்பவன் பரணரால் பாடப்பெற்ற மற்ருேர் அரசன். இவன் கார்காலத்தில் ஒருநாள் வெளியே சென்று உலாவி வரும்போது, ஓரிடத்தில் மேகத்தைக் கண்ட மோகத்தால் தன் தோகையை விரித்து ஆடிக்கொண்டிருந்த ஒரு மயிலைக் கண்டான். கண்டதும், தன் இயல்பான இளகிய மனத்தால் "இது குளிர் பொறுக்காமல் நடுங்குகிறது" என்று வருந்தித் தனது போர்வையை அதன்மேல் போர்த்தினுன். கொடையினுல் பெரும்புகழ் பெற்றிருந்த இவனைப் பாடிப் பரணர் தாமும் பெருஞ்செல்வம் பெற்றதாகக் கூறுகிருர்.

சோழன் கரிகாலனையும் பரணர் பாடியுள்ளார். கரிகாலன் மிக்க பராக்கிரமசாலி; பல போர்களில் வெற்றி பெற்றவன். வெண்ணிவாயில் என்னுமிடத்தில் பல வேந்தரும், வேளிர் என்னும் சிற்றரசர் பதினெருவரும் கூடி இவனை எதிர்த்துப் புரிந்த போரில், இவன் இவர்களை வென்று விளங்கியதை நம் புலவர் பெரிதும் கொண்டாடுகிருர். மற்றெரு சமயம் **வாகைப் பறந்தலை** என்னுமிடத்தில் இவன் தன்னை எதிர்த்த ஒன்பது அரசர்களை வென்ருன் என்பது பரணர் பாடலால் அறியப்படுகிறது.

பரணர் காலத்தில் ஆடலில் வல்லவனுன **ஆட்டன் அத்தி** என்பான் ஒருவன் இருந்தான். இவனைக் காவிரிப் பெருக்கு அடித்துச் சென்றுவிட்டது என்றும், இவன்

மனைவியான **ஆதிமந்தி** அழுது புலம்பிப் பல இடங்களிலும் சென்று தேடியும் காணாது, முடிவில் மருதி என்பவள் உதவியால் அவனைக் கண்டாள் என்றும் பரணர் கூறுகிறார்.

**நன்னன் உதியன்** என்ற ஒரு தலைவனுடைய வரலாறும் பரணரால் கூறப்படுகிறது. இந்த நன்னன் **புன்னாடு** என்ற ஒரு சிறு நாட்டின்மீது படையெடுத்ததற்காக ஆய் எயினன் என்பவனுக்கும் இவனுக்கும் பகை மூண்டது. இப்பகை காரணமாக நன்னனுக்கு நண்பனான மிஞிலி என்பவன் ஆய் எயினனோடு போர்செய்து அவனைக் கொன்றான். அப்பொழுது சந்தியந் தவறாதவனான அந்த எயினன் உடலின்மீது வெயில் படாதபடி பறவைகள் மறைத்துப் பறந்து திரிந்தன. எயினன் கொலைக்குக் காரணமான நன்னனைக் குடி மக்கள் பழித்தனர். இப் பழிக்கஞ்சி நன்னன் பகலில் வெளியே செல்லாது கோயிலினுள்ளே ஒளிந்திருந்து, இரவில் வெளி வந்து உலவினான். இவனைப் பகலில் வெளிப்படாத கூகை என்று பரணர் பழித்துப் பாடியுள்ளார்.

இந்த நன்னன் பெண் கொலை புரிந்தவன் என்று பரணரால் மட்டுமன்றி மற்றப் புலவர்களாலும் பழித்துப் பாடப்பட்ட வரலாறு ஒன்று உண்டு. நன்னன் தோட்டத்திலிருந்து மாங்காய் ஒன்று விழுந்து ஆற்று வெள்ளத்தில் மிதந்து சென்றதாம். நீராடச் சென்ற பெண் ஒருத்தி அதை எடுத்துத் தின்று விட்டாளாம். இக் குற்றத்திற்காக அவள் பெற்றோரும் உறவினரும் 81 யானைகளும், அவள் நிறையளவு பொன்னாற்செய்த பதுமையும் அபராதமாகக் கொடுப்பதாகச் சொல்லி மன்றாடி வேண்டினார்கள். நன்னன் மறுத்து அவளைக் கொன்றே தீர்த்தான். இவ் வரலாற்றைக் குறுந்தொகைப் பாட்டொன்றில் பரணர் கூறி இவனைப் பழிக்கிறார்.

இவ்வாறு பரணர் நமக்குக் கூறும் சரித்திரங்கள் பல. சங்க இலக்கியங்களில் உள்ள பரணர் பாட்டுகளை நெடுக ஊன்றி வாசித்துக்கொண்டே போனால், இவரது கவி நயமும், வரலாறு கூறும் வகையும், இயற்கை வருணனை

களும், நீதி புகட்டும் முறையும், பரந்த நோக்கமும், தெளிந்த அறிவும், தூய வாழ்க்கையும் பிறவும் நன்கு விளங்கும்.

### குறிப்புரை

ஏனைய - மற்ற. திரிந்து - மாறி. நான் மறை - நான்கு வேதங்கள். முக்கண் செல்வன் - இருகண்களோடு நெற்றிக் கண்ணுமுடைய சிவ பெருமான். உம்பற்காடு - யானைகள் நிறைந்து வாழும் காடு. குடும்ப பாரம் - குடும்பப் பொறுப்பு. ஒல்லாததும் - பொருந்தாததும். எழுமுடி யாரம் - ஏழு கிரீடங்கள் சிறு அளவிற் செய்து கோக்கப்பட்ட பொன்மாலை. பாசறை - படை தங்குமிடம்.

### பயிற்சி

1. பாணருடைய குலம், பெற்றோர் பெயர், **இளமைப்பருவம்**, கல்விப் **பயிற்சி**, சமயம், தொழில் முதலிய விவரங்களை **அறிவதற்கு** ஆதாரமான செய்திகள் அதிகம் இல்லை.—தடித்த சொற்களுக்கு இலக்கணம் கூறுக.

2. இப்பாடத்தில் வந்துள்ள நூல்கள், புலவர்கள், அரசர்கள் பெயர் களைக் குறிப்பிடுக.

### வினாக்கள்

1. கடைச்சங்க புலவர்களுள் கீர்த்தியுடன் விளங்கிய சிலரைக் கூறுக.
2. பரணரிடம் சிறப்பாக நாம் காணக்கூடிய தன்மை யாது?
3. பரணரை உயர்த்திப் பேசும் நூல்கள் எவை?
4. பரணர் என்ற பெயர்க்காரணத்தை விளக்குக.
5. பரணர் காலம், சமய நிலைகளைப் பற்றி நீவிர் அறிவன யாவை?
6. பரணரை ஆதரித்த தமிழ் வேந்தர் யாவர்?
7. பரணரிடம் மாணுக்கனுயிருந்த இளவரசன் யாவன்?
8. பரணரது நாட்டுப்பற்று, கவித் திறமை, போரில் வெறுப்பு ஆகிய தன்மைகளை இடங்காட்டி விளக்குக.
9. சேர வேந்தரிடம் பரணர் பெற்ற சிறப்புக்கள் எவை?
10. அறுகை, பழையன், பேகன், ஆட்டன் அத்தி—குறிப்புத் தருக.

### கட்டுரையாக்கம்

1. பரணர் தம் சரிதையைத் தாமே கூறுவதாக அமைத்துச் சுருக்க மாகப் பதினைந்து வரியில் எழுதுக.

2. 'பரணரது குணதிசயம்' என்பது பொருளாக ஒரு சிறு கட்டுரை வரைக.

# 5. சிறையிருந்த செல்வி

பேராசிரியர் ஆர். பி. சேதுப்பிள்ளை, பி. ஏ., பி. எல்.

பூவினை வெறுத்து அயோத்தி மன்னன் பொன்மனை புகுந்து கணவனுடன் காடு துறந்து நாடு புகுந்த கமலச் செல்வியை இலங்கை வேந்தன் தங்கை தன் கண்களால் நோக்கினாள். பெண்மையும் பேதுறும் பேரழகு வாய்ந்த சீதையைக் கண்டபொழுது,

"கண்பிற பொருளிற் செல்லா
கருத்தெனில் அஃதே கண்ட
பெண்பிறந் தேனுக் கென்றால்
என்படும் பிறர்க்(கு)" என்று

அரக்கர்கோன் தங்கை திகைத்து நின்றாள். பின்னர் அம்மங்கை மானபங்க மடைந்து இலங்கை மாநகரில் இணையற்ற வேந்தனாக விளங்கிய தமையனிடம் தன் முறையை முறையிடும் வாயிலாகச் சீதையின் திருந்திய நலத்தைச் சிறிது சொல்லியும், சொல்லாமல் மறைத்தும் அரக்கன் மனத்தில் ஆசையெனும் அனலை மூட்டினாள். "ஐயனே! நீ நாளையே சென்று அந்நலங்களைக் காண்பா யாதலின் நான் சொல்வதும் மிகையாகும்" என்று வீரன் தங்கை வினயமாக மொழிந்தாள். இம்மொழிகளைக் கேட்ட மன்னன் தங்கையின் பொருட்டு அமர்புரிந்து ஆவிதுறந்த கரனையும் மறந்தான்; மானபங்கமுற்ற தங்கையால் தனக்கு நேர்ந்த கடும்பழியையும் மறந்தான்; வலிமை வாய்ந்த கோசல வீரனது வரிசிலையையும் மறந் தான்; நிறையமைந்த மாதரை முறையிகந்து பற்றினால் சிரம் வெடிக்குமென்று அயன் அருளிய சாபத்தையும் மறந்தான். செவியாரக் கேட்ட சீதையை மறவாது, தன் உள்ளத்தில் அந்நங்கையை அழகொழுக எழுதி அவ் வுயிர்-ஓவியத்தைக் கண்டு உளம் களித்தான். அசோக வனத்தில் அருஞ்சிறை வைப்பதன் முன்னரே அரக்கர் கோன் அழகிற் சிறந்த அம்மங்கையைத் தன் மனச் சிறை யில் வைத்து மகிழ்ந்தனன்.

“ மயிலுடைச் சாய லாளை
வஞ்சியா முன்னம் நீண்ட
எயிலுடை இலங்கை நாதன்
இதயமாம் சிறையில் வைத்தான் ”

என்று கம்பர் அரக்கன் செயலை அழகுறக் கூறி அருளினார். இவ்வாறு பூவினை நீத்துவந்த புனித நங்கை அரக்கன் புன்மனம் புகுந்தாள்.

இங்ஙனம் மங்கையை மனத்தில் வைத்த மன்னவன் அவள் நலங்களையே நினைந்து நினைந்து நலிவாறுயினான். இவ்வாறு நையலுற்ற இலங்கை மன்னன் தன் மாமனை மாரீசனை மாயமானாக அனுப்பி, மங்கையின் மனத்தை மயக்கி வீரர் இருவரும் இல்லாதபோது மாயத்தால் சீதையைக் கவர்ந்து இலங்கை மாநகரில் ஓர் சோலையிற் சிறை வைத்தான். இவ்வாறு நஞ்சனைய இலங்கைநாதன் மனத்திலும் மனையிலும் புகுந்து சிறுமை எய்திய தன் நிலையினை நினைந்து சிந்தை யழிந்த சீதை, ‘அந்தோ! பொன்மானாக வந்த மாயமானைக் கண்டு மயங்கி, அதனைப் பற்றித் தருமாறு என் தலைவனை அனுப்பினேன். மானைத் தொடர்ந்து சென்ற மன்னனுக்குத் தீங்கு நேர்ந்ததென்று மயங்கி, மனம் பதைத்து, காத்து நின்ற இளைய வீரனைக் கடிந்து கணவன் போனவழியே போக்கினேன். இவ்வாறு எவரும் துணையின்றி எளியவளாக நின்ற என்னைக் கள்ள அரக்கன் கவர்ந்து கடுஞ் சிறையி லிட்டனன். நிறையமைந்த மாதர் பிறர் நெஞ்சு புகாராதலின் இலங்கை வேந்தன் மனத்திலும் மனையிலும் புகுந்த என்னை இனி உலகம் ஏற்குமோ?’ என்று உலைந்து வருத்தினாள்.

“ வஞ்சனை மானின்பின் மன்னனைப் போக்கி, வென்
மஞ்சனை வைதுபின் வழிக்கொள் வாயென,
நஞ்சனை யான்அகம் புகுந்த நங்கையான்
உஞ்சனன் இருத்தலும் உலகம் கொள்ளுமோ?”

என்று கம்பர் அருளிய இன்கவியால் சீதையிருந்த அகச் சிறையும் புறச்சிறையும் அழகுற இலங்கக் காணலாம்.

இனி, கருங்கடல் சூழ்ந்த இலங்கை மாநகரில் கற்பகத் தருக்கள் நிறைந்த கனகச் சோலையில், மெலிந்த மேனியோடும் கலங்கிய கண்களோடும் சிறையிருந்த செல்வியை விடுத்து வீரத்தையும் மானத்தையும் காக்குமாறு இராமன், வலிமை சான்ற தம்பியோடும் வானரத் துணைவரோடும் இரக்கமற்ற அரக்கருடன் போர் புரிந்து அவர் வெங்குலத்தை வேரறுத்தான். இலங்கை நாதனும் அயோத்தி அண்ணலும் நெடும்பொழுது கண்டவர்க் கன்றிக் கேட்டார்க் குரைப்பரிய கடும்போர் நிகழ்த்தினர்கள். விலக்கலாகா விதியின் விளைவால் இலங்கை வேந்தன் ஆவியிழந்து பூமியில் விழுந்தான்; போர் மகளைத் தழுவிய பொருப்பனைய தோள்களால் பார் மகளைத் தழுவினன். திருமகள் ஒளியும் கலைமகள் ஒளியும் ஒன்றித் திகழ்ந்த உயரிய முகங்களை நிலமகள் மீது நெடிது வைத்தான். வாளும் யாழும் தழுவிய வலியகரங்கள் வெட்டுண்ட வாழைபோல் வீழ்ந்துகிடந்தன. இலங்கைநாதன் எழிலார் மேனியை எள்ளிருக்க இடமின்றி இராமபாணம் துளைத்திருந்தது. இத்தகைய கோலத்தை மையறுமனத் தாளாய மண்டோதரி கண்ணுற்றாள்; மரங்களும் மலைகளும் உருக வாய்திறந்து அரற்றினாள்:

"வெள்ளெருக்கஞ் சடை முடியான் வெற்பெடுத்த
திருமேனி மேலும் கீழும்
எள்ளிருக்கும் இடனின்றி உயிரிருக்கும்
இடம்நாடி இழைத்த வாறோ?
கள்ளிருக்கும் மலர்க்கூந்தல் சானகியை
மனச்சிறையில் கரந்த காதல்
உள்ளிருக்கும் எனக்கருதி உடல்புகுந்து
தடவியதோ ஒருவன் வாளி"

என்று மயன்மகள் பன்னிய மொழிகள் பண்புவாய்ந்தனவாம். தேவர்க்கும் தெரிவரிய தெய்வக்கற்பு வாய்ந்த திருமகளைத் தன் மனச்சிறையில் வைத்த மன்னனை அணுவணுவாக ஆராய்ந்து கரந்த காதலைக் கவர்ந்து செல்லக் கருதிய முறையில் வீரன் வாளி தலைமுதல் தாள்வரை துளைத்ததோ என்று மண்டோதரி வாயிலாகக் கவிஞர்

கூறும் கனிந்த மொழிகளில் மனச்சிறை மீண்டும் நம் கண்ணெதிரே தோன்றுவதாகும். இன்னும் காவலன் மனத்தில் அழுந்தியிருந்த காதலை அகழ்ந்தெடுத்து, சீதையை அகச்சிறையினின்றும் விடுவிக்கக் கருதி இராமபாணம் உடலிற்புகுந்து துருவியதாகக் கம்பர் அமைத்த கற்பனை கற்றோர் மனத்தைக் கவர்கின்றது. மேலும் வீரன் விடுத்த வெஞ்சரம் சீதையிருந்த சிறையைத் தடவிச் சென்றதோ என்று கவிஞர் அமைத்த முறை ஆராய்தற்குரித்தாகும். ஒருவனுக்குரிய பொருளைக் களவு செய்த கள்வன் அதனை எவரும் அறியாதவாறு ஒளித்தும் மறைத்தும் பாதுகாக்கும் பான்மைபோல் இராமன் மனைவியாகிய சீதையைக் களவு செய்த இராவணன் அவ்வரும் பொருளின் அருமையை அறிந்து, உள்ளத்தின் கண்ணே ஒளித்து வைத்தான் என்றும், அவ்வாறு மறைத்து வைத்த இடத்தை அறியாது மெல்ல மெல்ல, வீரன் அம்பு ஆராய்ந்து சென்றது என்றும் கவி நாயகர் அமைத்த அழகு ஆயுந்தோறும் அளவிலா இன்பம் அளிப்பதாகும். தவம் முயன்று அரிதிற் பெற்ற தன்னுயிரையும் காக்க மனமற்ற மன்னவன் மங்கையின் உருவினை மனத்திடை வைத்துக் காத்தானென்றால், அத் திருமகளை உயிரினும் அருமையாக அவன் நேசித்துப் போற்றினன் என்பது சொல்லாமலே அமையுமன்றோ? இவ்வாறு அம்பினை ஏவி அயலானது அகச்சிறையினின்றும் சீதையை மீட்ட மன்னவன் அநுமனை ஏவி, அம்மங்கையை அசோகவனச் சிறையினின்றும் மீட்டான். இவ்வாறு இருவகைச் சிறையினின்றும் நீங்கிய நங்கை கற்பினுக்கணியாய்க் களித்திலங்கினள்.

## குறிப்புரை

பூ - இலக்குமியின் இருப்பிடமாகிய தாமரை. பேதுறும் - மனம் சலிக்கும். அமர் - போர். முறையிகந்து - நெறி கடந்து. சிலை - வில். நையல் - நலிதல். பொருப்பு - மலை. மையறு - குற்றமற்ற. வாளி - அம்பு. மயன் - தெய்வத் தச்சன். மயன்மகள் - மண்டோதரி.

## பயிற்சி

1. பிரித்துக் காட்டுக :—வெங்குலம், மனத்திடை, மானபங்கமுற்ற.
2. வாக்கியங்களில் அமைக்க :—மிகை, செவியார, கடிந்து.

## வினுக்கள்

1. இலங்கை வேந்தன் தங்கை, சீதையைக் கண்டதும் எவ்வாறு திகைத்தனள் ?

2. தங்கையின் சொற்கேட்ட மன்னன் எவ்வெவற்றை மறந்தான் ?

3. மனச்சிறையில் இருத்திய மங்கையை இராவணன் எவ்வாறு ஒரு சோலையிற் சிறை வைத்தான் ?

4. நிறையமைந்த மாதரின் சிறப்பு யாது ?

5. இராவணனுடைய சவத்தைக் கண்ட மண்டோதரி எவ்வாறு அரற்றினள் ?

6. சீதா தேவிக்கு நேரிட்ட இருவகைச் சிறைகள் யாவை ? அச் சிறைகளிலிருந்து அவள் எவ்வாறு மீட்கப்பட்டாள் ?

## கட்டுரையாக்கம்

1. அசோக வனத்தில் சீதை எவ்வாறு சிந்தையழிந்து வருந்தினள் என்பதைப் பத்து வரிகளில் கூறுக.

2. இராவணன் ஆவியிழந்து பூமியில் விழுந்தது எவ்வாறு வருணிக்கப்பட்டுள்ளது ?

## 6. ஒரு நடிக நாடகம்

திரு. K. S. நாகராசன், எம். ஏ.

கலை பற்பல விதங்களில் நமக்குத் தோற்றமளிக்கிறது. அதே போன்று கலையின் ஒரு கூருக அமைந்துள்ள இலக்கியமும் பலவகைப்படும். இயல், இசை நாடகம் என்ற முப்பெரும் பிரிவுகளில் அடங்கும் இலக்கியக்கலை. மறுபடியும் ஊன்றிப் பார்த்தால் நாடகம் ஒன்றே பலதிறப்படக் காணலாம். இன்பமுடிவு நாடகம் ஒன்று; துன்ப முடிவு நாடகம் இன்னென்று. இவ்விரண்டிலும் சேருவதாயும் சேராததாயும் தோற்றமளிக்கும் நாடகவகை மற்றுமொன்று.

இவை தவிர நாடகங்களை அவற்றிலுள்ள பாத்திரங்கள் அல்லது நடிப்போரின் எண்ணிக்கையை அனுசரித்து மூன்று விதங்களாகப் பிரிக்கலாம். முதலாவது வகை பலபேர் சேர்ந்து நடிக்கும் நாடகம். இரண்டாவது வகைக்கு இரண்டு பேர் நாடக மேடைமீது வந்தால் போதும். கடைசி வகையைச் சேர்ந்த நாடகத்திற்கு நடிப்போர் ஒருவரே. அவர் நடிகராக இருப்பினும் இருக்கலாம்; அல்லது நடிகையாக அமையினும் அமையலாம். முதல் வகையைச் சேர்ந்த நாடகங்கள் பலவற்றை எல்லா மொழிகளிலும் காணலாம். இரண்டாவது வகை நாடகங்கள் எண்ணிக்கையில் அவ்வளவு அதிகமானவையல்ல; இரண்டு பேர் மாத்திரம் சேர்ந்து நடிக்கவேண்டும். அங்கு மனிதக் கூட்டங்கள் வேண்டுமானலும், ஏதாவது தூது அனுப்பவேண்டுமானலும், ஏவலாட்கள் தேவையானலும், எந்த நெருக்கடி ஏற்பட்டாலும் சரி, வேறு நடிகனே நடிகையோ மேடைமீது வரமுடியாது. இதனல் இன்னும் தேவையான ஆட்கள் இருந்திருந்தால் என்னென்ன நேர்ந்திருக்குமோ அவற்றின் விளைவுகளையெல்லாம் அந்த இரண்டு நடிகர்களும் தம் வார்த்தைகளாலோ முகக் குறிப்பாலோதான் அறிவிக்க வேண்டும். இத்தகைய நாடகங்களைத் தொகுப்பது சுலபமன்று. நடிகர்கள் திறமையும் அனுபவமும் வாய்ந்தவர்களாகவும்,

நாடகக் கலையை நன்கு படித்தறிந்தவர்களாகவும் இருக்க வேண்டும். நடிகத் திறமையில் சிறிதளவு குறைவுபட்டாலும் பார்ப்போர் மனத்தில் சரியான எண்ணங்கள் எழுப்பப்படாது போகும். இவற்றைக் கவனித்துப் பார்த்தால், இத்தகைய நாடகங்களில் உயர்ந்த ரக நடிப்புத் திறமையின் அவசியம் நன்கு விளங்கும்.

கடைசி வகை நாடகத்திற்கு ஒரே நடிகர். இத்தகைய நாடகங்கள் தமிழ் மொழியில் வெகு சிலவேயுள்ளன. இதன் பயனுகத் தமிழில் இந்த நாடக வகையைக் குறிக்கச் சரியான சொல்லேயில்லாமல் இருக்கிறது. இதை 'ஒரு நடிக நாடகம்' என்றே இக்கட்டுறை முழுதும் கூறுவோம். இதை ஆங்கிலத்தில் 'Dramatic Monologue' என்று கூறுவர். இது ஒரு மனிதன் தன்னுள் எழும் எண்ணங்களை வெளிப்படுத்த உதவும் ஒரு நேர் கருவி. ஆகவே, இவ்வகை நாடகத்தில் காணப்படும் எண்ணங்களெல்லாம் அதை சிருஷ்டிசெய்துள்ள கவிஞனுடையனவே. ஆனல் இதற்கும் தனிமைப் பேச்சு (Soliloquy)க்கும் என்ன வித்தியாசம் என்று கேட்கலாம். அவை ஒன்றுபோலவே காணப்படினும் உண்மையில் சில நுட்பமான வித்தியாசங்கள் உடையவை. தனிமைப் பேச்சு என்பது ஒரு நாடகத்தில் ஒரு நடிகனே அல்லது நடிகையோ (தனிமையில்) தனக்குத் தானே பேசிக் கொள்வதாக அமைந்துள்ள சொற்பகுதி. ஆகவே, தனிமைப் பேச்சு என்னும் போதே அதை உள்ளடக்கிக் கொண்டுள்ள ஒரு நாடகம் உள்ளமை புலனுகிறது. தனிமைப் பேச்சு என்பது ஒரு பகுதி; நாடகம் முழுமை. அந்த நாடகத்தின் பாத்திரங்கள், அந்நாடகாசிரியரின் நோக்கங்கள், நாடகத்தில் இந்தச் சொற்பகுதி அமைந்திருக்கும் இடம், சந்தர்ப்பம் இவற்றையெல்லாம் யோசித்துத்தான் நாம் ஒரு 'தனிமைப் பேச்சு'க்குப் பொருள் கூறலாம். இதை நன்கறிய அதைச் சொல்லும் ஒரு மனிதனை மாத்திரம் அறிந்தால் போதாது; அவன் கூறும் சொற்களுக்கு அவன் மனத்தில் எழும் எண்ணங்களுக்கும் எந்தச் சம்பவங்கள் காரணமாக நிற்கின்றன என்று

அறிவது அவசியம். இந்தப் பகுதிக்கு முன்னுல் நாடகத்தில் நடந்துள்ள சம்பவங்கள், அந்தச் சொற்பகுதி எவனுடைய கூற்ருே அவனது இயல்புகள், அவன் சொல்வதாக நாடகத்தில் அமைந்துள்ள மற்றச் சொற்பகுதிகள், இவைகளுக் கேற்பவே அந்தத் தனிமைப் பேச்சுக்கு நாம் பொருள் கூறவேண்டும். இன்றேல் நாடகத்தின் முக்கிய நோக்கம் பாழ்படும். நாடகாசிரியர் தமது நாடகத்தின் மூலம் வெளிப்படுத்த எண்ணும் கருத்துக்களுக்கு உதவியாக அமையவே இந்தத் தனிமைப் பேச்சு சிருஷ்டிக்கப்படுகிறது. நாடகத்தினின்றும் பிரித்தெடுத்து இந்தச் சொற்பகுதிக்குத் தனியே பொருள் கூற முயன்ருல், அது வெறும் அபத்தமாகவே முடியும்.

இதற்கு மாருக ஒரு நடிக நாடகம் என்பது பிறிதொன்றை எதிர்பார்க்காது தன்னந்தனியாக நின்று பொருள் தரும் ஒரு சொற்பகுதி. ஒரு கவிஞன் தான் சொல்ல விரும்பும் அனைத்தையும் சேர்த்து ஒரு நடிகனின் வாயிலாக வெளியிடுகிருன். ஆகவே, அந் நடிகன் சொல்லுவதாக அமைந்துள்ள சொற்பகுதியிலேயே பல நடிகர்களும் பல சம்பவங்களும் பல உணர்ச்சிகளும் தோற்றமளிக்கின்றன. ஆகவே, இச் சொற்பகுதியைக் கூர்ந்து பார்த்தோமாகுல் பல நடிகர்கள் மேடைக்கு வராமல் அமைந்திருப்பினும், ஒரு நாடகத்திற்கு இருக்க வேண்டிய முக்கிய அம்சங்கள் யாவும் இதில் இருக்கக் காணலாம். இதுவே ஒரு சிறு நாடகம் என்று கூறினுலும் பொருந்தும் ; ஆகவே, ஒரு நாடகத்தின் பகுதியாக அமைந்ததன்று. இதுவே ஒரு தனி நாடகம் போன்றமைவது. இவ்வகை நாடகம் எழுதுங் கவிஞனின் ஆற்றலும், அறிவும், நடிகத் திறனும் சாதாரண நாடகாசிரியர்களுடையதை விடச் சிறந்திருக்க வேண்டும். ஆகவே 'ஒரு நடிக நாடகம்' என்பது நாடகத்தின் ஒரு மேலான (ஆனுல் அதை சிருஷ்டிப்போனுக்குக் கடினமான) வகை.

பேச்சும் நடிப்பும் சேர்ந்து அமைவது ஒரு நாடகம். அதில் வெகு சில இடங்களிலேதான் தனிமைப் பேச்சுகள் இருக்கக் காணலாம். நடிப்பிலும் பேச்சிலும் வெளிப்

படுத்த முடியாத பெருங்கருத்துக்கள் பல நாடகாசிரியரின் உள்ளத்தில் எழும். ஆனால் இவ்வெண்ணச் சுழல்களைத் தெளிவாக வெளிப்படுத்த வேண்டிய இடங்களில் நாடகாசிரியர்கள் அடிக்கடி தோற்றுப் போகிறார்கள். இங்ஙனம் ஒருவன் சொல்லையும் செயலையும் வெளியிட நாடகம் சிறந்த சாதனமாக இருப்பதுபோலவே, ஒருவனுடைய எண்ணங்களை வெளியிட ஒரு நடிக நாடகம் மிகவும் உதவியாக அமைகிறது. ஆகவே, சாதாரண நாடகங்களைவிட இதில் கவிஞனை அதிகமாக அறிய முடியும். ஒரு நாடகமென்றால் பல சமபவங்களையும் பல செய்கைகளையும் ஒரு கருத்துக்கேற்ப அமைத்து, அந்த ஒரு கருத்தைத் தெளிவாக வெளியிட முயல்கிறான் ஆசிரியன். இதற்கு நேரிடையாகக் கவிஞன் ஏதேனுமொரு கருத்தை மனத்திலிருத்திக் கொண்டு, அதை விளக்கும் வகையில் சில சம்பவங்களையும் சில மனிதர்களையும் சில உணர்ச்சிகளையும் சிருஷ்டிக்கிறான் ஒரே பாத்திரத்துடன் அமையும் நாடகத்தில். ஆகவே, கவிஞன் இவ்வகைச் சொற்பகுதியில் கூறிவருவது ஒரு கருத்து. அதை விளக்கி விரித்துரைக்க அவனுக்குச் சுதந்திரமிருக்கிறது. இவ்வளவு சுதந்திரமும் தன் நோக்கைப் புகுத்த இடமும் கிடையாது சாதாரண நாடகங்களில்.

ஒரே நடிகரைக் கொண்டுள்ள நாடக வகையைச் சிறப்பாக முயன்று பண்படுத்தியவர்கள் ஆங்கில நாடகாசிரியர்களும் கவிஞர்களும். இங்கிலாந்தில் 19-ம் நூற்றாண்டில் **ப்ரௌனிங்** (Browning) என்ற ஒரு பெருங் கவிஞன் இருந்தான். அவன் பல நல்ல பாட்டுக்களை எழுதிப் போனான். அவன் எழுதிய நடிக நாடகங்களில் ஒன்றை மாத்திரம் பார்ப்போம்.

இத்தாலி நாட்டில் ஒரு திறமை மிகுந்த ஓவியக்காரன் இருந்தான். அவன் பெயர் **ஆண்ட்ரியா.** அவன் **லுக்ரீஷியா** என்ற ஒரு பெண்ணைக் காதலித்தான். அவள் இதற்கு முன்பே மற்றொருவனை நேசித்து வந்தாள். இது தெரிந்திருந்தும் அவனுக்கு லுக்ரீஷியா மீதிருந்த காதல் குறையவில்லை. அவளுக்காகத் தன் கையிலிருந்த

பணத்தையெல்லாம் அவன் பறிகொடுத்தான். போதாத தற்குப் பிரான்சு மன்னர் ஓர் ஓவியமெழுதும்பொருட்டு அவனுக்குக் கொடுத்திருந்த பணத்தை யெடுத்துக் கொண்டு, அவருக்குத் தெரியாமல் நாட்டைவிட்டு ஓடி வந்து விட்டான். லுக்ரீஷியாவின் காதலனுக்காகத் திருடி வந்த பொருளில் பெரும் பகுதியைச் செலவிட்டான். லுக்ரீஷியா பராமுகமாயிருந்தாலும் அவளைப் பின் பற்றிச் செல்வதும், அவளுடன் பேசுவதுமாக இருந் தான் அவன். இவ்வளவும் எதற்காக? லுக்ரீஷியா தன்னைப் பார்த்து ஒரு புன்முறுவல் பூத்தால் போது மென்றும், அவளது காதலைத் திருப்தி செய்தாலாவது அவள் தன்னிடம் அன்பு காட்டமாட்டாளா என்றும், இப்படியாக லுக்ரீஷியாவின் காதல் அலையில் சிக்கி மோதுண்டவனுய்ப் பரிதாப நிலையில் தோற்றமளிக்கிருன் ஆண்ட்ரியா.

ஒரு நாள் பொழுது சாயும் வேளையில் அவன் தன் அறையில் லுக்ரீஷியாவுடன் இருப்பதாக நமக்கு எண்ண மூட்டுகிருர் கவிஞர். ஆண்ட்ரியா தனக்குத்தானே பேசிக் கொள்வது போன்று அமைந்துள்ளது இப்பாட்டு முழு வதும்; "நான் உன்னை எவ்வளவு காதலிக்கிறேன் தெரியுமா? உனக்காக அல்லவா என்னை ஆதரித்துவந்த அரசனுக்கும் வஞ்சனை செய்துவிட்டு இங்கே ஓடிவந் தேன்! உன் காதலனு அங்கே காத்திருப்பது? அவனைக் கண்டவுடன் போய்விடப் பார்க்கிருயே! அவனுக்கு வேண்டிய பணத்தையும் கொடுக்கிறேன். இன்னும் கொஞ்சநேரம் என்னுடன்கூட இருக்கமாட்டயா! என் அருகில் கொஞ்சம் உட்கார்ந்திருந்தாலும் போதும். இந்த ஜன்னலின் வழியாகப் பார். என்ன இயற்கைத் தோற்றங்கள்! இவ்வளவு அழகையும் பருகி அதை ஓவி யத்தில் தீட்ட என்னுல் முடியாதா! எவ்வளவு நல்ல படங்களை வரைந்திருக்கிறேன்! வர்ணந் தீட்டுவதில் நிகரற்றவனென்று யான் பெயர் பெறவில்லையா? எத்தனை பெரியவர்கள் எனது ஓவியத்திற்காக என்னைப் பெரு மதிப்புடன் நடத்திவந்தார்கள்! அத்தனைச் செல்வாக்

கையும் துறந்து இங்கு வந்தது எதற்காக? உன் கொடுமைதான் என்னே! இப்பொழுதும் இதோ என் ஓவியத்தைத் தோற்றுவிக்கிறேன் பார். படமெழுதச் சரியாக உட்கார்ந்துகொள். சிறிது புன்முறுவல் காட்டு. இதோ வரைந்து விடுகிறேன் உன்னைப் போலவே ஒரு படம். அதற்கு உயிரும் கொடுத்து விடுகிறேன்.........'' என்று சொல்கிறது பாட்டு. இதை நடிக்க வேண்டுமானால் ஆண்ட்ரியா இருந்தால் போதும். அவன் சொல்வதாக அமைந்துள்ள கவியின் சொற்களைச் சரியாக உணர்ச்சி ததும்பத் தக்க முகக் குறிப்புகளோடு சொன்னால் போதும். நம் மனக்கண் முன்னால் இத்தாலி வந்து நிற்கும். லுக்ரீஷியாவின் கட்டழகும், முகச்சோபையும் குறும்பு தோன்றும் நோக்கும் எளிதில் தெரியும். ஆண்ட்ரியாவின் அறைக்கருகிலுள்ள இயற்கைப் பொருள்கள் தெரியும். அவன் உள்ளத்தில் எழும் காதல் அலைகளின் ஓசை முழங்கும். அவன் மனமுருகிச் சொல்லும் சோக வார்த்தைகளின் உண்மை புலப்படும்.

நாடக மேடையின்மீது வரும் மனிதர் எண்ணிக்கையில் ஒருவரேயாயினும், கவி தமது சொல்லோவியத்தின் திறனால் நம் கண்ணுக்குப் பல பொருள்களைக் காட்டி, நம் செவிக்குப் பல ஓசைகளையூட்டி, நம் மனத்தில் பல எண்ணச் சுழல்களை எழுப்புகிறார். கவி தன் மனத்தில் நினைப்பதையெல்லாம் நாமும் நினைக்கச் செய்கிறார். இதற்குப் பாட்டின் சந்தம் நன்கு அமையவேண்டும். சொற்கள் அழகுடையனவாகவும் தகுந்த இடங்களில் வைக்கப்பட்டும் இருக்கவேண்டும். இவற்றையெல்லாம் விட முக்கியமாகக் கவிஞன் காணும் கனவு பல உணர்ச்சிகளையும் பல காட்சிகளையும் பல நாதங்களையும் எழுப்புந் திறனுடையதாக இருக்கவேண்டும். இக்கனவின் சொல்லோவியமே ஒரு நடிக நாடகம். இத்தகைய சிறு நாடகங்கள் தமிழ்மொழியில் நிரம்ப எழுதப்பெறல் வேண்டும். அவற்றை நன்கு படித்தறிய அனைவரும் முயலவேண்டும். நடிப்புத்திறன் உடையோர் இக்கலைப் பகுதியைச் சிறப்

புறப் பண்படுத்தித் தமிழன்னையின் செல்வக் களஞ்சியத்தை மேன்மேலும் நிரப்பவேண்டும்.

### குறிப்புரை

விளைவு - பயனான நிகழ்ச்சி. உள்ளமை - இருப்பது. சம்பவங்கள் - நிகழ்ச்சிகள். கூற்று - பேச்சு. அபத்தம் - பொருளற்றது. நோக்கு - நோக்கம். பராமுகம் - அலட்சியம். புன்முறுவல் - புன்சிரிப்பு. சொல் ஓவியம் - சொல் சித்திரம்.

### பயிற்சி

1. எதிர்த்தொடர் தருக: கடினமான, வெளிப்படுத்த, நேரிடை, சுதந்திரம், இயற்கை.
2. பிரித்துக் காட்டுக: சிறிதளவு, சொற்பகுதி, நன்கறிய, நிகரற்றவன்.
3. வாக்கியங்களில் அமைக்க: சுலபமன்று, சேருவதாயும் சேராததாயும், தன்னந்தனியாக, பராமுகம், மேன்மேலும்.

### வினாக்கள்

1. கலை எத்தனை வகைப்படும்? நாடகத்தின் வகைகள் எவை?
2. நடிப்போரின் எண்ணிக்கையை அனுசரித்து நாடகத்தை எவ்வாறு பிரிக்கலாம்? அவற்றின் அமைப்பு எவ்வாறிருக்கும்?
3. நடிக நாடகம் என்பதிலுள்ள அருமைப்பாடு யாது?
4. ப்ரௌனிங் என்ற கவிஞர் யரர்? அவர் எதில் திறமையுள்ளவர்?
5. ப்ரௌனிங் எழுதியுள்ள காதல் நாடகத்தின் அமைப்பு எத்தகையது?

### கட்டுரையாக்கம்

1. ஆண்டிரியா தனிமையில் லுக்ரீஷியாவை எண்ணிச் சொல்லியதைச் சுருக்கி வரைக.
2. நடிக நாடகத்தில் வந்துள்ள காதலர் இருவரையும் இரு நடிகர்களாக அமைத்து, அவர்கள் உரையாடுவதுபோல் 'உரையாடல்' அமைப்பில் எழுதுக.

13672

7e
R572
661

# TAMIL ILAKKIYA THIRATTU

FOR FORM IV—SPECIAL STUDY

(Prepared as per 1952 Syllabus)

BY

P. DORAIKKANNU MUDALIAR, M.A., L.T.,

AND

VIDWAN S. V. VARADARAJA IYENGAR, M.O.L.

T. G. GOPAUL PILLAI

PUBLISHERS

TEPPAKULAM TIRUCHIRAPALLI ||| 2/27, BROADWAY G. T. MADRAS

COPYRIGHT] 1955 [PRICE RS. 0-12-0